இது
# நம்தேசம்


'Registered in the department of posts of Srilanka under No.QD/173/News/2014'

பார்வை-02 மார்ச், 08.2015 வியூகம்-05 பக்கங்கள்-24 விலை-ரூ.30.00

Web - www.ithunamthesam.com
Email - ithunamthesam@gmail.com




# மௌனம் உடைத்தது யாழ். பல்கலை





## தமிழின அழிப்புக்கு எதிராக பக்கசார்பற்ற விசாரணை!



# தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் வருடாந்த மாநாடு




தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகளின் வருடாந்த மாநாடு 28.02.2015 காலை 10.30 மணிக்கு கரவெட்டி தெற்கு மேற்கு பிரதேச சபை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

மேற்படி நிகழ்வு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பிரச்சாரப் செயலாளரும், காரைநகர், வேரப்பிட்டி சரஸ்வதி வித்தியாலயத்தின் அதிபருமான திரு சிவகுரு இளங்கோ அவர்களது தலைமையில் இடம்பெற்றது.

ஆரம்ப நிகழ்வாக கட்சிகளின் கொடிகள் ஏற்றப்பட்டது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் கொடியினை கட்சியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் கொடியினை கட்சியின் தலைவர் இ.எ.ஆனந்தராஜா அவர்களும் ஏற்றி வைத்தனர்.

அதனைத் தொடர்ந்து தமிழ் மக்களது உரிமைப் போராட்டத்தில் உயிர் நீத்தவர்களுக்காக ஈகைச் சுடரேற்றப்பட்டு அக வணக்கம் செலுத்தப்பட்டது. ஈகச் சுடரினை மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த திருமதி புவனேசசிங்கம் சரஸ்வதி அவர்கள் ஏற்றிவைத்தார்.

அடுத்த நிகழ்வாக தமிழ்த் தாய் வாழ்த்து இடம்பெற்றது. தமிழ்த் தாய்வாழ்த்தினை யாழ் வடமராட்சி மத்திய மகளீர் கல்லூரி மாணவிகளான செல்வி பாஸ்கரன் றித்திகா மற்றும் இரத்தினேஸ்வரன் யஸ்மியா ஆகியோர் பாடினர்.



சிறப்புரை ஆற்றியவர்கள்:

1. கஜேந்திரகுமார் பொன்னம்பலம், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளரும்.
2. தர்மலிங்கம் சுரேஸ்: மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர்.
3. இ.எ.ஆனந்தராஜா, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவரும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உப தலைவர்
4. வவுனியா மாவட்டம் சார்பாக தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உப தலைவர் சிவபாதம் கஜேந்திரகுமார்
5. திருமதி விவேகானந்தன் இந்திராணி முல்லைத்தீவு மாவட்டம் சார்பாக
6. இராஜகோன் ஹரிகரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர்.
7. விஸ்வலிங்கம் திருக்குமரன் சட்டத்தரணி
8. செல்லையா, இராசையா தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி அம்பாறை மாவட்ட அமைப்பாளர்



**நன்றியுரை:**

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன்.

மேற்படி தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி - அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சிகள் இணைந்து நடாத்திய வருடாந்த மாநாட்டில் வெளியிடப்பட்ட தீர்மானங்கள்.

## தீர்மானங்கள்

**1. சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்ட இரு தேசம் ஒரு நாடு என்ற எமது கொள்கையை அடைய எமது கட்சியை கிராமம் தோறும் கட்டமைப்புக்களை நிறுவி புலம் பெயர்ந்து வாழும் எமது உறவுகளையும் தமிழக உறவுகளையும் ஒன்றிணைத்துப் போராடுவோம்.**

**2. தமிழ் மக்களுக்கு எதிராக கட்டவிழ்த்து விடப்பட்ட, கட்டவிழ்த்து விடப்பட்டுக்கொண்டிருக்கின்ற பாரிய இனஅழிப்புக்கு எதிராக சர்வதேச பக்கச் சார்பற்ற விசாரணையை நடாத்தக்கோரி எமது செயற்பாடுகளை உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் பாரியளவில் முன்னெடுப்போம்.**

**3. கணாமால் போனவர்கள், அரசியல் கைதிகள் என்பவர்களின் விடுதலையை வலியுறுத்தியும், நில அபகரிப்புக்கு எதிராகவும் பன்முகப் படுத்தப்பட்ட போராட்டங்களை முன்னெடுப்போம்.**

**4. வடக்கு கிழக்கு இணைந்த தமிழர் தாயகத்தில் தமிழ்த் தேசிய பேரவையை நிறுவி தமிழ் மக்களை நிர்வாகிக்கும் ஒரு நிர்வாகக் கட்டமைப்பை உருவாக்குவோம்.**

**5. போரினால் பாதிக்கப்பட்ட அவயங்களை இழந்த எமது மக்களின் வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்ப புலம்பெயர்ந்த மக்களின் உதவியுடன் செயற்திட்டங்களை முன்னெடுப்போம்.**

**6. புலம்பெயர்ந்து வாழும் தமிழ் மக்களின் பேராதரவுடன் வடக்கு கிழக்கில் அபிவிருத்திப் பணிகளை முன்னெடுப்பதற்கு எமக்கான பொருளாதாரக் கொள்கையை வகுத்து செயற்படுவோம்.**

**7. எமது தேசத்திற்கான கல்விக் கொள்கை, விளையாட்டுக் கொள்கை, கலைபண்பாட்டுக் கொள்கை சுகாதாரக் கொள்கை என்பவற்றை உருவாக்கி முன்னெடுப்போம்.**

## செய்தித் துளிகள்

### குற்றவாளிகளே நீதிபதிகள் – மன்னார் ஆயர் தெரிவிப்பு

குற்றவாளிகளே நீதிபதிகளாக மேற்கொள்ளும் விசாரணையில் நம்பிக்கை இல்லை எனவும் அதனை ஒரு போதும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை எனவும் மன்னார் ஆயர் இராயப்பு ஜோசப் தெரிவித்தார்.

### முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி

இறுதி யுத்தத்தில் படுகொலை செய்யப்பட்ட மக்களை நினைவுறுத்தி முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் நினைவுத்தூபி அமைக்க வடமாகாண சபையில் தீர்மானம் நிறைவேற்றம்.

### வடமராட்சி மீனவர்கள் மீது இந்திய மீனவர்கள் தாக்குதல்

வடமராட்சி கிழக்குப் பகுதியில் அத்துமீறி மீன்பிடி நடவடிக்கையில் இந்திய இழுவைப்படகு மீன்கள் ஈடுபட்டு வலைகளை அறுத்து நாசம் செய்துள்ளதுடன் மூன்று மீனவர்கள் மீதும் தாக்குதல் மேற்கொண்டுவிட்டு சென்றுள்ளனர்.

### வீரர்களின் போர் ஆரம்பம்


வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயா கல்லூரிக்கும் தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரிக்கும் இடையிலான 15 ஆவது பெரும் துடுப்பாட்டப் போட்டி கடந்த வெள்ளிக்கிழமை ஸ்கந்தவரோதயாக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

### "வென்றது இலங்கை பணிந்தது பங்களாதேஷ்"

11ஆவது உலகக் கிண்ண கிரிக்கெட்போட்டியில் இலங்கை அணி 92 ஓட்டங்களால் பங்களாதேஷ் அணியை வெற்றிகொண்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை இடம்பெற்ற பேட்டியில் இலங்கை அணி டில்சன், சங்ககாரவின் சதத்துடன் மொத்த ஓட்ட எண்ணிக்கை 332 பெற்றது. பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பங்களாதேஷ் அணி சகல விக்கெட்டுக்களையும் இழந்து 248 ஓட்டங்களுடன் தோல்விஅடைந்தது.

# உணர்ச்சிக் கவிஞர் காசியானந்தன் விடுத்துள்ள வாழ்த்துச்செய்தி



தமிழ்த் தேசிய மக்கள் முன்னனி தன்னுடைய ஐந்தாவதாண்டு நிறைவு விழாவைக் கொண்டாடுவதையிட்டு மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன். பல்லாண்டு காலம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பணி தொடர வேண்டும். தமிழ்த் தேசத்தின் இறைமை அங்கீகரிக்கப்படுகின்றவரை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பணி தொடர வேண்டும் என்று மனம் நிறைந்து வாழ்த்துகின்றேன்.

பிரித்தானியர் தமிழீழத்தினுடைய இறையாண்மையை விட்டுச் சென்றார்கள். அதை சிங்களவர்கள் பற்றிக் கொண்டார்கள். அந்த இறையாண்மை தமிழர்களிடமே இருக்கின்றது. தமிழீழம் தமிழர்க்குரியது என்று வாதாடி வந்தார் தந்தை செல்வா. அதே போன்றுதான் தலைவர் பிரபாகரன் அவர்களினுடைய தலைமையில் அந்த மண்ணில் நடந்த போராட்டத்தில் ஐம்பத்து ஐயாயிரம் விடுதலைப்புலிகள் களத்தில் தமிழீழம் எங்கள் தாகம் என்று உறுமித்தான் - முழங்கித்தான் தங்களை உயிர்க்கொடையாக்கி அந்தக் களத்தில் மாவீரம் படைத்தார்கள்.

ஆனால் இன்று தமிழர் பிரச்சினையைதீர்க்க13ஆம்திருத்தச்சட்டம்கிடைத்தால் மட்டும் போதும் என்று கொட்டாவிவிடுகின்ற ஒரு கொடுமையான காட்சியைப் பார்க்கிறோம். அது மட்டுமல்ல அந்த மண்ணில் சின்னச் சின்ன அரசியல் நகர்வுகளைச் செய்தால் போதும் என்று அந்தத் தரப்பினர் கருதுகிறார்கள். இராணுவம் வெளியேறிய நிலங்களை மட்டும் நாம் பாதுகாத்துக் கொண்டால் போதும் என்று அவர்கள் நினைக்கின்றார்கள். இந்த அற்ப சலுகைகளுக்காக மட்டும் ஈழவிடுதலைப் போராட்டம் வளர்க்கப்படவில்லை.

இலங்கையில் தனித் தமிழீழத்தின் விடுதலை கேட்பது சட்டத்திற்கு, அரசியல் சாசனத்திற்கு எதிரானதாக இருக்கலாம். அது தேசத்துரோகமாக இருக்கலாம். ஆனால் தமிழீழம் எங்கள் தாயகம் என்று சொல்வதை எந்த நாட்டினதும், எந்தச் சட்டமும் தடைசெய்யமுடியாது.

இந்திய அரசியலமைப்பில் காஸ்மீர் இருக்கிறது. பிரிட்டிஸ் அரசியலமைப்பில் ஸ்கொட்லாந் இருக்கிறது . ரஸ்யா அரசியலமைப்பில் செச்சிணியா இருக்கிறது. தமிழீழம், இலங்கை அரச அமைப்பில் இல்லை. முதலில் அந்த அரசியலமைப்பு தமிழீழத்தை ஒப்புக்கொள்ளவேண்டும் என்ற போராட்டத்தை தமிழ் தேசிய தலைமைகள் முன்னெடுக்கவேண்டும். இந்த வீச்சான விடுதலைப் போராட்டத்தின் தொடர்ச்சி அந்த மண்ணில் நிகழவேண்டும். தமிழ்த் தேசியமக்கள்முன்னணிஅந்தஉணர்வோடு போராட்டங்களை நடத்தி வருவதை நான் அறிவேன். அவர்கள் கொள்கையிலிருந்து நழுவவில்லை என்பதை நான் தெளிவாக அறிவேன். கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களுடைய தந்தை குமார்பொன்னம்பலம் தன்னை தமிழீழ விடுதலைக்காக முழுமையாக கொடை தந்தவர். அவருடைய பிள்ளை கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைவராக இருக்கிறார். அந்த மண்ணில் விடுதலை மூச்சோடு இயங்கி வருகின்ற கஜேந்திரன் அதன் பொதுச்செயலாளராக இருக்கிறார்.

தமிழீழத்தில்வாழுகின்றஇளைஞர்கள், மாணவர்கள் நம்பிக்கையோடு தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை எதிர்பார்க்கிறார்கள். அவர்கள் எதிர்காலத்தில் இந்த அமைப்பு தங்களுக்குப் பக்கத்தில் நிற்கும் தங்களுடைய கொள்கையை முன்னெடுத்துச் செல்லும் களமாகும் என்று நம்புகிறார்கள். இந்த நேரத்தில்தான் மிக முக்கியத்துவம் வாய்ந்த காலகட்டத்தில் தான் நான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை மனமார வாழ்த்துகின்றேன். அவர்களுடைய 5 ஆம் ஆண்டு நிறைவில் அவர்களுடைய பணி தொடரவும் தமிழீழ மக்களுடைய விடுதலைப் பயணம் தொடரவும் வேண்டும். இப்படி ஏன் சொல்கிறேன் என்றால் அந்தப் பயணம் நின்று விடுமோ, அந்தப் பயணம் திசைமாறி விடுமோ, அந்தப் பயணம் குழம்பி விடுமோ என்பதைப் போன்ற ஒரு சூழ்நிலையை அந்த மண்ணில் உருவாக்கி கொண்டிருக்கின்றார்கள். காலம் காலமாகத் தமிழீழ மக்கள் புறக்கணித்து வந்த இலங்கையின் சுதந்திர தினக் கொண்டாட்டத்தில், தமிழ் மக்களின் தலைமைகள் என்று சொல்லிக் கொள்கிறவர்களே கலந்து கொள்கிறார்கள்.

அந்த மண்ணில் தமிழர்கள் புறக்கணித்த சிங்களக் கொடியைத் தங்கள் கையில் தாங்கி உலாவருகிறார்கள். உரிமைகள் அனைத்தையும் இழந்து கொண்டிருக்கின்றதொரு கால கட்டத்தில் தான் நான் இந்த தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியை வாழ்த்துகின்றேன்.

பல்லாண்டு நீங்கள் வாழ்க..!
உங்கள் பணி தொடர்க வாழ்க..!
வாழ்க வாழ்க..!

# ஐக்கிய நாடுகளின் மனித உரிமை ஆணைக்குழுவின் இலங்கை மீதான அறிக்கை பிற்போடல் / தாமதப்படுத்தல்

**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமும், தமிழ் பொதுஜன அமைப்புக்களும்**

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கூட்டத் தொடரில் வெளியிடுவதற்கு முன்னர் தீர்மானிக்கப்பட்டிருந்த இலங்கை மீதான மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையைத் தாமதப்படுத்தி அதனைச் செப்டெம்பர் 2015 இற்குப் பிற்போட்டமை தொடர்பில் எமது ஆழ்ந்த விசனத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம். பாதிக்கப்பட்டவர்கள் என்ற வகையில் இவ் அறிக்கை திட்டமிட்டபடி வெளிவரவேண்டும் என்பதையே நாம் விரும்புகின்றோம்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான தற்போதைய அரசாங்கம், இலங்கையில் இடம் பெற்ற உள்நாட்டுப் போரின் போது இழைக்கப்பட்ட பாரிய கொடுமைகள் தொடர்பில் விசாரணை மேற்கொள்வதற்கு உள்நாட்டுப் பொறிமுறை ஒன்றை உருவாக்கும் என்ற நம்பிக்கையில் அறிக்கை பிற்போடப்படுவதைத் தாங்கள் சிபார்சு செய்துள்ளதாக நாம் புரிந்து கொள்கின்றோம்.

அரசாங்கத்தின் நடைமுறையில் உள்ள நிர்வாகக் கட்டமைப்பையும் (யுத்தத்திற்கு தீவிர பங்காற்றியவர்கள் உட்பட) கடந்த கால உள்நாட்டு விசாரணைப் பொறிமுறைகள் நீதியை நிலைநாட்டத் தவறியமை தொடர்பானவரலாற்றைக்கருத்தில்கொண்டு நோக்கும் போது, இந்த உருவாக்கப்படவல்ல எந்தவொரு உள்நாட்டுப் பொறிமுறையிலும் எமக்கு நம்பிக்கை இல்லை என்பது தெளிவு. இலங்கையில் அரசியல் ஆதிக்கம் செலுத்துகின்ற சிங்கள பௌத்தத் தலைமைகள் தொடர்பிலான எமது நீண்ட கால அனுபவத்தில், இலங்கை ஆயுதப் படைகளைச் சார்ந்த அங்கத்தவர்கள் எவ்விதக் குற்றங்களுக்காகவும் உள்நாட்டில் தண்டிக்கப்பட மாட்டார்கள் என்பதை நாம் அறிவோம். உள்நாட்டு விசாரணை மீதான சர்வதேச விசாரணை வெறும் கால விரயத்துக்கு மட்டுமே வலுக்கோலும் என்பதையும் அறிவோம்.

தமிழ் மக்கள் பெரும் எண்ணிக்கையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்கு வாக்களித்தமை மூலம் மகிந்த ராஜபக்ஸவுக்கு எதிரான தமது உணர்வுகளை வெளிப்படுத்தியுள்ளனர். ஆட்சி மாற்றத்தினூடாக பாரியதொரு மாற்றம் ஏற்படும்என்றஎதிர்பார்ப்பில்நாம்வாக்களிக்கவில்லை. ஜனாதிபதி சிறிசேன ஆட்சிப் பொறுப்பேற்ற முதல் ஒருமாத காலப்பகுதி தமிழ் மக்கள் இந்த அரசாங்கத்திடமிருந்து புதிய மாற்றங்கள் எதனையும் எதிபார்க்க முடியாது என்பதை நிரூபித்து விட்டது.



நாம் எதிர்நோக்கும் பிரச்சினைகளான இராணுவமயமாக்கம், மக்கள் தம் சொந்தக் கிராமங்களிற்குக் குடியேறல்,காணாமல் போனோர் மற்றும் சட்ட விரோத தடுப்புக் காவல் சம்பந்தப்பட்ட இப்பிரச்சினைகள் தொடர்பில் சிறிசேன அரசாங்கத்தால் குறிப்பிடக் கூடிய எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படவில்லை. ஜனாதிபதியால் முன்மொழியப்பட்ட 100 நாள் நிகழ்ச்சித் திட்டத்தில் இப்பிரச்சினைகள் உள்ளடக்கப்படவுமில்லை. அரசியற் தீர்வுக்கான பேச்சு வார்த்தை ஒன்றையேனும் சிறிசேன அரசு மேற்கொள்ளவில்லை.

ஆகவே மனித உரிமைகள் ஆணைக்குழுவினர் இலங்கை மீதான தம் விசாரணையை ஆரம்பிக்கவும் தகவல் தருவோருக்குப் போதிய பாதுகாப்பும் சர்வதேச விசாரணையாளரகள் மேற்கொள்ள இலங்கை வர அனுமதி கோரியும் இதன் மூலம் ஒரு முழுமையான, முறையான அறிக்கை ஒன்றைத் தயாரிக்க உதவும் வகையிலும், ஆணைக்குழு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டதை அடுத்து சர்வதேச விசாரணைக்கு இட்டுச் செல்லும் வகையில் அவசியமான நடவடிக்கைகளை ஆரம்பித்து வைக்குமாறு தங்களை வேண்டுகின்றோம்.



## ஒருத்தருக்கும் சொல்லாதைங்கோ.....

- முத்தர் அம்மான் -

பல்கலைச்சமூகம் நடத்தின போராட்டத்தின் மூலம் மீண்டும் மக்கள் தலைமை தாங்கி போராட்டங்களை முன்னெடுப்பது தொடர்பான நம்பிக்கை துளிர்த்திருக்கின்றது. அதிலயும் கூத்தமைப்பின் போலி அரசியலில் முகத்தை அம்பலப்படுத்தும் நிகழ்வாகவும் அப்போராட்டம் அமைஞ்சிட்டுது. தங்கட இரட்டை வேடத்தை பொடியள் கண்டு பிடிச்சுட்டாங்கள் எண்டு முகம் கறுத்துப்போய் ஒரு ஓரமாய் நிண்டினம். முகம் செத்துப்போய் நாய்க்குட்டிகள் போல பின்னால் போன அந்த தலைவர்கள் முகம் இப்ப கண்ணுக்குள்ள நிற்கின்றது. அங்க ஐ.நா தீர்மானத்தை பின்போடுறதில எந்த ஆட்சேபனையும் இல்லை எண்டு பின்கதவு எம்பியும் சிங்கக் கொடி வீரனும் ஒப்புதல் கொடுத்த பிறகு – நல்ல பிள்ளையள் மாதிரி ஐ.நா அறிக்கையை பிற்போடக்கூடாதெண்டு அகிம்சைப் போராட்ட வீரன் தலைமையில ஒரு கூட்டம் ஓவி விளம்பரத்துக்கு அலையுதுகள் இங்க. பொடியள் அந்தக் கூட்டத்தில பின்கதவு எம்பி வருவாரா வருவாரா எண்டு விசாரிச்சபடி தான் இருந்தவங்கள். வந்தா அன்பா அவரோட பேசவேணும் எண்டு ஆவலாய் இருந்தவங்கள். நல்ல வேளை வரவில்லை. இனியும் அவையின்ர பருப்பு வேகாது பாருங்கோ.

வடமாகாணசபை அமைச்சர்களது நடவடிக்கைகள் தோல் இருக்க சுளை விழுங்கின பூதங்கள் மாதிரியான கதைகள் வெளிச்சுக் கொண்டிருக்குது. ஆளாளுக்கு தனி ஆவர்த்தனம் வாசிக்கின்றதாக கேள்வி. ஏற்கனவே சொகுசு வாகனம் வாங்கினதில் உள்குத்தெண்டு கதைக்கிறாங்கள். அதிலயும் பொட்டுக் கேடுகளை வெளியால தெரியாதவாறு மூடி மறைக்கின்றதில பேப்பர் மேல்மட்டங்களை கவனித்துப்போடுறதாகவும் தகவல்.சரி சரி கத்திரிக்காய் முத்தினால் சந்தைக்கு வந்து தானே ஆகவேண்டும்.

சமயங்களில சொல்லப்படுகின்ற விடயங்களில மத ரீதியான நம்பிக்கைகள் என்றதற்கப்பால் ஆசை நிறைவேறாமல் செத்த சீவன்கள் அந்தரித்து திரியுமெண்டு அம்மா முந்தி அடிக்கடி சொல்லுறவா.பல்கலை சமூகத்தின்ர போராட்டத்தை நல்லூரில முடிக்கின்றதென்று திட்டம் போட்டிருந்த போதும் திலீபனின் தூபியிலதான் அதனை முடிக்கின்றதென்ற எந்தவொரு திட்டமும் இருக்கவில்லையாம். அந்த ஆன்மாக்கள் இழுத்துக்கொண்டு போனது போல அலையென திரண்ட சனத்திரள் தான் முன்நகர்த்தி அங்கு கொண்டு போய் சேர்த்ததாம்.சிலதை நம்பித்தான் ஆகவேண்டியிருக்குப்போல.

தேர்தல் தொடங்கினால் கொழும்பில இருந்து ஆட்களை களம் இறக்கின்றது தமிழரசு பாரம்பரியம் பாருங்கோ. இப்ப புதிசா தமிழ் பேராசிரியர் ஒருத்தரை தீவகத்தால களமிறக்க சொல்லி சிங்கக்கொடி வீரன் ஓடர் போட்டிருக்கின்றாராம். அவரது ஓடரை சிரமேற்கொண்டு முன்னாள் பல்கலை வித்துவான்கள் சிலர் கூடி கூட்டம் போட்டு கடிதம் எழுதியிருக்கினமாம். ஏற்கனவே ஒதுக்கிவழங்க சீற் இல்லாமல் கூத்தமைப்பு சிதறப்போகின்றதென்றது அம்பலமாகியிட்டுது. இப்ப இதுவென்ன புதுக்கன்றாவியெண்டு மாவையர் தலையில அடிச்சுக்கொண்டிருக்கின்றதாக கேள்வி.

சுமந்திரனின்ர கொடும்பாவி எரிப்பினையடுத்து பலரும் முண்டியடித்துக்கொண்டு அண்ணை நாங்களில்லையெண்டுஅவசரப்பட்டுஅறிக்கை விட்டுக்கொண்டிருக்கினம். இன்றும் சிலரோ தங்களின்ர நாய்குட்டி விசுவாசத்தை வெளிப்படுத்த ஆலாய் பறந்து மாகாணசபையில பேசித்தீர்க்கினம்.பலருக்கும் அடுத்து நாடாளுமன்ற தேர்தல்களத்தில சீற்பிடிக்கின்ற ஆசையோட திரியினமெண்டது வெளியால தெரியுது. உந்த அன்ரனி எண்டவர் தேர்தல் காலத்தில தான்தான் புலிகளின்ர வாரிசு எண்டமாதிரி முழங்கினார். இப்ப என்னடா எண்டா புலிகள் பிடிச்ச பிள்ளையளுக்கு கொடும்பாவி எரிக்கிற கதை கதைக்கிறார் பாருங்கோ. இதை கேட்க முன்னணி காரர் சொல்லுறது தான் ஞாபகம் வருது. என்னெண்டா சில சந்தர்பத்தில தேசியம் பேசுகினம் எண்டதுக்காக இவை தமிழ் தேசியத்துக்கான ஆக்கள் இல்லை. உவை எல்லாரும் சம்பந்தன்ர மறு வடிவங்கள்தான். ஆனால் வேடம் போடுகினம் எண்டு அடிக்கடி சொல்லுறவங்கள். அது உண்மை எண்டு ஆண்டனி நிரூபிச்சுஇருக்கிறார் பாருங்கோ. ஓவர் குரைப்புக்கள் உடல்நலத்திற்கு நல்லதில்ல பாருங்கோ.

பல்கலைச்சமூகத்தைத் தொடர்ந்து இப்ப சிவில் சமூக அமையமும் களம் இறங்கியிருக்கின்றது.மனதார பாராட்டுக்கள்.ஆனால் கையெழுத்து திரட்டிறதை மேல்மட்டங்களோட நிப்பாட்டிப்போடாமல் கிராமங்கள் எல்லாம் கொண்டு போய் சேருங்கோ.பல்கலை சமூகம் அத்தனை மட்டங்களிலயும் போகக்கூடிய வலுவோட இருக்கின்றது.நிச்சயம் அதனால முடியக்கூடிய காரியம். நீண்ட காலமாக தனிச்சு நின்று குரல்கொடுத்து வரும் சிவில் சமூக அமையத்திற்கு தோள்கொடுக்க வேண்டியது அனைவரதும் கடமையுமாகும்.


# அமுதவாக்கு



மகிந்த ராஜபக்சவினதும், கோத்தபாய ராஜபக்சவினதும் உத்தியோக பூர்வ வாசஸ்தலங்களில் காணப்பட்டதாகக் கூறப்படுகின்ற “ இறக்குமதி செய்யப்பட்ட நாய்கள், பறவைகள், குதிரைகள், சுறாமீன்கள் மற்றும் யானைக்குட்டிகள் தொடக்கம் கண்டுபிடிக்கப்பட்ட பல தனிப்பட்ட ஆயுதக் களஞ்சியங்கள் வரை அண்மைக்காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட விவகாரங்கள் ராஜபக்ஸாக்கள் இலங்கை அரசை நாமெல்லோரும் நினைத்துப் பார்க்க முடியாத அளவுக்கு தங்களது தனிப்பட்ட உரித்துப் போன்று பயன்படுத்தியிருக்கின்றார்கள். என்பதை எடுத்துக் காட்டுகின்றன.

**திஸ்ஸராணி குணசேகர**

---



அமெரிக்க ஜனாதிபதியை மோடி "பராக்" என்றே விளித்தார். நெருக்கமான நண்பர்கள் போன்றே அவர்கள் இருவரும் பேசினார்கள். பழகினார்கள் அத்தகையதொரு தனிப்பட்ட நெருக்கத்தை இதற்கு முன்னர் எந்தவொரு இந்தியப் பிரதமருக்கும் உலகத்தவர்களுக்கும் இடையே காணக் கூடியதாக இருந்ததில்லை.

**எம்.பி வித்தியாதரன்**
**இந்தியா ஊடகவியலாளர்.**

---



உலகம் சுற்றும் வாலிபன் மோடி மார்ச் மாதம் இலங்கை போகின்றாராம். முதலில் பாகிஸ்தானிலிருந்து வந்த அகதி எல்.கே. அத்வானியை அங்கு திருப்பி அனுப்பிவிட்டுப் பிறகு இலங்கைத் தமிழ் அகதிகளை இலங்கைக்கு அனுப்பிவைக்கட்டும்.

**வைக்கோ**
**தலைவர் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகம்.**

---



இந்தியா இலங்கைக்கு ஆதரவு அளிப்பதை மாத்திரம் செய்யாது. வெளிப்படையான விசாரணைக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும். அப்போது தான் நியாயம் நிலை நாட்டப்படும்.

**தா. பாண்டியன்**
**இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின்**
**தமிழ்மாநில**

---



உள்ளக விசாரணையில் நம்பிக்கையில்லை என்பதனால் ஐ.நாவை நாடினோம். ஐநாவிடம் நீதியைக் கோருகின்றோம். அவர்கள் எங்களை கைவிட்டுவிட்டதாகவும், ஏமாற்றிவிட்டதாகவும் உணர்கின்றோம்.பிற்போடப்படுகின்ற நீதி மறுக்கப்படுகின்ற நீதியாகும். குற்றம் செய்தவனை எப்படி நீதிவான் ஆக்க முடியும். பாரபட்சமற்ற தூய்மையான உலகம் சார்பான ஒரு அமைப்பு நேரில் வந்து விசாரணை செய்ய வேண்டும்.

**இராயப்பு ஜோசப்**
**மன்னார் ஆயர்**

---



ஈழத்தமிழினம் தம் நிலத்தில் தாமாக வாழ்வதைத் தவிர வேறு எதையுமே கேட்கவில்லை. யாருடைய நிலத்தையும் அபகரிக்கவில்லை ஆனால் எங்கள் நிலம் கணந்தோறும் அபகரிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

**கவிஞர். தீபச்செல்வன்**

---



பொதுப்புத்திக்கு எதிரான மாற்றக்கருத்துக்களைத் தீவிரமாக முன்வைத்த பெரியாரின் திராவிடர் கழகத்திலிருந்து பிரிந்து, திராவிட முன்னேற்றக்கழகமாக உருவாகிய காலத்திலிருந்து தமிழக வரலாறுபற்றியும், தமிழ்ச் சமூகத்தைப் பற்றியும் தி.மு.க முன்வைத்தவை பெரும்பாலும் புனைவுகள் சார்ந்தவையே.

**அ.ராமசாமி**
**இந்திய ஆய்வாளர்.**

---

சினிமா என்கிற வலிமையான ஊடகத்தை அதன் நுட்பத்திற்குரிய சாத்தியங்களுடனோ, ஒரு கலை சாதனமாகவோ அல்லது மக்களின் பிரச்சினைகள் பற்றி உரையாடும் அரசியல் ஆயுதமாகவோ பயன்படுத்தும் பிரக்ஞையும் ரசனையும் கொண்ட சூழல் இங்கு மலரவே இல்லை. அபூர்வமாகச் சில விதிவிலக்குகள் தான் உண்டு.

**சுரேஸ்கண்ணன்**
**சினிமா விமர்சகர்.**

இது நம்தேசம்
தொடர்புகளுக்கான முகவரி: இல.43,3ம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.
மின்னஞ்சல் : ithunamthesam@gmail.com தொ.பே.இல: 021 222 3739
இணையம் : www.ithunamthesam.com

# தமிழ்த் தலைமைகள் மக்களுடனா? ஆதிக்கச் சக்திகளுடனா

தமிழர்களையும் அவர்கள் நடத்தும் விடுதலைப் பயணத்தையும் சர்வதேச சமூகம் கேள்விக்குட்படுத்தும் தருணங்களில் எல்லாம் யாழ்.பல்கலைக்கழக சமூகம் கிளர்ந்தெழும். தாயகம், தேசியம், சுயநிர்ணயம் என்கிற அடிப்படையில் தமிழர்களின் விடுதலைப் பசியை உலகின் காதுகளில் இடித்துரைக்கும்.

சமாதானப் புறா வேடமணிந்து ஆட்சிப்பீடமேறிய சந்திரிகாவின் கொடுங் கோலாட்சிக் காலத்தில் தமிழர்களின் அரணாக இருந்த புலிகளையும் அதன் அரசியல் கோரிக்கைகளையும் பயங்கரவாதம் என்னும் நாமத்தின் கீழ் இலங்கையும் சர்வதேசமும் நெருக்கடிக்குள் தள்ளிக்கொண்டிருந்தவேளையில் தமிழர்களின் கூட்டுக்குரலும் ஓங்கி ஒலிக்கவேண்டிய தேவை எழுந்தது. இதனை உணர்ந்துகொண்ட யாழ். பல்கலைக்கழக சமூகம் உலகமே எதிர்பார்த்திராத அணிதிரட்டல் ஒன்றைச் செய்து தமிழரின் சுயநிர்ணய உரிமை அங்கீகரிக்கப்படல் வேண்டும் என்ற விடயத்தில் எந்தத் தமிழனுக்கும் மாற்றுக்கருத்தில்லை என்பதை பறையறைந்து உலகிற்கு சொன்னது. ஆனால் துரதிஸ்டம் தமிழ்த் தலைமைகள் அன்றும் சந்திரிகாவின் தீர்வுப் பொதி ஒன்றினை தமது தலையில் காவிக் கொண்டிருந்தனர். அன்றும் அவர்கள் மக்களுடன் இருக்கவில்லை.

எனினும் தமிழ் மக்களின் அந்த எழுச்சியும் யுத்தகளத்தில் உண்டான இராணுவ சமபல நிலையும் யுத்த நிறுத்த உடன்படிக்கை ஒன்றினை உருவாக்கியது. 2004 பாராளு மன்றத் தேர்தலில் தமிழ்த் தேசத்தின் இறைமை சுயநிர்ணய உரிமை என்ற கூட்ட மைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்திற்கு வாக்களித்து 22 உறுப்பினர்களை மக்கள் தெரிவு செய்திருந்தனர். ஆனாலும் அந்த தேர்தல் விஞ்ஞாபனத்திற்கும் தமக்கும் சம்பந்தம் இல்லை. அது புலிகளால் தயாரிக்கப்பட்டது என்ற நிலைப்பாட்டையே தமிழ்த் தலைமை சர்வதேச இராஜதந்திர வட்டாரங்களில் வெளிப்படுத்தியது.

சமாதான காலத்தில் தாயகத்திலும் உலகெங்கிலும் தமிழர்கள் பொங்குதமிழராக பேரெழுச்சி கொண்டு சுயநிர்ணய உரிமைக்கான அங்கீகாரத்தினை வலியுறுத்தினர். அதில் எல்லாம் கலந்து கொண்டு தமது வாக்கு வங்கியை பலப்படுத்திக் கொண்ட பாராளுமன்ற அரசியல் தலைமை அந்த மக்களின் சுயநிர்ணய உரிமைக் கோரிக்கை அங்கீகரிக் கப்படல் வேண்டும் என்ற நிலைப்பாட்டைத் தேவையான வேளைகளில் இராஜதந்திர மேசைகளில் வலியுறுத்தவில்லை.

பேச்சு மேசைகளில் புலிகள் சுயநிர்ணய அடிப்படையிலான சமஸ்டிக் கோரிக்கையை வலியுறுத்த அதற்கு நேரெதிராக தமிழ்த் தலைமைகள் அதிகாரப் பகிர்வை ஏற்றுக்கொள்ளத் தயார் என்ற நிலைப்பாட்டை இராஜதந்திர மட்டத்தில் வெளிப்படுத்தியிருந்தன. அதன் விளைவு ஸ்ரீலங்கா அரசின் தமிழ் மக்களுக்கு எதிரான இன அழிப்பு யுத்தத்திற்கு சர்வதேச சமூகம் முழு ஆதரவை வழங்கும் நிலையை உருவாக்கிக் கொடுக்க முள்ளிவாய்க்கால் பேரவலம் நடந்தேறியது.

இலங்கையில் ஆட்சிமாற்றத்தை ஏற்படுத்த தமிழர்களைப் பயன்படுத்திக்கொண்ட மேற்குலகு, தமிழர்கள் மேற்குலகிடம் எதிர்பார்த்த இன அழிப்பிற்கான நீதியை கைவிட்டுள்ளது. இதனால் கொதிப்படைந்த தமிழர்கள் இந்தப் போராட்டத்தில் களமிறங்கினர்.


இந்த இடத்தில் யாழ்.பல்கலைக்கழக சமூகத்தின் அரசியல் செயற்பாட்டுத்தளத்தின் இயல்புகளையும் விளங்கிக்கொள்ள வேண்டும். யாழ். பல்கலைக்கழக சமூகமென்பது தமிழ் மக்களின் அரசியல் அபிலாஷைகளை முன்வைக்கும், அரசியல் கூட்டுப் பிரக்ஞையை பிரதிபலிக்கும் சமூகப் பொறுப்புள்ள நிறுவனமாகச் செயற்படுகின்றது. இந்த சமூகத்தின் இயக்கத்துக்கும் மட்டுப்பாடுகள் உண்டு. அவர்களால் வெளிப்படுத்தப்படும் உணர்வுகளை நேர்த்தியான முறையில் ஐ.நா மன்றம் வரை கொண்டு செல்லவேண்டிய கடமையும் பொறுப்பும் தமிழர்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற அரசியல் தலைமைகளையே சாரும். இங்கு அது நடைபெறுகின்றதா?

இங்கு பல்கலைக்கழக சமூகத்தின் தலைமையில் சர்வதேச விசாரணை வேண்டும், உள்ளக விசாரணை வேண்டாம் போர்க்குற்ற அறிக்கையை உடனே வெளியிடு என்ற கோசம் வானைப்பிளக்கிறது ~ தமிழ்த் தலைமையோ அதற்கு நேரெதிராக உள்ளக விசாரணையை ஆதரிக்கின்றது. இந்நிலை நீடித்தால் தமிழ் மக்களது வாழ்வில் அவலங்களே தொடர்கதையாக இருக்கும்.

பல்கலைக்ழக சமூகத்தின் போராட்டக்கோரிக்கை ஒட்டுமொத்த தமிழ் மக்களது கோரிக்கை என்பதனை ஐ.நா ஏற்று செயலாற்ற வேண்டுமாக இருந்தால், தமிழ் மக்களது அரசியல் தலைமை உள்ளகவிசாரணையை நிராகரிப்பதுடன் சர்வதேச விசாரணை தேவை என்பதனையும் ஐ.நா மன்றுக்கு எழுத்து மூலம் கொண்டு செல்ல வேண்டும். அவ்வாறு மக்களது விருப்பங்களை ஏற்றுச் செயற்படக்கூடிய மாற்றுத் தலைமையை உருவாக்க தமிழ் சமூகம் முன்வரவேண்டும்.

தமிழர்கள் சிந்திக்கவேண்டிய காலம் இது..

# இனப்பிரச்சினை என்பது என்ன?



தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் பொதுச் செயலாளருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்கள் கட்சியின் 5 ஆவது தேசிய மாநாட்டில் ஆற்றிய உரை

இலங்கைத்தீவில் இனப்பிரச் சினை என்றால் என்ன என்பதனை நாங்கள் சரியாக விளங்கிக் கொள்ள வேண்டும். ஏனெனில் எங்களுடைய பிரச்சினை என்ன என்பதை நாங்கள் சரியாக அடை யாளப்படுத்தாவிட்டால் அந்தப் பிரச்சினைக் குரிய தீர்வு என்ன என்பதையும் நாங்கள் ஒருபோதும் சரியாக அடையாளப்படுத்த முடியாது.

இதனை விளங்கிக் கொண்டால் மட்டுமே மீண்டும் மீண்டும் எமது மக்கள் ஏமாற்றப்படும் நிலையை மாற்றியமைக்க முடியும். எமது மக்களுடைய பெயரிலேயே தீர்வுகள் கொண்டு வரப்படுகின்றபோது அந்தப் போலித் தீர்வுகளை இனங்கண்டு அதனை நிராகரிக்கக் கூடிய வல்லமை எமது மக்களுக்குக் கிடைக்கும்.

இன்றைய நிலையில் வடக்கு, கிழக்கு இணைந்த தமிழ் பேசும் மக்களு டைய தாயகம் இரண்டாகத் துண்டாக்கப்பட்டு இருக்கின்றது. திட்டமிட்ட வகையிலே தமிழ் பேசும் மக்களின் பூர்வீக மண்ணில் சிங்களக் குடியேற்றங்கள் நடாத்தப்பட்டு வருகின் றன. தமிழர் தாயகத்தின் தென்பகுதியில் ஆரம் பித்த சிங்களக் குடியேற்றங்கள் இன்று வட பிராந்தியத்திலும் வேகம்பெற்றிருக்கின்ற ஒரு நிலையிலே நாம் வாழ்ந்து கொண் டிருக்கிறோம். இந்தத் திட்டமிட்ட குடி யேற்றங்களின் முக்கியமான நோக்கம் தமிழ் என்ற அடையாளத்தைப் படிப்படி யாகக் கரைத்து, வடக்குக் கிழக்கு மண் தமிழ் மக்களின் பூர்வீகம் என்று சொல்ல முடியாத அளவுக்கு சீரழித்து ஏனைய சிங்களப் பிரதேசத்தோடு முழுமையாக இணைக்கப்பட்டு வருகின்றது. எனவே எங்கள் பூர்வீக நிலத்தை இழந்துவரு கின்றோம்.

இதற்கு அடுத்ததாக தமிழர்கள் சந்திக்கும் முக்கிய பிரச்சினையாக கலாச் சாரச் சீரழிவு இருக்கின்றது. ஓர் இனம் தன்னுடைய அடையாளத்தை முன்னிலைப் படுத்தி அதனைப் பேண வேண்டுமென காலம் காலமாகச் செயற்பட்டு வந்திருக் கின்றபோது அந்தச் சிந்தனையிலிருந்து அவர்களை மாற்றி, அந்தப் பண்பாட்டுத் துடிப்பை இல்லாமல் செய்து, அவர்களுடைய இலக்கைத் திசை திருப்பிவிடும் முயற்சிகள் பரவலாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. தமிழர்களின் பாரம்பரிய, விழுமியமிக்க சிந்தனையை முற்று முழுதாகக் கலைத்து, கலாசாரம் என்ற அடையாளத்தை இல்லாமல் செய்வதே இதன் நோக்கம்.

இன்றைய நிலையில் தமிழர் களின் நிலம் பாரிய ஆக்கிரமிப்பை சந்தித்து வருகின்றது. ஒரு பக்கம் இராணுவத்தின ரால் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக் கின்றது. இன்னொரு பக்கம் குடியேற்றங் களின் ஊடாக ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது தமிழ்த்தேசிய பொரு ளாதாரம் பிரதானமாக மூன்று விடயங் களில் முக்கியம் பெற்று இருக்கின்றது. விவசாயம், கடற்றொழில் மற்றும் வியா பாரம் ஆகியவை ஆகும்.

மண் ஆக்கிரமிக்கப்பட்டுக் கொண்டி ருப்பதால் எங்களுடைய விவசாயம் முற்று முழுதாகப் பாதிக்கப்படுகிறது . மக்கள் தம் முடைய சொந்த நிலங்களைப் பயன்படுத்தி வருமானத்தைப் பெற்றுக் கொள்ளமுடியாத நிலையில் தள்ளாடப்படுவதோடு மட்டுமல்ல, மறுபுறம் எம் மண்ணை ஆக்கிரமித்து நிற்கின்ற இராணுவம் அதே மண்ணில் தாங்கள் விவசாயம் செய்து அந்தப் பொருட்க ளைச் சந்தைக்குக் கொண்டு சென்று அரை வாசி விலைக்கு விற்கின்றனர். ஏற்கனவே 30 வருடங்களாக கஷ்டப்பட்டுக் கொண்டி ருக்கின்ற தமிழ் விவசாயிகளால் போட்டி யிடமுடியாத நிலைக்குத் தள்ளப்பட்டு, அவர்கள் தங்களுடைய வாழ்வாதாரங் களை இழக்கின்ற அளவுக்கு நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன.

கடற்தொழில் செய்கின்ற மக்களுக் கும் அதே பிரச்சினைதான். மன்னார்

(08 ஆம் பக்கம் பார்க்க)

# மகிந்தரின் மீள் எழுச்சியைக் காட்டும் நுகேகொட கூட்டம்

-முத்துக்குமார்-



முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷாவினை பிரதம வேட்பாளராக்க வேண்டும் எனக்கோரி மாபெரும் பொதுக் கூட்டம் பெப்ரவரி 18 ஆம் திகதி நுகேகொட வில் இடம்பெற்றுள்ளது. சுமார் ஒன்றரை லட்சம் வரையிலான மக்கள் இப் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். 212 பஸ்களில் இவர்கள் கொண்டுவரப் பட்டுள்ளனர். கூட்டத்தை ஒழுங்கு செய்வதில் சுதந்திரக்கட்சிக்காரர்கள் பெரியளவிற்கு ஈடுபடவில்லை. ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பினது பங்காளிக்கட்சிகளின் தலைவர்களான விமல்வீரவன்ச, தினேஸ் குணவர்த்தனா, உதயகமன்பில, வாசுதேவ நாணயக்கார ஆகியோரே ஒழுங்கு செய்திருந்தனர்.

சுதந்திரக்கட்சிக்காரர்கள் கூட்டத் தில் கலந்து கொள்ளக்கூடாது என தலைமை யினால் கட்டளையிடப்பட்ட போதும் 50 இற்கு மேற்பட்ட சுதந்திரக்கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தனர். மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, முன்னாள் அமைச்சர் டி.பி. எக்கநாயக்க, மா-காணசபை உறுப்பினர்கள், உள்ளூராட்சிச் சபை உறுப்பினர்கள் என்போர் இதில் அடங்குவர். இவர்களைவிட கட்சிக்கு வெளியே ருகுணு பல்கலைக்கழக வேந்தர் சுமணஜோதிதேரர், ஐ.நா. மனிதஉரிமைகள் பேரவைகளின் முன்னாள் வதிவிடப்பிரதி நிதியும், சமூக அரசியல் ஆய்வாளருமான தயான் ஜயதிலக ஆகியோரும் கலந்து கொண்டனர்.

"தாய்நாடு அபாயத்தில்" என்ற கருப்பொருளிலேயே கூட்டம் நடை பெற்றது. "கடந்த ஜனாதிபதி தேர்தலில் நீங்கள் மகிந்தராஜபக்ஷவிற்கு வாக்களித் துள்ளீர்களா? அப்படியானால் இக்கூட்டத்தில் நீங்கள் கலந்து கொள்ள வேண்டும்" என அழைப்பு விடுக்கும் சுவரொட்டிகள் நாடு முழுவதிலும் ஒட்டப்பட்டிருந்தன. 20 இலட்சம் துண்டுப் பிரசுரங்கள் நாடு முழு வதிலும் விநியோகிக்கப்பட்டன. கடந்த 16 ஆம் திகதி இக்கட்சிகளின் தலைவர்கள் கொழும்பின் முக்கிய நகரங்களில் துண்டுப் பிரசுரங்களை நேரடியாகவே விநியோகித் தனர்.

மகிந்த ராஜபக்ஷ கூட்டத்திற்கு செல்லாவிட்டாலும் வாழ்த்துச் செய்தியை அனுப்பியிருந்தார். தயான்ஜயதிலகா அந்த வாழ்த்துச் செய்தியை கூட்டத்தில் வாசித்தார். தொலைக்காட்சியில் நேரடியாக கூட்டத்தை யும் அவதானித்துக் கொண்டிருந்தார். இடை-யில் கூட்ட ஒருங்கமைப்பாளரில் ஒருவரான விமல் வீரவன்சாவுடன் தொடர்புகொண்டு ஊக்குவிக்கவும் அவர் தவறவில்லை. இக்கூட்டங்கள் எதிர்காலத்தில் சிங்களப் பிரதேசமெங்கும் நடாத்தப்படலாம்.

தயான் ஜயதிலக இக்கூட்டத்தில் கலந்து கொண்டமை ஒருங்கமைப்பாளர் களின் முயற்சிகளுக்கு ஒரு கோட்பாட்டுப் பின்புலத்தையும் வழங்கியிருந்தது. அவர் பேசும்போது "இக்கூட்டம் வெறுமனவே மகிந்தருக்காக கூடிய கூட்டமல்ல. வெளியார் சதியிலிருந்து இலங்கையை மீட்டெடுப்பதற் காகத் திரண்ட சிங்கள தேசிய வாதக் கூட்டம்" என்றார்.

இந்தக் கூட்டம் சொல்லும் செய்தி மிகவும் தெளிவானது. "அமெரிக்கா தலைமையிலான மேற்குலகும் இந்தியா வும், இலங்கையை ஆக்கிரமிக்க முயல் கின்றன. மைத்திரி , ரணில் - சந்திரிகா கூட்டு இவ் ஆக்கிரமிப்புக்குத் துணை போகின்றது. இதனால் எமது தாய்நாடு ஆபத்தில் உள்ளது. இந்த ஆபத்திலிருந்து தாய்நாட்டை பாது காக்கக் கூடியவர் மகிந்த ராஜபக்ஷவே. அவரை பிரதமர் பதவியில் அமர்த்துவோம்" என்பதே அந்தச் செய்தியாகும்.

இலங்கை பௌத்த தேசியவாதம் என்பது சிங்கள பௌத்த இனவாதமே. இவர் கள் கூறும் "தேசியம்" என்பது இலங்கையில் வாழும் அனைத்து மக்களையும் இணைத்த இலங்கைத் தேசியமல்ல. மாறாக சிங்களத் தேசியமே! இத்தேசியம் அநகாரிக தர்மபாலா தொடக்கம் ஏனைய இனங்களை இணைப் பதில் அக்கறை காட்டவில்லை. மாறாக சிங்களத் தேசியத்தை சிதைக்க வந்த கூட்ட மாகவே அது ஏனைய இனங்களைப் பார்த்தது. இதனால் அரசு அதிகாரக்கட்ட மைப்புக்கு கிட்டக்கூட ஏனைய இனங்களை வரவிடவில்லை. தூரத்தில் ஒதுக்கியே வைத்திருந்தது.

**இந்தக் கூட்டம் சொல்லும் செய்தி மிகவும் தெளிவானது. "அமெரிக்கா தலைமையிலான மேற்குலகும் இந்தியாவும், இலங்கையை ஆக்கிரமிக்க முயல்கின்றன. மைத்திரி ரணில் - சந்திரிகா கூட்டு இவ் ஆக்கிரமிப்புக்கு துணை போகின்றது. இதனால் எமது தாய்நாடு ஆபத்தில் உள்ளது. இந்த ஆபத்திலிருந்து தாய்நாட்டைப் பாதுகாக்கக் கூடியவர் மகிந்த ராஜபக்சவே. அவரை பிரதமர் பதவியில் அமர்த்துவோம்"**

மேலும் இந்த சிங்களத் தேசியம் மேலைத்தேய எதிர்ப்பு, இந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு என முப்பெரும் எதிர்ப் பிலேயே கட்டி வளர்க்கப்பட்டது. இதனால் மேற்குலகம் சார்பான ஆட்சிவரும் போதெல்லாம் சிங்களத் தேசியவாதம் மேலெழும்புவது வழக்கமாக இருந்தது. தற் போது அந்தச் சூழல் ஏற்பட்டுள்ளதால் மீளவும் எழும்புவதற்கு முயற்சிக்கின்றது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்பது சிங்கள தேசிய வாதக்கட்சிதான். அதன் தோற்றமே சிங்களதேசிய வாதத்தின் போதாமையை நிவர்த்திப்பதாகத்தான் இருந் தது. ஆனாலும் சந்திரிகா ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கு தலைமை ஏற்றவுடன் அதற்கு ஒரு தாராண்மை மிதவாத முகமும் கிடைத்தது. இதன் பின்னர் கட்சிக்குள் மித வாதிகள், தீவிர தேசியவாதிகள் என இரு பிரிவினர்கள் தோன்றினர். தற்போது கூட கட்சியின் மூத்த உறுப்பினர்கள் மிதவாத முகத்தையே காட்டுகின்றனர். இதனால் அவர்கள் மைத்திரியையே ஆதரிக்கின்ற னர். இளம் உறுப்பினர்கள், கிராமப்புறங் களைச் சேர்ந்தவர்கள் தீவிர தேசியவாதம் காரணமாக மகிந்தரை ஆதரிக்கின்றனர்.

எது எப்படியோ தற்போது சுதந்திரக்கட்சி இரண்டாக உள்ளது. இது வெறுமனவே ஆட்கள் சார்ந்த பிளவாக இல்லாமல் ஒரு கோட்பாட்டுப் பின்புலம் கொண்ட பிளவாகவும் இருக்கின்றது. சிங்களத் தேசியவாதமும் அதன் அடிப்படை யிலான மேற்குலக, இந்திய உறவுகளும் இந்தக்கோட்பாட்டுப் பிளவிற்கு அடிப்படை யாக உள்ளன. பாராளுமன்றத் தேர்தல் வரும்போது இந்தப் பிளவு தெளிவாகத் தெரியத் தொடங்கலாம்.

ஆனால் மறுபக்கத்தில் அரசாங்க மும் அதற்குப் பின்னாலுள்ள இந்தியா மேற்குலக சக்திகளும் இந்த சிங்களத் தேசிய வாதத்தை வீரியமிழக்கச் செய்வதில் பல்வேறு வேலைத் திட்டங்களை நகர்த்த முற்படுகின்றன.

இங்கு மைத்திரி அரசாங்கம் என்பது வெறும் பொம்மையே? அதனை பின்னால் நின்று இயக்குவது அமெரிக்கா தலைமையிலான மேற்குலகமும் இந்தியா வும் தான். எனவே அவை வகுக்கின்ற வேலைத்திட்டத்தைத்தான் அரசாங்கம் நடைமுறைப்படுத்தப் போகின்றது. அவை நகர்த்தும் வேலைத்திட்டங்களில் முதலா வது மகிந்தரை ஆதரிக்கும் சக்திகளுக்கும் இராணுவக் கட்டமைப்புக்கும் உள்ள தொடர்பை இல்லாமல் செய்வது. இரண்டா வது மகிந்தரின் ஊழலை வெளிப்படுத்துவது. அவர்மீது இல்லாவிட்டாலும் அவரைச் சார்ந்தவர்கள் மீது வழக்குகளைப் போடு வது, மூன்றாவது அடித்தள மக்கள் மகிந்தரது ஆதரவுச்சக்திகளுடன் செல்லவிடாது சலுகை களை வழங்குவது, நான்காவது தமிழ்த் தேசிய எழுச்சியைத் தடைசெய்வது.

இதில் முதலாவது விடயமான மகிந்தரை ஆதரிக்கும் சக்திகளுக்கும் இராணுவக் கட்டமைப்புக்கும் உள்ள தொடர்பை இல்லாமல் செய்தல் என்கின்ற விடயத்தில் ஆட்சி மாற்றம் தொடங்கிய காலத்திலிருந்தே அமெரிக்காவும் இந்தியா வும் கவனமாக இருந்தன. ஆட்சி மாற்றத் தின் போது இராணுவக்கட்டமைப்பு என்பது மகிந்தர் - கோத்தபாய உருவாக்கிய இராணு வக்கட்டமைப்புதான். இந்தக் கட்டமைப்பு தேர்தல் முடிவு வெளிவரும் போது ஒரு இராணுவப் புரட்சிக்கும் தயாராக இருந் தது. இந்தக் கட்டமைப்பு இருக்கும் வரை மைத்திரி அரசாங்கத்திற்கு எப்போதும் ஆபத் தான நிலையே இருந்தது. இதனால் காலநேரம் சரியாக வரும்போது மாற்றங் களைச் செய்யத் தயாராகி இருந்தனர். தற் போது இராணுவத் தளபதிகளை தமக்கு ஏற்றவாறு மாற்றியுள்ளனர். சரத்பொன் சேகா சார்பானவர்கள் திரும்ப மேல் நிலைக்கு வந்தாலும் அவர் திருப்திப்படக் கூடிய நிலைக்கு மாற்றங்கள் இடம்பெற வில்லை என்றும் ஒரு கதை அடிபடுகின் றது. இனிமேல் மகிந்தர் ஆதரவுச் சக்திகள் இராணுவக் கட்டமைப்பைப் பயன் படுத்துவது கடினமாகத்தான் இருக்கும்.

இரண்டாவது விடயத்தைப் பொறுத்தவரை மகிந்தர்மீது வழக்குப் போடு வது கடினம். அவர் மீது வழக்குத் தொடுப் பதை அரசியல் யாப்பு தடுக்கின்றது. இதனால் மகிந்தரைச் சார்ந்தவர்கள் மீது வழக்குப்போடப்படலாம். விமல்வீரவன் சாவின் மனைவி மீதான வழக்கு இந்த வகைப்பட்டதுதான். மகிந்தரை கூடுதலா னளவிற்கு அம்பலப்படுத்துவதிலேயே கவனம் செலுத்தும். மகிந்தரின் இருப்பிடங் களிலிருந்து மேலும் மேலும் கண்டுபிடிப்பு கள் நிகழலாம். அவரது பல்வேறு நிதிக் கையாழல்களும் தோண்டி எடுக்கப்படலாம். அண்மையில் மைத்திரி பயணிகள் விமானத் தில் இந்தியா சென்றதும், மிகக்குறைந்த செலவுடன் பயணத்தை நிறைவு செய்ததும் ஒருவகையில் மகிந்தரை அம்பலப்படுத்தத் தான். மகிந்தாவின் இந்தியப் பயணத் திற்கு 2 1/2 கோடி செலவு ஏற்பட்ட அதே வேளை மைத்திரியின் பயணத்திற்கு 68 இலட்சம் வரையே செலவு ஏற்பட்டது.

23 ஆம் பக்கம் பார்க்க.

# வாக்களித்த சனத்திற்கு வாய்க்கரிசி மட்டும் தான்

**வணக்கம் வணக்கம்**

**நான் கல்வயல் கனகசிங்கம்**

**எப்படி உங்கட பாடு?**

**ஏதோ என்ர பாடும் போகுது.**

முந்தின மாதிரி இல்லை. பாருங்கோ. இனி வாரம் வாரம் உங்களை சந்திக்கப்போகின்றேன். பேசாமல் வாயை மூடிக்கொண்டு கிடக்கிற ஆத்மா நான் இல்லை பாருங்கோ. அநியாயங்களை உங்களோடை சேர்த்து உலுக்கவேணும் பாருங்கோ.

எங்கடை என்று சொல்லிப் பெருமைப்பட்டுக் கொள்கின்ற மாதிரி பல்கலைக்கழக சமூகம் பெரியதொரு புரட்சியை மீண்டும் ஆரம்பிச்சிருக்குது பாருங்கோ. எந்தவித சுயநல அரசியலிற்கும் இடம்கொடுக்காமல் தங்களால முடியுமெண்டு நிலை நாட்டியிருக்கிறாங்கள். மனதார வாழ்த்துக்கள் பாருங்கோ.




அதிலயும் நீண்டதொரு இடைவெளிக்குப் பிறகு சிவில் சமூகம் மக்கள் அமைப்புக்களெண்டு எல்லாவற்றையும் அணிதிரட்ட முடிஞ்சிருக்கு.

கடந்த கால தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில அகிம்சை வழி போராட்டத்தின் போதென்றாலும் சரி, பின்னரான ஆயுதவழிப் போராட்டத்தின் போதாயினும் சரிமிகப்பெரிய பங்களிப்பைச் செய்தது யாழ்.பல்கலைக்கழக சமூகமென்றது சொல்லித் தெரியவேண்டியதில்லை எப்போதெல்லாம் எங்கடை போராட்டங்கள் தொய்வு நிலையை அடையுதோ. அப்போதெல்லாம் புத்துணர்ச்சியைக் கொண்டு வந்ததும் யாழ். பல்கலைக்கழக சமூகம்தான்.

சந்திரிகா அம்மையார் கொடுத்த குண்டுதுளைக்காத சொகுசு வாகனத்தில திரிஞ்சு அவவின்ர பொதியை நியாயப் படுத்திக் கொண்டு புலிகளுக்கு எதிரான யுத்தத்திற்கு தமிழ் தலைமையள் கொழும்பில இருந்து முண்டு கொடுத்துக் கொண்டிருக்க – இராணுவ அடக்குமுறையையும் மீறி தமிழ்த் தேச இறைமை தாயகம், சுயநிர்ணயம் வடக்கு கிழக்கு தமிழ் தாயகம் என்ற கோசத்தோட பொங்குதமிழ் எழுச்சியை உண்டு பண்ணி அந்த ஜனநாயக அரசியல் தலைமையளின்ர துரோகத்துக்கு ஆப்புவைச்சு வன்னித் தலைமைக்கு பின்னால தான் உலகத் தமிழினம் நிக்குது எண்ட செய்தியை சரித்திரத்தில பதிஞ்சு தேசியத்தலைமையின்ர பாராட்டையும் பெற்ற பல்கலைக்கழகம் எல்லே அது. ஆயுத முனையில அடக்கி வைக்கப்பட்டிருந்த தமிழ்த் தேச மக்களை அப்போது தட்டியெழுப்பியிருந்தது அந்தப் பொங்கு தமிழ். அப்போது கிளம்பிய தீப்பொறி இப்பொழுது புலம்பெயர் தேசமெங்கும் பற்றி எரிச்சுக்கொண்டு தான் இருக்குது. அந்த தீயை பற்ற வைக்கிறதிற்காக பலரும் செய்த தியாகங்கள் எல்லையற்றது. அதிலயும் இன்றைய தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்ர செயலாளர் கஜேந்திரன், அந்தக் காலத்தில ஒரு மாணவனாக இருந்து ஆற்றிய பணி வரலாற்றினில் குறிப்பிடத்தக்கது.

இப்ப பழையபடி யாழ்.பல்கலைக்கழக சமூகம், புத்துணர்ச்சியோட எழுந்திருக்குது. 2012 ஆம் ஆண்டில மாணவர்கள் தன்னுணர்ச்சியோட பல்கலைக்கழக சூழலில நடத்தின எதிர்ப்புப் போராட்டத்தை, மிகக்கொடூரமாக முன்னைய ஆட்சியாளர்கள் ஒடுக்கியிருக்கினம். மாணவ தலைவர்களை புனர்வாழ்வு என்ற பெயரில ஜெயிலுகளிற்கு அனுப்பிச்சினம். ஆனால் அதை எல்லாம் தாண்டி, தமது உறவுகளிற்கு மே 19 இல் வருடந்தோறும் அஞ்சலி செலுத்தத் தயங்கவில்லை.

இதுகளை குழப்ப நிர்வாகம் பல்கலைக்கழகத்தை இழுந்து மூடிப்பார்த்தது, விடுமுறைகளை வழங்கிச்சுது. மிரட்டல்கள், அச்சுறுத்தல்களென கொஞ்ச நெஞ்ச பிரச்சினைகள் இல்லை. அதிலயும் பல மாணவ தலைவர்கள் கொலை முயற்சிகளிலிருந்து படுகாயங்களோட தப்பியிருந்தினம். ஆனால் உணர்வுகளை அடக்க முடிஞ்சதோ. ஆர்ப்பரிச்செல்லோ எழுந்திருக்கினம்.

எந்தக்கோரிக்கைகளை முன்வைத்து உண்ணா நோன்பிருந்து தம்பி தீலிபன் சாவை தழுவிக்கிகொண்டனோ அதே பூமியில சனம் சத்தியம் செஞ்சிட்டுத் தான் கலைஞ்சது. நாங்கள் இனியும் சோர்ந்து போயிருக்கமாட்டோமெண்டு அந்தச் செய்தி சொல்லியிருக்குது.

பல்கலைக்கழக சமூகத்தின்ர போராட்டத்தால உண்மையில மூக்குடைஞ்சு போனது கூத்தமைப்பும் அதின்ரை போலி அரசியலும் தான் பாருங்கோ. ஆளாளுக்கு முகம் கறுத்துப் போய் ஓரமாக ஒதுங்கி நின்றவை. பல்கலைக் கழகத்திற்கு வந்தவை மாலை, மரியாதையோட வரவேற்பாங்களெண்டு பார்த்தால் ஒருத்தன்கூட ஏனென்று கேட்கையில்லை பாருங்கோ. வாங்கோ, வந்து லைனில நில்லுங்கோ இந்தா பிடியுங்கோ சுலோக அட்டையை என்ற கதைதான். அதிலயும் மாவையர் ஏசி பூட்டின காரில வந்து நல்லூரடியில நிற்க ஒருத்தனும் திரும்பிக்கூட பார்க்கையில்லை. ஆள் தனக்கு மைக் கிடைச்சால் விளாசிப்போடுவமென்று பார்த்தால் அதுவும் வாய்க்கேல்ல.

போதாக்குறைக்கு பேப்பர்காரப் பொடியள் சுற்றிவளைச்சு கேள்விகேட்டு கட்டியிருந்த வேட்டியையும் உரிஞ்சு போட்டாங்கள். சுமந்திரன் சொல்லுறார் உள்ளக விசாரணையால சர்வதேச விசாரணைக்கு பாதிப்பில்லையெண்டு அப்ப உள்ளக விசாரணையை தமிழரசுக் கட்சித் தலைவர் என்ற வகையில ஏற்றுக் கொள்ளுறியலோவெண்டு கேள்வி கேட்க ஆள் பேய் அடிச்ச மாதிரி வந்திட்டுது. எதுக்கெடுத்தாலும் வாற பொதுக்குழுக் கூட்டத்தில முடிவெடுத்துச் சொல்லுறதாக சொன்னவராம். இனி இவையளின்ர அரையல் அரசியல் வேகாது பாருங்கோ.

அது ஒரு பக்கம் நிற்க, பின்கதவு எம்பியின்ர கொடும்பாவியை எரிச்சதுக்கு அவற்றை இரண்டொரு வாலுகள் எழும்பி நின்று ஆடுதுகள். வடமாகாணசபையில அதை பற்றி விவாதிக்கேக்க, ஒன்று சொல்லியிருக்குது. கூட்டமைப்பிலேயே மண்டைவளம் கூடியவர் பின் கதவு எம்பிதாணெண்டு. அதன் மூலம் அவரே சொல்லிப் போட்டார். மற்றையவளுக்கு மேலே ஒன்றுமில்லையெண்டதை. லக்ஸ்மன் கதிர்காமர் முதல் நீலன் திருச்செல்வம் வரைக்கும் மண்டை கூடினவங்கள் கொழும்பில இருந்தவங்கள் தான். ஆனால் தங்களிட்டை இருந்த மண்டைவளத்தை எதுக்கு அவங்கள் பயன்படுத்தினாங்கள் என்றது தான் மிகப்பெரிய கேள்வி. தாம் சார்ந்த மக்களுக்கு பயன்படாத வளம் ஒரு வீணான வளமாகத்தான் அவை கணக்கிடப்பட்டது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# நையாண்டியார்

## பதில்கள்

**ப. விதுஷா**
**கற்கோவளம், பருத்தித்துறை.**

கேள்வி: " மாற்றத்திற்கு வாக்களித்து " எதனைக்கண்டு கொண்டோம்.?

**பதில்: தெரியவில்லை ஐ.நாவின் விசாரணை அறிக்கையினை வெளியிடக் கோரி போராட வேண்டிய நிலைக்கு வந்துள்ளோம். தெற்கினில் ஆட்சிக்கதிரையினிலிருக்கும் ஆட்கள் மாறினார்களேயன்றி வேறெந்த மாற்றமும் நிகழ்ந்திருக்கவில்லை.**

**த.சீவகன்**
**புதுக்குடியிருப்பு,முல்லைத்தீவு.**

கேள்வி: வடக்கு முதலமைச்சர் கூறியிருக்கும் இணக்க அரசியல் எந்த வகை?

**பதில்: இன அழிப்பு மற்றும் சர்வதேச நீதி விசாரணை தொடர்பான தீர்மானம் நிறைவேற்றப்பட்டமை வடமாகாணசபை வரலாற்றினில் முக்கிய பதிவு. தாம் உயிரோடிருக்கும் வரை பிரேரணையை நிறைவேற்ற விடமாட்டோமென்று சவால் விடுத்தவர்கள் முகத்தினில் கரி பூசப்பட்ட நிகழ்வு இத்தகைய சூழலில் ஏற்பட்டிருக்கும் நற்பெயரை தொடர்ந்து பேண வேண்டுமாயின், சிலவற்றை அடக்கி வாசிப்பது பொருத்தமானதாக இருக்கும்.**

**மார்க் அன்ரனி**
**மன்னார்.**

கேள்வி: வட- கிழக்கினில் தோண்டப்பட்ட புதைகுழிகளிற்கு என்னவாயிற்று?

**பதில்: ஆட்சி மாற்றத்தினில் அவையெல்லாம் மீண்டும் மூடப்பட்டுள்ளது. இனி மைத்திரியை மீண்டும் சீனாவோடு சென்றால் அல்லது மேற்கு நாடுகளை முழுமையாக நிராகரித்து இந்தியாவுடன் சென்றால் அவரை ஆட்சிக் கட்டிலிலிருந்து விரட்டுவதற்காக தேவையானால் மீண்டும் தோண்டி எடுப்பார்கள்.**

**ச.சஜீவன்**
**செட்டிக்குளம், வவுனியா.**

கேள்வி: பல தலைகள் மீண்டும் போராட்டக் களங்களிலெல்லாம் எட்டிப்பார்க்கின்றனவே?

**பதில்: மீண்டும் ஒரு தேர்தல் வரப்போவதற்கான எச்சரிக்கை. யானைவரும் பின்னே மணி ஓசை வரும் முன்னே வரும் கதை தான். பல நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கும் ஒருவாறாக ஐந்து வருடத்தை தள்ளிவிட்டால் ஓய்வூதியம் கிடைத்துவிடும் என்ற ஆவல் தான். போதாதற்கு போனஸாக தேசிய அரசு, நாடாளுமன்ற ஆயட்கால நீடிப்ப பற்றியெல்லாம் பேசுகின்றார்கள்.**

**த. வதனரூபன்**
**கொக்கட்டிச்சோலை, மட்டக்களப்பு.**

கேள்வி: வடக்கைப் பற்றித்தான் எதற்கெடுத்தாலும் பேசுகிறார்கள். கிழக்கு அவ்வாறில்லையா?

**பதில்: இந்தியாவின் கட்டளைப்படி இப்போது தமிழர் தாயகம் பற்றி பேசுவதனை தலைமைகள் முழுமையாக கைவிட்டுள்ளன. வடக்கு கிழக்கு வாழ் தமிழ் மக்கள் விழித்துக் கொள்ளவில்லையாயின் தமிழினம் பற்றி எதிர்காலம் வரலாற்றுப் புத்தகத்தில் படிக்க வேண்டிய நிலைக்கே செல்லும்.**

05 ஆம் பக்க தொடர்ச்சி....

தொடக்கம் கிழக்கில் அம்பாறை வரைக்கும் வாழும் கரையோரத் தமிழ் மக்கள் 30 வருடங்களுக்குப் பின் இருக்கின்ற இயந்திர உபகரணங்கள், படகுகளை வைத்தே தொழில் செய்கின்றார்கள். ஆனால் தென்னிலங்கையிலிருந்து இலங்கை கடற்படையின் துணையுடன் வரும் சிங்கள மீனவர்கள், அதிநவீன ரக மீன்பிடிப் படகுகளைப் பயன்படுத்தி வடக்கு, கிழக்குப் பகுதி கடலை சூறையாடிச் செல்கின்றனர். 30 வருடங்களுக்கு முன்பிருந்த படகுகளை, மீன்பிடி தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தும் எம்மவர்களால் அவர்களுடன் போட்டியிட முடியவில்லை. இதனால் மீன்பிடியும் மிகமோசமான பின்னடைவை சந்தித்து வருகின்றது.


வியாபாரமும் இதே நிலைதான். போர் முடிந்த கையுடன் வடக்கிற்கு படையெடுத்த தெற்கைச் சார்ந்த வணிக நிறுவனங்களோடு தமிழ் வணிகர்களால் போட்டி போட முடியவில்லை. தமிழர்கள் வணிகத்திலும் தோல்விகண்டு வருகிறார்கள்.

இவ்வாறு திட்டமிட்டவகையில் தமிழ் தேசத்தினுடைய பொருளாதார தனித்துவம் அழிக்கப்பட்டுவருகின்றது. எங்களுடைய தேசத்தைக் கட்டியெழுப்பக்கூடிய அந்தப் பொருளாதார பலத்தை இழந்துவருகின்றோம்.

இதற்கு அடுத்த நிலையில் தமிழர்கள் இழந்த, இழந்துவரும் உயிரிழப்புக்கள் மேலும் பாரிய இன அழிப்புக் காரணியாக இருக்கின்றது. முள்ளிவாய்க்காலுக்கு முன் - முள்ளிவாய்க்கால் - முள்ளிவாய்க்காலுக்குப் பின் என்கிற வகையில் தமிழ் உயிர் அழிவுகள் ஏற்படுத்தப்பட்டு வருகின்றன. இவையனைத்தையும் இணைத்தே இனப்படுகொலை என்கின்றனர். இன அழிப்பு என்பது தமிழ் இனத்தை முற்றுமுழுதாக அழிப்பதல்ல. இன்று உயிரோடு இருக்கின்ற ஒவ்வொரு தமிழனையும் ஒரே தடவையில் உயிரிழக்கச் செய்வதல்ல. மேற்சொன்னவாறாக கொஞ்சம் கொஞ்சமாக, பல தளங்களிலும் அழிப்பதுதான் கட்டமைப்புசார் இன அழிப்பு.

இந்தஅழிப்புக்குஎதிராகஇருப்பவை எவை என்றும் நாம் பார்க்கவேண்டும். நாங்கள் ஒரு தேசமாக இருப்பது முதல் தடை. ஒரு தொகுதி மக்கள் தங்களுக்குச் சொந்தமான நிலப்பரப்புடன், தங்களுக்கென்று மொழி, கலாசாரம், சுயமான பொருளாதாரம் ஆகியவைகள் இருக்கின்ற பொழுது, அந்த இனத்தவர்களுக்கு சர்வதேச சட்டத்தின் பிரகாரம் ஒரு தேசம் என்ற ஒரு அங்கீகாரம் கிடைக்கின்றது. எனவே இந்தத் தேசம் என்ற அங்கீகாரத்தை, அடையாளத்தை இல்லாமல் செய்வது தான் எமக்கு இருக்கின்ற இனப்பிரச்சினை. அந்தத் தேசம் என்ற அங்கீகாரத்தைக் கொடுக்கின்ற ஒவ்வொரு காரணியையும் திட்டமிட்ட வகையிலே அழிப்பது தான் இனப்பிரச்சினை. அதற்குக் காரணம் சர்வதேச சட்டத்தின் படி ஒரு தேசம் என்ற அங்கீகாரத்தைப் பெற்றிருக்கின்ற ஓர் இனம், தன்னை ஆளக் கூடிய உரிமையைப் பெற்றிருக்கின்றது, ஆனால் சிங்கள தேசியத்தைப் பொறுத்தவரையில் இலங்கைத் தீவு தன்னுடைய தீவு. வேறெந்த இனத்துக்கும் இந்தத் தீவை சொந்தம் கொண்டாட அனுமதிக்க முடியாது. இது ஒரு சிங்கள பௌத்த நாடாக இருக்கவேண்டும் என்ற கனவுக்கு தமிழர்களின் தனித்தேசம் இடைஞ்சலாக இருக்கக்கூடியது, எனவே தமிழ்த் தேசம் என்ற அங்கீகாரத்தை அழிக்க வேண்டும். இது தான் இனப்பிரச்சினை. இன்று ராஜபக்ஷவுடன் தெடங்கிய விடயம் அல்ல. இது பிரித்தானியர் வெளியேற்றத்திற்கு முன்னர் திட்டமிடப்பட்ட ஒருவிடயம். இனத்துடைய அடையாளம், அந்த இனத்தினுடைய, அந்தத் தேசத்தினுடைய அடையாளத்தைப் பாதுகாப்பது தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றால் அந்தத் தீர்வு எவ்வகையான விடயங்களைக் கொண்டிருக்க வேண்டும் என்பதை நாங்கள் சரியாக விளங்கிக் கொள்ளவேண்டும்.

ஒரு தலைப்பட்சமாக இந்த மண்ணுக்கு சொந்தமில்லாதவர்கள் இந்த



மண்ணின் பூர்வீக குடிகளான தமிழர்களின் தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய நிலையிலிருந்து விடுபட்டு தமிழர்களே தங்களுடைய தீர்மானங்களை எடுத்து, தங்களுடைய தலைவிதியைத் தீர்மானிக்கக்கூடிய ஒரு நிலைமையை உருவாக்குவது தான் தீர்வு, அவ்வகையான ஒரு நிலைமை உருவாகுவதற்கு தனிநாடாகப் பிரிவது ஒரு வடிவம். ஆனால் அதுமட்டும் தான் ஒரு தீர்வென்று கிடையாது. தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரசும் ஒரு ஆயுதமேந்திய அமைப்பல்ல. நாம் இலங்கை என்ற அரசுக்குள் இயங்கிக் கொண்டிருக்கின்ற ஒரு அமைப்பு. இலங்கை என்ற அரசு பல சட்டங்களை உருவாக்கியிருக்கின்றது. அந்த சட்டங்களில் தனிநாட்டுக் கோட்பாட்டுக்கு இடமில்லை. ஆகவே நாம் தனி நாட்டைக் கோரி எம் மக்களை ஒரு இக்கட்டான நிலைக்குத் தள்ளுவதை விரும்பவில்லை. அதற்குப் பதிலாக எங்களுடைய தேசத்தைப் பாதுகாக்ககூடிய ஒரு தீர்வைத்தான் எதிர்பார்க்கின்றோம். ஒரு பக்கம் தீர்வு என்று பேசுகின்ற போது அழிக்கப்படுகின்ற தமிழ்த் தேசியத்திற்கு அங்கீகாரம் பெறுவது தான் இருக்கக் கூடிய ஒரேயொரு தீர்வு. அந்த அங்கீகாரத்தைப் பெற்ற பிற்பாடுதான் சிங்கள தேசத்தோடு இணைந்து ஒரு நாட்டுக்குள் வாழ்வதற்கான அரசியலமைப்பை நாங்கள் உருவாக்குவோம். நடந்திருக்கின்ற திட்டமிட்ட இன அழிப்புக்கும் பொறுப்புக் கூறவேண்டும். இந்தப் பொறுப்புக்கூறலைப் பொறுத்தவரை எங்கள் கட்சி எந்த வித விட்டுக் கொடுப்புக்கும் தயார் இல்லை.

தமிழருக்கு ஒரு இனப்பிரச்சினை கிடையாது என மகிந்த ராஜபக்ஷ காலத்தில் மிகத் தெளிவாக எமக்கு சொல்லப்பட்டது.

தமிழரின் பிரச்சினை 2009 மே மாதம் 18ஆம் திகதியோடு முடிவுக்கு வந்துவிட்டதென்றும், 13ஆவது திருத்தத்தை ஏற்றுக் கொண்டு பிரிக்கப்பட்ட வட கிழக்கு மாகாணங்களில் போட்டியிட்டு வென்று அந்த மாகாணங்களில் ஏதோ பதவிகளை எடுத்துக் கொண்டு அமைதியாக இருப்பது தான் தமிழர்களுடைய இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றும் சொல்லப்படுகிறது. பொறுப்புக் கூறலுக்கு இடமில்லை என்று மிகத் தெளிவாக சொன்னார் மகிந்த ராஜபக்ச. அவர் அப்படிக் கூறியதற்காகத் தான் தமிழ் மக்கள் கொதித்தெழுந்து அவரை வீட்டுக்கு அனுப்புவதில் குறியாக இருந்தார்கள். எந்த விதமான நிபந்தனையும் இல்லாமல் வாக்களித்தார்கள். தலைவர்கள் என்று கூறக்கூடியவர்களும் கூட எந்த விதமான நிபந்தனையும் இல்லாமல் தம்முடைய ஆணைப்படியே மக்களும் வாக்களித்து இந்தப் புதிய அரசாங்கத்தை நிலைநாட்டி இருக்கின்றோம் என்று கூறிக்கொண்டிருக்கின்றார்கள்.

ஆனால் இந்தப் புதிய அரசாங்கம் ராஜபக்ஷ அரசாங்கத்தைவிட வித்தியாசமானதல்ல. புதிதாக எதையும் தரவில்லை. 13ஆம் திருத்தம் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்றார். சமஷ்டி தரமுடியாதென்றார். பொறுப்புக் கூறலுக்கு இடமில்லை என்று சர்வதேசத்திடம் மிகத் தெளிவாகக் கூறினார். ஆனால் இன்றைக்கு இருக்கக் கூடிய இந்தப் புதிய அரசாங்கம் 13ஆம் திருத்தம் மட்டும் தான் இனப்பிரச்சினைக்குத் தீர்வு என்கிறது. ஒற்றையாட்சி உள்ளே தான் தீர்வு, சமஷ்டி ஒரு தீர்வில்லை என்று சொல்கிறது. பொறுப்புக் கூறல் என்ற வகையிலே ஓர் உள்ளக விசாரணை நடத்தலாம் எனவும் சொல்லிவிட்டார்கள். அதுமட்டுமல்ல இன்றைய சிங்கள தேசத்து ஜனாதிபதியும் பிரதமரும் ராஜபக்ஷ குடும்பத்தைக் காப்பாற்றுவதோடு, இலங்கையின் முப்படைகளையும் தாங்கள் காப்பாற்றி விடுவோம் என்று பொதுப்படையாகவே ஏனைய சிங்கள கட்சிகளுடன் ஒப்பந்தம் செய்திருக்கின்றனர். இந்த ஒப்பந்தங்களுக்காகத்தான் எங்களுடைய மக்கள் பிரதிநிதிகள் என்று கூறக்கூடிய தலைவர்கள் நிபந்தனையற்ற ஆதரவினைக் கொடுத்து இன்றைக்கொரு புதிய அரசாங்கத்தை உருவாக்கிவிட்டிருக்கிறார்கள். இந்த அரசு ராஜபக்ஷ உருவாக்கிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளைத் தான் தாங்கள் நடைமுறைப்படுத்தியிருக்கின்றோம் என்று கூறியிருக்கிறார்கள்.

நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளில் ஒற்றையாட்சியை பாதுகாக்கவேண்டும் என்றும் இந்த ஒற்றையாட்சியைத் தாண்டி எந்த முடிவுகளையும் எடுக்கக் கூடாது என்றும் கூறியிருக்கிறார்கள். நல்லிணக்க ஆணைக்குழுவின் 8.240 பரிந்துரையில் 'எந்த ஒரு மாவட்டமோ, மாகாணமோ ஒரு மொழி ரீதியாக வேறுபடுத்தி அடையாளப்படுத்த முடியாத நிலைமையை உருவாக்க வேண்டும்' , வேறொரு பிரிவில் 'இலங்கையில் எந்தவொரு பிரதேசமும் ஒரு இனத்தவருக்கென்று அடையாளப்படுத்தக் கூடாது' எனக் குறிப்பிடுகின்றது. இந்த ஒற்றையாட்சி நடைமுறையை 2012 ஆம் ஆண்டு ஐ.நாவில் வலியுறுத்தி, இலங்கை தொடர்பான முதலாவது தீர்மானம் நிறைவேற்றப்பட, அந்த ஐ.நா மனிதவுரிமைப் பேரவையில் அங்கம் வகிக்கின்ற 47 உறுப்பு நாடுகளுக்கும் மக்கள் பிரதிநிதிகள் என்று சொல்லப்படுகின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர்கள் கூட்டாக ஒரு கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதத்தில் கடைசிப் பந்தியில், எல்.எல்.ஆர்.சி தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் பூர்த்தியடையும்' என்று கூறியிருந்தார்கள். முப்பது வருடங்களாகப் போரை நடத்தி பெரும் இன அழிப்பை நடத்தி முடித்தபின்னர் எஞ்சியவற்றையும் கொஞ்சம்கொஞ்சமாக அழிக்கவே ராஜபக்ஷ நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையைக் கொண்டுவந்தார். இவ்வாறாக நம்மை அழிக்கும் ஆவணமொன்றை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் வரவேற்று அதை முழுமையாக அமுல்ப்படுத்தினால் எம் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் முழுமையாகப் பூர்த்திசெய்யப்படும்என்றுஎழுத்தினூடாகக்கூறியிருக்கிறார்கள். தமிழ் இனத்தின் அரசியல் பயணம் இன்றைக்குப் போகின்ற பாதையிலேயே தொடர்ந்தும் போனால் தமிழ்த் தேசம் இல்லாது கரைந்துபோகும்.

பொறுப்புக் கூறல் என்ற வகையிலே ஐ.நா வில் 2012, 2013, 2014 ஆம் ஆண்டுகளில் மூன்று தீர்மானங்கள் கொண்டு வரப்பட்டன. 2012, 2013 ஆம் ஆண்டுகளில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் உள்ளக விசாரணையைத் தான் வலியுறுத்தியிருந்தார்கள். 2012, 2013 ஆம் ஆண்டு மகிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் உள்ளக விசாரணையை நடத்தக் கூறினால், ஓர் இன அழிப்பை வெற்றிகரமாக நடாத்தி முடித்தவரிடம் அதை விசாரணை செய்யக்

கூறுவது - அதாவது, 'ஒரு கொலைகாரன் தன்னைத்தானே விசாரித்துக் கொள்வதாகத்தான் இருக்கும்'. ஆகவே 2012, 2013 ஆண்டுகளில் கொண்டுவரப்பட்ட உள்ளக விசாரணை என்ற தீர்மானங்களை நாம் எதிர்த்தோம். சர்வதேச விசாரணையை வலியுறுத்தினோம். அதுமட்டுமல்லாது 2014 ஆம் ஆண்டு உள்ளக விசாரணையைக் கொண்டு வருகிற அதே சமயம் ஐ.நா மனிதவுரிமை ஆணையாளர் அலுவலகத்திற்குக் கூடுதலான சர்வதேச பரிந்துரை ஒன்றை உருவாக்கி விசாரிக்க அனுமதிவழங்கப்பட்டது. ஆதலால் கூறப்பட்ட உள்ளக விசாரணை என்ற விடயத்தை நாம் எதிர்த்தோம். அன்று ஜெனிவாவில் பத்திரிகை மாநாடொன்றை நடாத்தி உலகத்திலுள்ள அனைத்து ஊடகங்களுக்கும் முன்னால் நாம் இதனை ஏன் எதிர்க்கின்றோம் என விரிவாக விளக்கினோம்.

இவ்வாறு இரண்டு வருடமாக உள்ளக விசாரணையை வலியுறுத்தியது மட்டுமல்லாது, மூன்றாவது தடவையும் உள்ளக விசாரணையை வலியுறுத்தப்படுவது அரசியல் நோக்கம் கொண்டது. அதே வேளை அத்தீர்மானத்தில் சர்வதேச பொறுப்புக்கூறல் பற்றிக் கூறப்பட்டிருந்தாலும், அதிலே அவர்கள், மனிதவுரிமைகள் மீறல்களை விசாரிப்பது பற்றி மட்டுமே கூறியிருந்தனர். அவ்விடயத்தை சுட்டிக் காட்டிய நாம் இனப்படுகொலைகள், போர்க் குற்றங்கள், மனித குலத்துக்கெதிரான குற்றங்கள் போன்ற அனைத்துக் குற்றங்களையும் விசாரிக்கக் கூடிய வகையில் சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்களை பற்றி விசாரிக்கப்படவேண்டும் என்று நாம் வலியுறுத்தியிருந்தோம். இந்தக் குற்றங்கள் மனிதவுரிமை மீறல்களல்ல. மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள். மனிதவுரிமை மீறல் என்பது ஒரு தனி நபருக்கு எதிரான மீறல். ஆனால் இங்கு நடந்தது ஒட்டுமொத்த தமிழினத்துக்கு எதிரான கூட்டு மனிதப்படுகொலை. இந்தக் குற்றங்கள் மனிதாபிமான சட்ட மீறல்களாகத் தான் கணிக்கப்படுகின்றது. 2013ஆம் ஆண்டு நிறைவேற்றப்பட்டது போல, 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம் எந்தவித சர்வதேச மனிதாபிமான சட்டமீறல் பற்றியும் கருத்துத் தெரிவிக்கப்படவில்லை. இந்தத் தீர்மானம் உண்மையில் தமிழர்களுடைய நலன் கருதிக் கொண்டுவரப்பட்டதல்ல என்று நாம் சுட்டிக் காட்டி வந்தோம். ஜெனிவாவில் நடப்பது ஒரு நாடகம். மேற்கு நாடுகள் விரும்பும் ஆட்சி மாற்றத்தை நோக்காகக் கொண்டே இந்தத் தீர்மானங்கள் கொண்டு வரப்படுகின்றன. மாறாகப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கோருவது அல்ல. ஆகவே தான் ஓர் இடத்தில் உள்ளக விசாரணையை வலியுறுத்தி இன்னோர் இடத்தில் சர்வதேச விசாரணையை வலியுறுத்துகின்றார்கள். இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்படாவிட்டால் மாத்திரமே சர்வதேச விசாரணை நடக்கும் என 2014 ஆம் ஆண்டு மார்ச் மாதம், ஜெனிவாவில் நாம் கூறியிருந்தோம். நாம் அன்று கூறியபோது தமிழ் தேசியக் கூட்டமைப்புத் தலைவர்கள் கடுமையாக எதிர்த்தார்கள். இன்று நடப்பது என்ன? கூட்டமைப்புத் தலைமைகள் இந்த மக்களுக்கு நடக்கின்ற நன்மைகளை நாங்கள் குழப்புகின்றோம் என்ற போலியான பரப்புரைகளைச் செய்துவந்தன. ஆனால் ஜனவரி 8 ஆம் திகதியுடன் அந்தப் பொய் பரப்புரைகள் அம்பலமாகத் தொடங்கியுள்ளன. சர்வதேச சமூகம் தமிழ் மக்களுடைய நலன்களை முன்னிறுத்தி எந்தக் காலத்திலும் நல்ல முடிவுகளை எடுக்கப்போவதில்லை. அவர்கள் தம்முடைய நலன்களை கவனத்தில் கொண்டுதான் முடிவுகளை எடுப்பார்கள். சர்வதேச சமூகமும், மேற்குலகும், இந்தியாவும் ராஜபக்ஷ அரசு சீன சார்பை எடுத்திருந்தமையினால் அவரை ஓரங்கட்டி தமக்கு நேச சக்தியாக இருக்கக் கூடிய ஒருவரை ஆட்சிக்கு அமர்த்தி, இலங்கையை தங்களுடைய கட்டுப்பாட்டிற்கு கொண்டு வரவே விரும்பினார்கள். அதுவே அவர்களுடைய நோக்கமாகவும் இருந்தது. ஜனவரி 8ஆம் திகதிக்குப் பிற்பாடு நாம் 5 வருடங்களாகக் கூறியவை நிரூபிக்கப்பட்டு வருகின்றன. இன்று அந்த நிலை மாறி தமிழ் மக்கள் விழிப்படைந்திருக்கிறார்கள். இதுவரைக்கும் இனவழிப்பு என சொல்லவே தயங்கிக் கொண்டு இருந்தவர்கள் தீர்மானம் இயற்றுமளவுக்கு மாறியிருக்கிறார்கள்.

2014ஆம் ஆண்டு மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தினை நடைமுறைப்படுத்தப்படுகின்ற நோக்கத்தோடு 2014 ஆகஸ்ட் மாதம் ஐ.நா வின் மனிதவுரிமை ஆணையாளர் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டது. அந்த அறிக்கையிலேயே ஓர் முன்னேற்றம் தெரிந்தது. 2014 ஆகஸ்ட் மாதம் வெளியிடப்பட்ட அறிக்கையில் மனிதாபிமன சட்ட மீறல்களையும் விசாரிக்கப் போவதாக அறிவிக்கப்பட்டது. இந்நிலையில் எமது கட்சி அந்த அறிக்கையை முழுமையாக வரவேற்றதோடு, நாம் அந்த விசாரணைகளுக்கு முழுமையாக ஒத்துழைப்பதாக முடிவெடுத்து, நாம் பகிரங்கமாக மாதிரி படிவங்களை வெளியிட்டு ஊடகமாநாடு ஒன்றினையும் நடாத்தியிருந்தோம்.

**இருக்கக் கூடிய ஒரேயொரு அரசியல் நம்பிக்கையான பொறுப்புக் கூறலையும் கைநழுவிவிடுகின்ற நிலையை உருவாக்குவதற்கு காரணமாக இருந்த சுமந்திரன் ஊடகவியளாளர் மாநாட்டில் கூறுகிறார், 'வழங்கப்பட்ட மக்களின் சாட்சியங்கள் போதுமானதாக இல்லை, மக்கள் முழுமையான சாட்சியங்களை வழங்கி அந்த அறிக்கையைப் பலப்படுத்த முன் வர வேண்டும்' என்று. ஆனால் ஐ.நா புதிதாக சாட்சியங்களை வழங்கலாம் என அறிவிக்கவில்லை அவர்களுடைய விசாரணை அறிக்கை ஒக்டோபர்மாதத்துடன் நிறைவடைந்து விட்டது. ஆனால் தமிழர்களைத் திரும்பவும் ஏமாற்றி தாம் செய்த துரோகத்தை மூடிமறைப்பதற்கு மேற்கொள்கின்ற பொய்யை சுமந்திரன் கட்டவிழ்த்துவிட்டிருக்கிறார்.**

நாம் அந்தச் செயற்பாட்டை நாம் செய்கின்ற பொழுது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சிரேஷ்ட சட்டத்தரணியாக இருக்கின்றவரும், தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினருமான சுமந்திரன் பத்திரிகை மாநாடொன்றை நடத்தினார். அதில், 'ஐ.நா சாட்சியங்களை கோரியுள்ளது. அங்கு போதியளவு சாட்சியங்கள் ஏற்கனவே கிடைத்துள்ளது. இங்கிருந்து சாட்சியங்கள் வழங்குவது ஆபத்தானது என மக்களை அச்சமூட்டி சாட்சியங்களை வழங்குவதனை தடுக்கும் வகையில் கருத்துக் கூறியிருந்தார்.

ஆனாலும் நானும் எமது கட்சியின் செயலாளர் கஜேந்திரனும் நேரடியாக ஜெனிவாவிற்குச் சென்று சாட்சியங்கள் கொடுத்தோம்.

ஆட்சி மாற்றத்தின் பின்னர் இந்திய மேற்குலகிற்கு சார்பான தமக்கு விரும்பிய அரசு ஆட்சிப் பீடம் ஏறியுள்ள நிலையில், இந்த விசாரணையை வலியுறுத்திவந்த நாடுகளுக்கும் கூட தொடர்ந்து அதை வலியுறுத்த வேண்டிய தேவை இல்லாமல் போனது. அதனால் நடைபெற்ற விசாரணை அடிப்படையில் வெளியிடப்பட இருந்த அறிக்கையை 6 மாத காலத்திற்குப் பிற்போடவும் செய்துள்ளன. அதனால் மக்களுடைய கோபம் உச்சக்கட்டத்தை அடைந்தது. ஓர் இனவழிப்புக்கு எதிரான விசாரணைக்கு நடந்த அநியாயம் ஒருபக்கமிருக்க, தமிழர்களுக்குப் பொய்யான வாக்குறுதிகளைக் கூறி, நிபந்தனை அற்ற வாக்குகளையும் சேகரித்து, மாற்றம் எதுவுமற்ற புதிய ஆட்சியைக் கொண்டு வந்து, இருக்கக் கூடிய ஒரேயொரு அரசியல் நம்பிக்கையான பொறுப்புக் கூறலையும் கைநழுவிவிடுகின்ற நிலையை உருவாக்குவதற்கு காரணமாக இருந்த சுமந்திரன் ஊடகவியளாளர் மாநாட்டில் கூறுகிறார், 'வழங்கப்பட்ட மக்களின் சாட்சியங்கள் போதுமானதாக இல்லை, மக்கள் முழுமையான சாட்சியங்களை வழங்கி அந்த அறிக்கையைப் பலப்படுத்த முன் வர வேண்டும்' என்று. ஆனால் ஐ.நா புதிதாக சாட்சியங்களை வழங்கலாம் என அறிவிக்கவில்லை. அவர்களுடைய விசாரணை அறிக்கை ஒக்டோபர் மாதத்துடன் நிறைவடைந்தவிட்டது. ஆனால் தமிழர்களைத் திரும்பவும் ஏமாற்றி தாம் செய்த துரோகத்தை மூடிமறைப்பதற்கு மேற்கொள்கின்ற பொய்யை சுமந்திரன் கட்டவிழ்த்து விட்டிருக்கிறார். இந்த விடயங்களை சரியாகப் புரிந்து கொள்ளாதவரைக்கும் இப்படியே நாம் தொடர்ந்தும் ஏமாற்றப்படுவோம்.

முதலமைச்சர் விக்னேஸ்வரன் ஏனைய வடமாகாண சபை உறுப்பினர்களோடு ஒரு தீர்மானத்தை நிறைவேற்றியிருக்கின்றார். ஆனால் இந்தத் தீர்மானத்தை சிவாஜிலிங்கம் அவர்கள் முக்கியமான காலகட்டத்தில் முன்மொழிந்தார். உரிய நேரத்தில் முன்மொழிந்த போது தட்டிக் கழித்து, வியாக்கியானமும் கூறியிருந்தனர். இன அழிப்பு ஒன்று நடந்ததாக நாங்கள் கூற முடியாது, அது சட்டத்திற்கு முரணான விடயம். ஆகவே நாம் அதைக் கூறாமல், இன அழிப்புக்கு ஒப்பானது என்று ஒரு தீர்மானத்தை நிறைவேற்றினார். அதே விக்னேஸ்வரன் தான் இன்று, இது இன அழிப்புத்தான் என்று கூறியிருக்கின்றார். இடைப்பட்ட இந்தக் காலப்பகுதிக்குள் எந்த விதமான சட்டத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஆனாலும் இறுதியில் விக்னேஸ்வரன் மிகச் சிறந்த தீர்மானத்தை நிறைவேற்றியிருந்தார். இது 'பிழையான தரப்பால் நிறைவேற்றப்பட்ட சரியான தீர்மானம் எனினும் தீர்மானம் சிறந்த தீர்மானம் என்றபடியால் அதை நாம் வரவேற்றோம். எனினும் இரண்டு, மூன்று மாதங்களில் ஒரு பொதுத் தேர்தல் வரப்போகின்றது. அந்தப் பொதுத்தேர்தலுக்காகத் தான் இப்படிப்பட்ட ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்குமோ என்ற சந்தேகம் எழுகின்றது. உண்மையில் இந்த விடயத்தில் ஒரு மன மாற்றம் நடைபெற்றிருக்கும் என்றால் அதை எங்களுக்கு நிரூபித்துக் காட்ட வேண்டும். அதை நிரூபிக்கின்ற வகையில் இந்தத் தீர்மானத்திற்கு எதிராகச் செயற்படுகின்ற நபர்களைக் கட்சியை விட்டு அகற்ற வேண்டும். குறித்த தீர்மானத்தில், மகிந்த ராஜபக்ஷ அரசாங்கத்தை மட்டுமல்ல மைத்திரிபால சிறிசேனாவினுடைய அரசாங்கத்தையோ அல்லது எதிர்காலத்தில் வரப் போகின்ற வேறு சிங்களத் தலைமைகளையோ நாங்கள் நம்ப முடியாது என்று மிகத் தெளி வாகக் கூறப்பட்டிருக்கின்றது.

**"அந்தக் கடிதத்தில் கடைசிப் பந்தியில், எல்.எல்.ஆர்.சி தீர்மானங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டால் தமிழ் மக்களுடைய அரசியல் அபிலாசைகள் பூர்த்தியடையும்"**

சிங்கள தேசத்தின் சுதந்திர தினத்தில் கலந்து கொண்டு, அந்தத் துரோகத்தை நியாயப்படுத்துகின்ற நோக்கத்தோடு கூறப்பட்ட கருத்து என்னவென்றால், 'புதிய அரசாங்கம் தொடர்பாக எங்களுக்கு அதீத நம்பிக்கை இருக்கின்றது'. அந்த அடிப்படையில் தான் நாங்கள் இந்த சுதந்திர தினத்தில் கலந்து கொண்டோம்' என்று கூறிய தலைவர்களை இனங்கண்டு அகற்ற வேண்டும். அதன் மூலம் இத் தீர்மானம் தேர்தல் நோக்கில் நிறைவேற்றப்படவில்லை என்பதனை நிரூபிக்க வேண்டும். என்பதனைக் கூறியிருந்தோம். ஆனால் ஊடகங்கள் நாம் சொன்ன நிபந்தனைகளை வெளியிடாமல், நாம் ஒன்றாக இணையப் போகின்றோம் என்ற கருத்தை மட்டும் வெளியிட எமது மக்களும் குழம்பினார்கள். நாம் அந்தக் கருத்துக்களை வெளியிடக் காரணம் இருந்தது. கூட்டமைப்பினருடைய இரட்டை வேடத்தை அம்பலப்படுத்தவே நாம் அந்தக் கருத்தை வெளியிட்டிருந்தோம்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியோ, அகில இலங்கைத் தமிழ் காங்ரஸ்சோ வெறுமனே தேர்தலை மையப்படுத்தி செயற்படும் கட்சிகள் அல்ல, தேர்தலில் வெற்றி பெறுவது தான் எம்முடைய நோக்கமாக இருந்தால் நாம் கூட்டமைப்புக்குள்ளே இருந்து கொண்டு பதவிகளைப் பெற்று சொகுசாக வாழ்ந்து கொண்டிருக்கலாம்.

அதேவேளையில் நாம் சிங்கள தேசத்திற்கு மாறானவர்களும் அல்ல. எங்களைப் பொறுத்தவரை சிங்கள தேசம் வளரவேண்டும், முன்னேற வேண்டும். அதில் மாற்றுக் கருத்துக்கிடையாது. ஆனால் நீங்கள் வளர்வதற்கு மேலாக எமது தேசமும், எமது பொருளாதாரமும் வளர்சியடைய வேண்டும் என நாங்கள் செயற்படுவோம். அதில் நீங்கள் தலையிட முடியாது. அதற்கு சிங்கள தேசமோ அல்லது வேறு சக்தியோ தடையாக இருக்குமானால் அதைத் தாண்டியும் செயற்படத் தயங்கமாட்டோம். தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியும், அகில இலங்கைத் தமிழ் காங்கிரஸ் கட்சியும் இனவாதத்தைப் பேசுகிறார்கள் என்று ஒரு சிலர் விமர்சனம் செய்கிறார்கள். ஆனால் அது உண்மையல்ல. இலங்கை என்ற பொது அடையாளத்தைப் பேணுவதற்கு, நாம் இலங்கையர் என்று கூறுவதற்கு சில நிபந்தனைகள் இருக்கின்றன. இன்றைய நிலையில் எங்களுடைய கருத்துக்கோ, எமது விருப்பங்களுக்கோ இடமில்லை. இப்படிப்பட்ட போலிப் பொது அடையாளத்தைப் பேணுவதற்கு நாம் தயாரில்லை. ●

# உங்கள் ஆரோக்கியம்

## தாயாகப் போகும் உங்களுக்கு –3

- டாக்டர் எம்.கே.முருகானந்தன் -

கர்ப்பமாயிருக்கும் காலத்தில் உங்கள் உடலை நல்ல ஆரோக்கியத்துடன் வைத்திருப்பது உங்களுக்கு மாத்திரமன்றி உங்கள் வயிற்றில் வளரும் குழந்தையின் வளர்ச்சிக்கும் முக்கியமானது.

எனவே கர்ப்பம் தரித்ததை உணர்ந்தவுடனேயே உங்கள் குடும்ப வைத்தியரிடமோ மகப்பேற்று வைத்திய நிபுணரிடமோ சென்று உங்கள் ஆரோக்கியத்தைப் பேணுவதற்கான ஆலோசனைகளைக் கேட்டு நடப்பதுடன், அவர் கொடுக்கும் இரும்புச்சத்து, கல்சியம் சத்து, விற்றமின் சத்து நிறைந்த மருந்துகளை ஒழுங்காக, அவர் கூறியபடி பாவித்து வாருங்கள்.

அத்துடன் அவர் உங்களது, பொதுவான உடல் ஆரோக்கியம் நிறை, இரத்த அழுத்தம் (Blood Pressure), கர்ப்பத்தின் வளர்ச்சி ஆகியவற்றையும் ஒவ்வொரு முறையும்பரிசோதித்துக் கணித்து, வேண்டிய ஆலோசனைகளை வழங்குவார்.

உங்கள் இரத்தத்தையும் (Blood Group), நல்இரத்த அளவு (Haemoglobin Level), சிறுநீர் (சீனி, புரதம் இருக்கிறதா என அறிய) ஆகிய இப்பரிசோதனைகளை அவர் பொருத்தமான நேரத்தில் செய்வார். தேவை ஏற்படின் இவற்றை மீண்டும் மீண்டும் பரிசோதிக்கக் கூடும்.

ஆரம்ப ஆறு மாதங்களில் மாத மொருமுறையும், பின்னர் மாதம் இரு முறையும், கடைசி மாதத்தில் வாரமொரு முறையும் உங்கள் வைத்தியரிடம் பரிசோதனைக்காகச் செல்லுங்கள்.

அத்துடன் நாங்கள் இங்கு தரும் ஆரோக்கியம் பற்றிய சில பொதுவான குறிப்புகளும் உங்களுக்குப் பெரிதும் பயன்படக்கூடும்.

### உணவு


உங்கள் ஆரோக்கியத்திற்கும் உங்கள் கருவின் வளர்ச்சிக்குமாகச் சத்தான ஆகாரங்களை போதியளவு உண்பது முக்கியம்.


கர்ப்பமாயிருக்கும் போது சத்தான உணவுகளை உட்கொண்டால் குழந்தையின் நிறை கூடிவிடும். அதனால் பிரசவம் கஸ்டம் ஆகிவிடும் என்ற கருத்து சில இடங்களில் பரவியிருக்கிறது. இதில் உண்மை யில்லை கர்ப்பத்திலிருக்கும் குழந்தையின் நிறை அதிகமாக அதிகரிப்பதற்கு உணவு ஒரு காரணமல்ல. பரம்பரைக்குண அம்சம் போன்ற பல்வேறு காரணங்களாலேயே அது ஏற்படுகிறது. சில வேளைகளில் நீரிழிவு போன்ற நோய்கள் காரணமாகலாம்.

உண்மையில் தாய் போதியளவு உணவு உட்கொள்ளாவிட்டால் பிறக்கப் போகும் குழந்தை போதியளவு சதையின்றி நிறை குறைந்து ஆரோக்கியம் கெட்டுப் பிறக்கப்போவது தான் உண்மை. இப்படியான குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது கஸ்டம், நோய்களை எதிர்க்கும் சக்தியின்றி அற்ப ஆயுளிலேயே அவை மறையக்கூடும். எனவே மற்றவர்களின் பிழையான கருத்துக்களுக்குப் பலியாகாது சத்தான உணவுகளை உட்கொள்ளுங்கள்.

இன்னுமொரு பிழையான கருத்து உங்கள் முன் வைக்கப்படக்கூடும். உங்களுக்கும், கருவிற்குமாகச் சேர்த்து இரண்டு மடங்கு உணவு உட்கொள்ளப்பட வேண்டும் என்பதே அது. இதிலும் எந்தவித உண்மையும் இல்லை. போதிய உணவை உட்கொள்ளாது விடுவது எவ்வளவு பாதிப்பை ஏற்படுத்துமோ, அதேயளவு பாதிப்பை, மித மிஞ்சிய உணவும் ஏற்படுத்தும்.

எனவே உண்ணும் உணவில் அளவை அதிகரிப்பது அவசியமல்ல. ஆனால் பொருத்தமான சத்துள்ள ஆகாரங்களை தேவைக் கேற்ப உண்ண வேண்டும். அத்துடன் இலகுவில் சமிபாடு அடையக் கூடிய உணவு வகைகளை உண்ணுங்கள்.





சரி பிழை

உடல் வளர்ச்சிக்கு அவசியமான புரதசத்துச் செறிந்த உணவு வகைகளான பால், முட்டை, இறைச்சி, மீன், சோயா, பயறு, பருப்புவகைகளைப்போதியளவுஉண்ணுங்கள். பால்முட்டையுடன் நெத்தலி, குரக்கன், எள்போன்ற உணவுகளில் கல்சியச் சத்து நிறைய உண்டு. இவற்றையும் உணவில் சேருங்கள்.

காய்கறி வகைகள், பசுங்கீரை வகைகள், இலை வகைகள் ஆகியவற்றைத் தினமும் உணவில் சேருங்கள். அத்துடன் பசுமையான பழவகைகளையும் உண்ணுங்கள். பப்பாளிப்பழம் கருச்சிதைவை ஏற்படுத்தலாம் என்ற நம்பிக்கை பலரிடமும் இருப்பதைக் காணலாம். இது தவறானது எனவே பப்பாளிப்பழம் தவிர்க்கப்பட வேண்டியது அல்ல.

இவை உங்களுக்கு கர்ப்ப காலத்தில் அவசியமான விற்றமின் சத்துக்களையும், இரும்புச் சத்துப் போன்ற கனிப் பொருட் சத்துக்களையும் தாராளமாகக் கொடுக்கும் அத்துடன் மலச்சிக்கல் ஏற்படாமல் தடுக்கவும் இவை உதவும்.

எண்ணெய், கொழுப்பு பட்டர் போன்றவற்றையும் சொக்கிலேட், சீனி போன்ற இனிப்பு வகைகளையும் அதிகம் உண்ணாதீர்கள். இவை உங்களின் உடல் எடையை அதீதமாக உயர்த்தி விடும்.

### நீராகாரம்:

தினமும் நிறையத் தண்ணீர் அருந்துங்கள். ஆறு கிளாஸ் வரை அருந்துங்கள். பச்சை தண்ணீர் கூடாது. அது தொற்று நோய்களைப் பரப்பும் எனவே கொதித்து ஆறிய நீரே நல்லது. எலுமிச்சஞ்சாறு, தோடஞ்சாறு, பாஷன் பழச்சாறு போன்ற பழரசங்கள் அருந்துவதும் நல்லது.

தினமும் ஒரு பைந் பாலாவது குடியுங்கள்.

போதிய நீராகாரம் எடுப்பது உங்கள் உடலைக்குளிர்ச்சியாகவும், மலர்ச்சியாகவும் வைத்திருக்கும் அத்துடன் மலச்சிக்கல் ஏற்படாமல் இருக்கவும் உதவும். சலக்கடுப்புப் போன்ற நோய்கள் ஏற்படுவதையும் தடுக்கும்.

### உடற்பயிற்சி

கர்ப்பமாயிருக்கும் காலத்தில் போதிய வேலைகளைச் செய்யாமல் சோம்பி இருக்காதீர்கள். சோம்பியிருந்தால் தசைநார்கள் போதிய பயிற்சியின்றிப் பிரசவ நேரத்தில் சரியானபடி ஒத்துழைக்காது.

எனவே வீட்டு வேலைகளை நீங்களே செய்யுங்கள். இது நல்ல உடற் பயிற்சிக்கு ஈடாகும். போதிய வீட்டு வேலைகள் இல்லாவிடில் அல்லது வீட்டு வேலை செய்ய வேண்டிய தேவை ஏற்படாத விடத்தில், தினமும் ஒரு மணி நேரமாவது திறந்தவெளியில் உலாவுங்கள். அல்லது எளிதான உடற்பயிச்சி செய்யுங்கள்.

**உண்மையில் தாய் போதியளவு உணவு உட்கொள்ளா விட்டால் பிறக்கப் போகும் குழந்தை போதியளவு சதையின்றி நிறை குறைந்து ஆரோக்கியம் கெட்டுப்பிறக்கப்போவது தான் உண்மை. இப்படியான குழந்தைகளை வளர்த்து ஆளாக்குவது கஸ்டம், நோய்களை எதிர்க்கும் சக்தியின்றி அற்ப ஆயுளிலேயே அவை மறையக்கூடும். எனவே மற்றவர்களின் பிழையான கருத்துக்களுக்குப் பலியா- காது சத்தான உணவுகளை உட்கொள்ளுங்கள்.**

வெளியே வேறு தொழிலுக்குச் செல்லும் பெண்கள் தமது தொழிலைத் தொடர்ந்து செய்யலாமா அல்லது நிறுத்த வேண்டுமா? நிறுத்தவேண்டுமாயின் எப்பொழுது நிறுத்துவது போன்ற விஷயங்களுக்கு தங்களது வைத்தியரின் ஆலோசனைப்படி நடப்பதே பொருத்தமானது.

பாரமான பொருட்களைச் சுமப்பதைத் தவிர்த்துக்கொள்ளுங்கள். நீண்ட நேரம் நிற்பதையும் தவிர்த்துக்கொள்ளுங்கள்.

### வளையாதீர்கள் நிமிருங்கள்:

கர்ப்பிணியாக இருக்கும் நேரத்தில், வயிற்றில் வளரும் குழந்தை, உங்களது சில தசைநார்த் தொகுதிகளுக்கு மேலதிகப் பளுவைக் கொடுக்கும். முக்கியமாக முதுகு, நாரி, தசைகள் பாதிக்கப்படக்கூடும். இதனால் நீங்கள் பின்பக்கமாக வளையப் பார்ப்பீர்கள்.

கதிரையில் உட்காரும்போது முதுகையும், நாரியையும் வளையவிடாது, அவை கதிரையின் சார்மனையில் படுமாறு நிமிர்ந்து, மேல் படத்தில் காட்டியபடி உட்காருங்கள், அத்துடன் கால்களைக் கூடியவரை தொங்கவிடாது, உயர்த்தி நீட்டி வைத்துக்கொள்ளுங்கள்.

நிற்கும்போது உடலின் பாரத்தை உங்கள் இருகால்களிலும் சமனாகப் பொறுக்குமாறு நிமிர்ந்து நில்லுங்கள்.

கீழே இருக்கும் ஒரு பொருளைத் தூக்கும்போது அல்லது ஒரு குழந்தையைத் தூக்கும்போது முதுகை வளைத்துக் குனிந்து தூக்காதீர்கள். ஒரு காலை மற்றக் காலிலும் சற்று முன் வைத்து, முதுகை வளைக்காது முழங்கால்களை மடித்துச் சிறிது உட்கார்ந்து தூக்குங்கள் உயர்ந்த குதிச் செருப்புக்களை அணிவதும் உகந்தது அல்ல.

(தொடரும்.....)

# யாழில் மாசடைந்த நீர்


தற்பொழுது எங்கள் கிணறுகளில் கழிவு எண்ணெய் தான் உள்ளது. எங்களால் நீரை பருகவோ அல்லது விவசாயம் செய்யவோ இயலாதுள்ளது. இதுவொரு மாபெரும் பிரச்சினையாகும். தமிழ்த் தேசிய கூட்டமைப்போ அல்லது தெற்கிலுள்ள தலைமைகளோ இப்பிரச்சினை குறித்து கவனம் செலுத்துவதில்லையென யாழிலிருந்து வதீஷ் வருணன் எங்களுக்கு அறிவித்துள்ளார். நாம் அங்குள்ள குடிநீர் பிரச்சினை தொடர்பாக ஆராய்ந்துப் பார்ப்போம்.

**சுன்னாகம்**

சுன்னாகம் யாழ்ப்பாணத்தில் மத்திய நிலையத்தில் அமையப்பெற்றுள்ளது. யாழ்-காங்கேசன்துறை பாதையின் இடைநடுவே நாம் சந்திக்கின்ற இச்சிறிய நகரை அண்மித்த பகுதிகள் யாழ்குடாநாட்டிலுள்ள வளமான பூமியாகும். இவ்வரண்ட பூமியில் தூசு வானளவிற்கு மேல் எழும். இடையிடையே சூரியனை மறைத்தவாறு நீண்டு உயர்ந்தெழுந்துள்ள பனை மரங்கள். இங்குள்ள மக்களின் வாழ்வாதாரம், விவசாயம். விவசாயத்திற்கான நீர் கிணறுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படுகின்றது. கடந்த ஒரு சில மாதங்களாக இக்கிணறுகளிலிருந்து பெற்றுக்கொள்ளப்படும் நீர் கருமை நிறமாகவும் எண்ணெய்த் தன்மை வாய்ந்ததாகவும் உள்ளது. இந்நீரை உபயோகிப்பதனால் விவசாயம் பாழடைந்து செல்கின்றது. இத் தண்ணீரில் நீராடுவதனால் சரும நோய்கள், சிறுநீரக மற்றும் சுவாசக் கோளாறு நோய்கள் ஏற்படுவதற்கான ஆபத்தான நிலையுள்ளது. கொழும்பிலுள்ள ஆட்சியாளர்கள் இப்பிரச்சினை தொடர்பாக சிறிதளவேனும் பொருட்படுத்தவேயில்லை. இவ்வாறானதோர் நிலையிலேயே வடக்கினை ஆளும் கூட்டமைப்பினரும் உள்ளனர். மக்கள் கடுமையான கோபத்தில் உள்ளார்கள் அதனால் அவர்கள் தொடர்ச்சியாக போராட்டங்களில் யாழ் முதல் கொழும்பு வெள்ளவத்தை தொடர்கின்றார்கள்.

**நீரை நச்சுத்தன்மையாக்கியது யார்?**

யாழ். சுன்னாகத்தில் ஏழாலை, உடுவில், மல்லாகம், தெல்லிப்பழை ஆகிய நான்கு கிராமங்களில் வாழ்கின்ற மக்களின் கருத்துப்படி இப்பிரச்சினைக்கு மூல காரணி வடக்கிலுள்ள தனியார் மின்னுற்பத்தி நிலையமாகும். இத் தனியார் மின்னுற்பத்தி நிலையம் சுன்னாகத்தில் அமைந்துள்ளது. 2007 ஆம் ஆண்டு யாழிற்கு வருகைத் தந்த எம்.டீ.டி வோக்கர்ஸ் நிறுவனம் 24 மெகா வோட் கனிம எண்ணெய் சக்தி வாய்ந்த மின்சார நிலையத்தை உருவாக்கியதுடன் அதனை 2009 ஆம் ஆண்டு மக்கள் பாவனைக்காகத் திறந்து வைத்தது. இந்நிறுவனம் மின்சார உற்பத்தியின் பொழுது கனிம எண்ணெய்யின் ஒரு தொகுதியை கழிவு எண்ணெய்யாக வெளியேற்றுகின்றது. யாழ் மக்களின் கருத்துப்படி ஒரு ஆண்டிற்கு 80,000 லீட்டர் அளவிலான கழிவு எண்ணெய் நிலத்தின் கீழ் வெளியேற்றப்படுகின்றது. அவ்வாறு வெளியேற்றப்படும் எண்ணெய் சுன்னாகம் பிரதேசத்திலுள்ள அனைத்து



நன்றி – ராவயா
ஆக்கம்– கே.சன்ஜிவ்
தமிழில் – நட்டாஷா ராஜ்குமார்

கிணற்று நீருடனும் கலந்து விடுகின்றது. நீர் மாதிரிகளை பரிசோதித்த அதிகாரிகள் நீருடன் கழிவு எண்ணெய் கலந்துள்ளமையினை உறுதிசெய்துள்ளார்கள். இதனை கண்களால் பார்த்தவுடன் எந்தவொரு நபரினாலும் உறுதிசெய்ய இயலும் என்ற போதும் குறித்த நிறுவனமானது தாங்கள் தங்களது கழிவு எண்ணெய்யை விற்பனை செய்வதாகக் கூறுகின்றது. ஆனால் அங்குள்ள மக்கள் நிறுவனம் கூறுவது பொய்யான தகவல் என்றும் இவ்வளவு பாரியதொகை கழிவு எண்ணெய்யை கொள்வனவு செய்ய யாழில் முகவர்கள் இல்லையென்றும் கூறுகின்றார்கள்.

இவ்வார்பாட்டத்தினை வருன் வதீஷ்வரன் என்பவரே ஒழுங்குச்செய்திருந்தார். ஊடகங்களிற்கு கருத்து வெளியிடுகையில் அவர் கூறியதாவது யாழிலுள்ள நீர் பிரச்சினை தொடர்பாக யாழ்பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்கள் முன்னெடுத்த ஆய்வு அறிக்கைகளை மக்கள் பார்வைக்காக வெளியிட வேண்டும். இவ்வறிக்கைகளை மறைப்பதன் மூலமாக புலப்படுவது வடக்கிலுள்ள நீர் மாசடைவு நாம் எண்ணுவதைக் காட்டிலும் ஆபத்தானதா? என வினவினார். இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான இளந்தலைமுறையினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப்பிரச்சினை தொடர்பாக காட்டிய ஆர்வம் தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளனர். வடக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தேவை தமிழ் தேசிய கூட்டமைப்பு தலைவர்களிடம் இல்லை. அவர்கள் அரசியல் இலாபத்தின் பொருட்டு பிரச்சினைகளை அவ்வாறே விட்டுவிடுகின்றனர் என மேலும் தெரிவித்தனர்.

**பிரதான ஆபத்து**

நீர் பிரச்சினைக்கு முகங்கொடுத்த மக்கள் தொடர்பாக, அங்குள்ள புவியியல் காரணிகள் தொடர்பாக தற்சமயம் பல்வேறுபட்ட உத்தியோகப்பற்றற்ற அறிக்கைகள் வெளிவருகின்றன. வெளிவந்துள்ள ஒரு அறிக்கையின் படி 16 சதுர கிலோமீற்றர் நிலப்பரப்பு நீர் மாசடைந்து விட்டதாகவும் இதன் காரணமாக 35,000 நபர்கள் இன்னல்களிற்கு முகங்கொடுப்பதாகவும் கூறப்படுகின்றது. யாழ்ப்பாண பிரதேசத்திலுள்ள நிலத்தடி நீர் மாசு தொடர்பாக கல்விமான்கள் இனிவரும் காலங்களில் இவ்வாறு மாசடைந்த நீர் பகுதியளவிலோ அல்லது முழுமையாகவோ இலங்கை முழுவதும் நிலக்கீழ் நீருடன் கலந்துவிடுவதற்கான சந்தர்ப்பம் உள்ளதாக எச்சரிக்கை விடுத்தனர். தற்சமயம் நீர் மாசடைதல் மூலமாக இப்பூமி பரவலாக பாதிப்படைந்துள்ளது. யாழ்ப்பாணத்திற்கு அண்டிய மாவட்டங்கள் இலங்கையின் ஏனைய மாவட்டங்கள் நீர்பற்றாக்குறையிற்கு முகங்கொடுக்கின்ற இச்சந்தர்ப்பத்தில் இந்நீர் மாசடைதல் எதிர்காலத்தில் மாபெரும் பிரச்சினையாக உருவெடுக்க சந்தர்ப்பம் உள்ளது. தற்சமயம் நீர் மாசடைதல் பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்ற சுன்னாகம் மற்றும் அதனை அண்டிய பிரதேசங்களில் உள்ள மக்கள் நீதிமன்றில் தாக்கல் செய்த வழக்கின் அடிப்படையில் வடக்கிலுள்ள மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடுகள் தற்காலிகமாக நிறுத்திவைக்கும்படி உத்தரவிடப்பட்டுள்ளது. இத்தீர்மானம் மூலமாக இப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டப்போவதில்லை ஏனெனில் இப்பிரச்சினை தொடர்பாக மின்னுற்பத்தி நிறுவனத்தின் நிலைப்பாடு மக்களின் கருத்தினை காட்டிலும் முற்றிலும் மாறுபட்டுள்ளது. 2012 ஆம் ஆண்டு தேசிய மின்சக்தித் திட்டம் வடக்கிற்கு விஸ்தரிக்கப்பட்டதன் பின்னர் இவ்வாறானதோர் மின்னுற்பத்தி நிலையத்தின் செயற்பாடு தேவையில்லையென மக்கள் தெரிவிக்கின்றார்கள்.

**நிறுவனத்தின் நிலைப்பாடு**

எம்.டீ.டி வோக்கர்ஸ் நிறுவனத்திற்கு சொந்தமான வடக்கு மின்னுற்பத்தி நியைம் தம்முடைய சுன்னாகம் மின்னுற்பத்தி நிலையம் மற்றும் அவ் மின்னுற்பத்தி நிலையத்தினால் மக்கள் எதிர்கொள்கின்ற குடிநீர் பிரச்சிகையினை பற்றிக் கருத்துத் தெரிவித்துள்ளார். நிறுவனத்தின் பிரதம அதிகாரியான திரு. லால் பெரேரா விடுத்துள்ள ஊடக அறிக்கையில் கீழ்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

குடிநீர் பிரச்சினைக்கும் எங்கள் நிறுவனத்திற்கும் எவ்வித தொடர்புகளும் இல்லை தொடர்பு இருப்பதாக ஒருவராலேனும் உறுதிச்செய்யப்படவுமில்லை. எங்கள் நிறுவனத்தின் புகழிற்கு அபகீர்த்தி ஏற்படுத்தும் முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன. கடுமையான போர் மூண்டிருந்த காலப் பகுதியில் வடக்கிற்கு வருகைத் தந்து மக்களிற்கு அளப்பரிய சேவையாற்றியதாகவும் தங்கள் நிலப்பரப்பிற்கு அப்பாலுள்ள பிரச்சினைகளிற்கு தங்களது நிறுவனம் எவ்வாறு பொறுப்பு கூற இயலுமென வினவுகின்ற இப்பிரதம அதிகாரி இக்குடிநீர்ப் பிரச்சினை யுத்தத்திற்கு முன்னரே தோன்றிய பிரச்சினையாகக் கூறுகின்றார்.

எது எவ்வாறாயினும் இக்குடிநீரிற்குள் விஷம் கலந்த வரலாறு மற்றும் இத் திட்டத்திலுள்ள செயற்பாடு முறைமை ஆகியன தொடர்பான ஏது காரணிகளை ஆராஃயந்து பார்க்கும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திற்கும், மாகாண சபைக்கும் மாத்திரமே உள்ளது. இவ்விரு தரப்பினரும் உடனடியாக இப்பிரச்சினையில் தலையிட்டு உண்மையினைக் கண்டறிய வேண்டும். யாழ்ப்பாணத்தில் அல்லது முழு இலங்கையினதும் நிலக்கீழ் நீர் மாசடைவதற்கு முன்னரே இப்பிரச்சினையிற்கு தீர்வு எட்டப்பட்டு முடிவுகள் நடைமுறைப் படுத்தப்படவேண்டும். உரிய விசாரணைகளின் மூலமாக தற்பொழுது மாசடைந்துள்ள நிலக்கீழ் நீரைச் சுத்தப்படுத்த அல்லது மேலும் மாசடைவதனை தடுப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டும். இவ்வாறானதோர் நடவடிக்கைகள் இன்னும் முன்னெடுக்கப்படவில்லை.

**ஆய்வு அறிக்கை எங்கே?**

வடக்கில் காணப்படுகின்ற இந்நீர் பிரச்சினைக்குத் தீர்வு வேண்டி கடந்த 15ம் திகதி வெள்ளவத்தை பகுதியில் சிங்களம் , தமிழ் மற்றும் முஸ்லிம் இளைஞர், யுவதிகள் அதிகளவில் ஒன்றுதிரண்டு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தார்கள். இவ்ஆர்ப்பாட்டத்தில் பங்கு கொண்ட பெரும்பாலானோர் Facebook, Twitter போன்ற சமூக வலைத்தளங்களை உபயோகப்

(16 ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்த் தேசிய நலனுக்கு உ
# அடையாளம் காணவேண்டு

**கே: கடந்த காலத்தில் தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தின் குறியீடாக யாழ் பல்கலைக் கழகம் இருக்கிறது என்பது வரலாறு. இந்நிலையில் யாழ். பல்கலைக்கழகம் நீண்டகால இடைவெளியின் பின்னர் ஜனநாயகப் போராட்டம் ஒன்றினை கடந்த 26 ஆம் திகதி நடாத்தியுள்ளது. பல்கலைக்கழக சமூகத்தினுடைய இந்தப் போராட்டத்தின் முக்கியத்துவத்தையும் அதன் தேவையையும் பற்றி என்ன கருதுகின்றீர்கள்?**



**ப:** யாழ்.பல்கலைக் கழக சமூகமும் யாழ்ப்பாணத்திலுள்ள பொது அமைப்புக்களும் ஒன்றிணைந்து இறுதிப் போரில் நடாத்தப்பட்ட இனப்படுகொலை தொடர்பில் ஐ.நா இதுவரை மேற்கொண்டு வந்த விசாரணை அறிக்கையை வருகின்ற மார்ச் மாதம் திட்டமிட்டபடி சமர்ப்பிக்க வேண்டும் என்ற ஒரு கோரிக்கையை முன்வைத்து நாம் யாழ் பல்கலைக் கழகத்திலிருந்து நல்லூர் முன்றல் வரை ஒரு மாபெரும் கவனயீர்ப்புப் போராட்டத்தை நடாத்தினோம். நாம் இனப்படுகொலை என்று கருதுவதை ஐ.நா இனப்படுகொலை எனக் கருதாமல் போர்க் குற்றம் என்ற ரீதியிலேயே முன்னெடுத்து வருகின்றது. இந்தப் போர்க் குற்றம் தொடர்பான அறிக்கையை திட்டமிட்டபடி இம்முறை சமர்ப்பிக்காமல் அதைக் காலந்தாழ்த்தி சமர்ப்பிக்க உள்ளதாக அறிந்ததையிட்டு உலகத் தமிழர்கள் அனைவரும் பெரும் ஏமாற்றத்தையும் துன்பத்தையும் அடைந்த நிலையில் அந்த அறிக்கையை திட்டமிட்டபடி வருகின்ற மார்ச் மாதம் சமர்ப்பிக்கவேண்டும் என்பதை வலியுறுத்தி நாம் இந்தப் போராட்டத்தை நடத்தினோம்.

இந்தப் போராட்டம் பல்கலைக்கழகத்திலுள்ள மாணவர் சங்கங்கள், ஆசிரியர் சங்கங்கள், கல்வி சாரா ஊழியர்கள் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் சிவில் சமூக அமையம் உள்ளிட்ட பல சிவில் அமைப்புக்கள் இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து கலந்து கொண்டிருந்தன. எமது இந்த குரல் மேற்குலகிலும் ஐ.நா தரப்பிலும் அழுத்தத்தினை ஏற்படுத்தும் என நாம் எதிர்பார்க்கின்றோம்.

தமிழ் மக்களுக்கு இழைக்கப்பட்ட இன்னல்கள், கொடுமைகள், கொடூரங்கள் தொடர்பில் சிங்களக் குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டமை, சிறையில் வாடும் அரசியல் கைதிகள் விவகாரம், காணாமல் போனோர் விவகாரங்கள் தொடர்பில் தொடர்ந்தும் மௌனமாக இருக்க முடியாது. தமிழ் மக்களின் இந்தப் பிரச்சினைகளை முன்னெடுக்க வேண்டிய தார்மீகப் பொறுப்பு உண்டு உயர்கல்விப் பீடமாக இருக்கக் கூடிய யாழ். பல்கலைக்கழகம் தமிழர்களின் விடுதலைக்காக குரல்கொடுத்து அவர்களுக்கான ஒரு விடிவைப் பெற்றுத் தருவதில் தனது பங்கினை ஏற்கும் என நம்புகின்றோம்.

**கே: சமகால அரசியல் சூழல் தாயகத்தில் எவ்வாறு உள்ளது?**

**ப:** 2009 வரை தமிழ் இனத்தின் விடுதலை தொடர்பில் நாம் கடுமையாக உழைக்க வேண்டிய தேவை நமக்கு இருக்கவில்லை ஏனென்றால் 2009 வரை தமிழ் மக்களின் விடுதலைக்காகவும் நலனுக்காகவும் தமிழீழ விடுதலைப்புலிகள் குறித்த ஒரு உறுதியான போராட்டத்தை நடாத்தி வந்தார்கள். 2009 இன் பின்னர் தமிழ் மக்களை வழி நடத்துவதற்கு ஒரு சரியான தலைமைத்துவம் இல்லாத நிலையில் தமிழ் மக்களுடைய விடுதலையோடு தொடர்புடைய விவகாரங்கள் அல்லாடிக் கொண்டிருக்கின்றது. இறுதிப் போரில் முள்ளிவாய்க்காலில் 150,000ற்கு மேற்பட்ட மக்கள் கொல்லப்பட்டிருக்கிறார்கள் பல்லாயிரக் கணக்கான இளைஞர்கள் சித்திரவதை செய்து கொல்லப்பட்டிருக்கிறார்கள். பல நூற்றுக் கணக்கான பெண்கள் பாலியல் வன்முறைக்கு உட்படுத்தப்பட்டு சித்திரவதைக்கு உள்ளாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இவ்வளவு அனர்த்தங்கள் நிகழ்ந்ததன் பிற்பாடும் எங்களுக்கு எந்தவித நீதியும் இதுவரை வழங்கப்படவில்லை. உண்மையில் இறுதிப் போரில் இடம் பெற்றது இனப்படுகொலை தான் என்பதில் இரண்டாவது கருத்துக்கு இடமில்லை. ஒரு அரசு திட்டமிட்டு ஒரு இனத்தின் கணிசமானளவு எண்ணிக்கையானவர்களை மிகவும் கொடூரமான முறையிலும் கோரமான முறையிலும் கொலை செய்திருக்கிறது. இங்கு நடாத்தப்பட்டது இனப்படுகொலை என்பது உள்ளூரிலும் வெளியிலுள்ள சர்வதேச நிறுவனங்கள் மனிதாபிமான அமைப்புக்கள் ஐ.நா உள்ளிட்ட நிறுவனங்கள் அமெரிக்கா போன்ற நாடுகள் என்பவற்றிற்கு நன்றாகத் தெரியும். ஆனால் இது தொடர்பில் சரியான விசாரணைகள் எதுவும் நடத்தப்படவில்லை. எங்களுக்கு இழைக்கப்பட்ட இந்த அநீதி தொடர்பில் நாங்கள் எல்லோரும் அணி திரண்டு ஒன்றாக குரல் கொடுத்தாலே ஒழிய இந்த விவகாரம் சர்வதேசத்தாலோ அல்லது ஐ.நாவினாலோ நாங்கள் விரும்புகின்ற திசையில் எடுத்துச் செல்லப்படும் என்று எதிர்பார்க்க முடியாது.

எங்களுடைய விவகாரம் சர்வதேச பூகோள நலன்களுக்குட்பட்டு கையாளப்படுகிறது. எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகளுக்கு நீதி கிடைக்க வேண்டுமாக இருந்தால், மீண்டும் ஒரு தடவை எங்களுடைய தேசத்தில் இது போன்ற ஒரு அனர்த்தத்தை நாம் மீண்டும் சந்திக்காமல் இருக்க வேண்டுமாக இருந்தால் எங்களுக்கு நிரந்தரமான அரசியல் தீர்வு ஒன்று கிடைக்கவேண்டும். அந்த அரசியல்தீர்வென்பது நிகழ்ந்து போன இனப்படுகொலையானது ஐ.நா சபை மூலம் நிரூபிக்கப்பட்டு குற்றத்திற்கான தண்டனை வழங்கப்பட்டு, அவ்வாறு இன அழிப்புக்குள்ளான இனத்திற்கு ஐ.நா சட்ட விதிகளின்படி என்ன தீர்வோ அது கிடைக்க வேண்டும். சர்வதேச விசாரணை ஊடாக மட்டும் தான் அது சாத்தியமாகும். அத்தகைய ஒரு அனர்த்தம் மீண்டும் நிகழாமைக்குரிய அரசியல் ரீதியான பாதுகாப்பு எங்களுக்குக் கிடைக்கும்.

அந்த இலக்கோடு தமிழர்களாகிய நாம் அனைவரும் ஒருமித்த கருத்தோடு உயிர் மூச்சாக எங்கள் உரிமைக்காக தொடர்ந்தும் குரல்கொடுக்க வேண்டும் உரிமையைப் பெற்றுக்கொள்வது எங்களுடைய கைகளில் தான் இருக்கிறது. மேற்குலகம் இலங்கையில் ஆட்சி மாற்றம் ஏற்பட்டதன் பிற்பாடு மார்ச்சில் வெளிவர வேண்டிய போர்க்குற்றம் தொடர்பான அறிக்கையை பின்தள்ளி இருப்பது பெரும் ஏமாற்றம். எங்களுடைய விவகாரம் எவ்வளவு தூரம் மேற்குலகத்தினாலும் சர்வதேச அமைப்புக்களாலும் தங்களுக்குச் சாதகமான வகையில் முன்னெடுக்கப்படுகிறது என்பது கண் முன்னே எங்களுக்குப் பாடமாக நிகழ்ந்திருக்கின்றது. எங்களுடைய கால்களில் நின்று எமது உரிமைகளுக்காக அனைவரும் ஒருமித்த கருத்தோடு கொள்கையோடு போராட வேண்டிய இக்கட்டான நிலையில் நாம் இருக்கின்றோம். எமக்கு ஏற்பட்ட அநீதிகளுக்கு குரல் கொடுக்க வேண்டிய கடப்பாட்டில் நாங்கள் இருக்கின்றோம்.

இந்தத் தார்மீகக் கடமைக்கான தலைமை ஏற்று நடத்துவதற்கு யாழ்.பல்கலைக் கழகம் எப்போதும் தயாராக இருந்து வந்திருக்கிறது. நாம் கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இந்தத் தமிழ் மக்களின் பல்வேறுபட்ட பிரச்சினைகளுக்கு குரல் கொடுத்து இருக்கின்றோம். தமிழ் மக்களின் விடிவுக்காக பல்வேறு தருணங்களில் பலபோராட்டங்களை தலைமை தாங்கி நடாத்தியிருக்கின்றோம். இனிவரும் காலங்களில் இந்த இனத்துக்கு எதிராக இழைக்

# உழைக்கின்ற சக்திகளை

# டும்.

கலாநிதி செ.ரவீந்திரன்
யாழ்.பல்கலைக்கழக புவியியல் துறை விரிவுரையாளர்.

கப்படும் பல்வேறு அனர்த்தங்களை, மனித உரிமை மீறல்களை, இனப்படுகொலை தொடர்பில் நாம் அதற்கு எதிராக குரல் கொடுப்பதற்கும் போராடுவதற்கும் நாம் இந்த சமூகத்தை வழிநடத்திக் கொண்டு செல்வதற்கு தயராக இருக்கின்றோம்.

**கே: தமிழ்த் தலைமைகளுக்குள் இருக்கும் முரண்பாடுகளைக் களைந்து ஒன்றாகச் செயற்படக் கூடிய வாய்ப்பு இருக்குமா?**

**ப:** பொதுவாக மக்கள் ஈழத்திலும் சரி, புலம் பெயர் நாடுகளிலும் சரி நேர்மையாக தமிழ்த் தேசிய நலனுக்கு உழைக்கின்ற சக்திகள் யார் என்பதை முதலில் அடையாளம் காணவேண்டும். அவ்வாறு இனங்காண்பவர்களை பலமுள்ளவர்களாக நாங்கள் தயார்ப்படுத்த வேண்டும். அவர்களுக்குப் பின்னால் அணிதிரள வேண்டும். உண்மையில் கடந்த காலங்களில் தமிழ் மக்களின் விடுதலைக்காகப் போராடுவோம் என பல்லேறு வகையில் வாக்குறுதிகளை வழங்கி தமிழ்மக்களின் ஆசீர்வாதத்தையும் வாக்குகளையும் பெற்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பாராமுகமாக இருக்கின்றார்கள்.

ஏராளம் இன்னல்கள் நடக்கின்றன. திட்டமிட்ட குடியேற்றங்கள் நடக்கின்றன, பல கலாச்சார பண்பாட்டு சீரழிவுகள் இடம் பெற்று வருகின்றது. தமிழ்த்தேசியத்தை சிங்கதேசியத்திற்குள் கரைக்கின்ற பல்வேறு செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தங்களைக் காட்டிக் கொள்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் காத்திரமாக எந்தவொரு நடவடிக்கைகளையும் கடந்த காலங்களில் மேற்கொள்ளவில்லை. போர் அனர்த்தங்கள் நெருக்கடிகள் வந்தபோதெல்லாம் அவர்கள் அந்த விடயங்கள் தொடர்பில் அலட்டிக்கொள்ளவில்லை. இப்பொழுது தமிழ் மக்கள் ஒருதலைமைத்துவம் இல்லாத நெருக்கடியான சூழலில் தான் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2009ற்கு முன்னர் புலிகள் இருக்கின்ற போது புலிகள் ஆதரவு அளித்தனர் இப்போது தமிழர்களுக்கு எதிராக தமிழ்த் தேசியத்திற்கு எதிராக என்ன செய்து வருகின்றனர் என்பதனை தமிழ் மக்கள் பகுத்தாராய்ந்து பார்க்க வேண்டும். தமிழ்த் தேசிய விடுதலை தொடர்பாக அவர்களுடைய கொள்கைகள் அவர்களுடைய செயற்பாடுகள் என்ன என்பதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும்.

அவர்கள் தமிழ் மக்களினுடைய கொள்கை நிலைப்பாட்டில் ஒருபோதும் இல்லை இவ்வாறான நிலைப்பாடுகளை மக்கள் விளங்கிக் கொண்டால் தமிழ் மக்களின் விடுதலைக்குரிய நேர்மையான தலைமைகள் யாரென்று இனங்கண்டு அவர்களை பலப்படுத்தி, அவர்களுக்கு ஆதரவைக் கொடுத்து வளர்ப்பதற்கு முயற்சிக்க வேண்டும்.

இது ஈழத்தில் இருக்கின்ற மக்களினதும் புலம்பெயர் நாடுகளில் இருக்கின்ற மக்களினதும் கைகளில் தான் தங்கி இருக்கின்றது. உண்மையில் கடந்த காலங்களில் இடம் பெற்ற செயற்பாடுகளைக் குறிப்பிட்டுச் சொல்ல முடியும். 2009 மே மாதம் முள்ளிவாய்க்கால் பகுதியில் தமிழர்களுடைய ஆயுதப் போராட்டம் இராணுவ ரீதியாக அழிக்கப்பட்ட பின்பு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் பாராளுமன்றத்தில் புலிகளை காட்டுத்தனமாக விமர்சனம் செய்திருந்தார். புலிப் பயங்கரவாதிகள் தங்களையும் அழித்து எங்களையும் அழித்து எல்லாவற்றையும் அழித்து விட்டு போய்விட்டார்கள் என்று அவர் கூறினார். என்னைப் பொறுத்தவரை புலிகள் இருக்கின்ற போதும் புலிகளால் பேச்சு மேசையில் முன்வைக்கப்பட்ட சுயநிர்ணய உரிமை அடிப்படையிலான சமஸ்டிக் கோரிக்கையை சம்பந்தன் ஏற்றுக் கொள்ளவில்லை. துரதிஸ்டவசமாக சம்பந்தன் ஜனநாயக ரீதியாக செயற்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராக இருந்தமையினால் சம்பந்தனின் நிலைப்பாட்டை தமிழ் மக்களின் நிலைப்பாடாக சர்வதேச சமூகத்திற்கு காண்பிப்பதற்கு இலங்கை அரசுக்கு வாய்ப்பை கொடுத்தது.

தற்போது புலிகள் இல்லாத நிலையில் அவர்கள் சுதந்திரமாக தமது கருத்துக்களை வெளியிட்டு அவர்களுடைய நிலைப்பாட்டை தங்களுடைய எண்ணப்படி கொண்டு செல்கிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் சுதந்திர தின நிகழ்வில் கலந்துகொண்டதைப்பற்றிபல்கலைக்கழகத்தில் கருத்துத் தெரிவித்திருந்தார்கள். உண்மையில் சம்பந்தன் மே 18ஐத் தான் சுதந்திர தினமாகக் கொண்டாட வேண்டும். புலிகள் இல்லாமல் போன போதுதான் சம்பந்தனுக்குச் சுதந்திரம் கிடைத்தது. சம்பந்தன் சுதந்திர தினம் கொண்டாட வேண்டிய நாள் மே 19 ஒழிய பெப்பிரவரி 4அல்ல. சுதந்திர தினத்தில் அவர் கலந்து கொண்டமை தமிழ்த் தேசியத்திற்கு எதிராக அவர் கொண்டிருக்கும் நிலைப்பாட்டையே வெளிப்படுத்துவதாக அமைந்திருக்கின்றது

> **“பொதுவாக மக்கள் ஈழத்திலும் சரி, புலம் பெயர் நாடுகளிலும் சரி நேர்மையாக தமிழ்த் தேசிய நலனுக்கு உழைக்கின்ற சக்திகள் யார் என்பதை முதலில் அடையாளம் காணவேண்டும். அவ்வாறு இனங்காண்பவர்களை பலமுள்ளவர்களாகநாங்கள்தயார்ப்படுத்தவேண்டும். அவர்களுக்குப்பின்னால்அணிதிரள வேண்டும். உண்மையில் கடந்த காலங்களில் தமிழ்மக்களின் விடுதலைக்காகப் போராடுவோம் என பல்லேறு வகையில் வாக்குறுதிகளை வழங்கி தமிழ்மக்களின் ஆசீர்வாதத்தையும் வாக்குகளையும் பெற்று தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் பாரா முகமாக இருக்கின்றார்கள்.**
>
> **ஏராளம் இன்னல்கள் நடக்கின்றன. திட்டமிட்ட குடியேற்றங்கள் நடக்கின்றன, பல கலாச்சார பண்பாட்டு சீரழிவுகள் இடம் பெற்று வருகின்றுது. தமிழ்த்தேசியத்தை சிங்களதேசியத்திற்குள் கரைக்கின்ற பல்வேறு செயற்பாடுகள் இடம் பெற்று வருகின்றன. இந்த விடயங்கள் தொடர்பில் தமிழ் மக்களின் பிரதிநிதிகளாக தங்களைக் காட்டிக் கொள்கின்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் க்காத்திரமாக எந்தவொரு நடவடிக்கைகளையும் கடந்த காலங்களில் மேற்கொள்ளவில்லை”**

இந்த இடத்தில் ஈழத்திலுள்ளவர்களும் புலம் பெயர் நாடுகளில் வாழ்பவர்களும் சிந்தித்து தமக்காகவும் தமது கொள்கைகளுக்காகவும் உண்மையாகச் செயற்படுபவர்களை யார் என்று அறிந்து செயற்பட வேண்டும். அவர்களுக்குப் பின்னால் அணிதிரள வேண்டும். இந்த வகையில் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய முன்னணியினர் இருக்கின்றார்கள். கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் பின்னால் தமிழ் மக்கள் அணிதிரளத் தயாராக வேண்டும். இல்லாது விட்டால் கடந்த 30,40 வருடங்களுக்கு மேலாக சிதைந்து வரும் தமிழ்த் தேசியம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் கொன்றொழிக்கப்படும்.

என்னைப் பொறுத்தவரை தற்போது தமிழ்த் தேசிய அரசியலை எங்களுக்கு ஆரோக்கியமான, எங்களுக்கொரு நிரந்தரமான தீர்வைப் பெறக் கூடிய ஒருநோக்கில் கொண்டு செல்லக் கூடியதாக கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தலைமையிலான தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியே இருக்கின்றது.

**கே: அரசியல் விடயங்கள் தொடர்பில் மக்களுக்கு தெளிவில்லையா? நீங்கள் கூறுவதில் கருத்து முரண்பாடு உள்ளதா?**

**ப:** மக்கள் தேர்தல் காலங்களில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு தமது ஏகோபித்த ஆதரவை வழங்கியிருந்தார்கள். ஆனால் தேர்தல் என்று வருகின்ற போது அவர்கள் நடந்து கொள்கின்ற விதம் வேறு அதன்பிற்பாடு அவர்கள் நடந்து கொள்கின்ற விதம் வேறு. உதாரணமாக கடந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் போட்டியிட்ட அனேகமானவர்கள் தலைவர் பிரபாகரனைப் பற்றிப் பேசி இந்த விடுதலைப் போராட்டத்தில் உயிர் நீத்த மாவீரர்களின் தியாகங்களைப் பற்றிப் பேசி, விடுதலைப் புலிகளைப் பற்றிப் பேசி, மாவீரர் குடும்பங்களை ஒவ்வொரு மேடைகளில் ஏற்றி தமிழ்த் தேசியத்தைப் பற்றிப்பேசி பிரச்சாரம் செய்தார்கள். இந்தப் பேச்சுக்கள் கூட தமிழ் மக்களின் மனதைக் கவர்ந்திருக்கலாம். தமிழ் மக்கள் தமிழ்த் தேசியம் தொடர்பில் ஒரு தெளிவான நிலைப்பாட்டில் இருக்கின்றார்கள். தமிழ் மக்களுக்கு விடுதலை வேண்டும் என்பதில் மக்களிடம் மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. தமிழ் மக்கள் கொடுக்கின்ற ஆணைகள் தமிழ்த் தேசியத்தை நோக்கியதாகத் தான் இருக்கின்றது. தேர்தலின் பிற்பாடு அவர்கள் மீண்டும் தங்களுடைய சுய விருப்பப்படி இயங்குகின்றார்கள். மீண்டும் தேர்தல் வருகின்ற போதும் அவர்கள் தீவிரமான தமிழ்த் தேசியத்தை பேசுவார்கள் தமிழ் ஈழத் தேசிய விடுதலைநோக்கித் தான் நாங்கள் பயணித்துக் கொண்டு இருப்பதாகவும் அதற்காகப் போராடுவதாகவும் அவர்கள் மக்களுக்குச் சொல்வார்கள். செயற்பாடுகள் ஊடாகத்தான் அவர்கள் அரசியலில் தொடர்ச்சியாக நிலைத்து வருகிறார்கள். தற்போது தமிழ் இனத்திற்கு ஒரு நிரந்தர சிதைப்பைக் கொண்டு வரத் தயாராக இருக்கின்ற பல சக்திகள் தமிழ் தேசியக் கூட்டமைப்பை மீண்டும் அரங்கிற்கு கொண்டுவர முயற்சிக்கின்றன.

அதற்காக பல திட்டமிடல் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றன. மக்கள் மத்தியில் உள்ள ஊடகங்கள் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்கின்ற, தமிழ் தேசியத்திற்கு எதிரான செயற்பாடுகளை இருட்டடிப்புச் செய்து வருகின்றது.

(23 ஆம் பக்க தொடர்ச்சி)

# வடமாகாண சபை தீர்மானத்தில் குறைபாடுகள் உள்ளன.




**வடமாகாணசபையின் தீர்மானம்**

யார் எதைக் கூறினாலும் வட மாகாணசபையின் தீர்மானத்தை முதலில் வரவேற்கவேண்டும். வடமாகாணசபைக்கு அதிகாரம் இல்லை என்பது வேறு. அத்துடன் மாகாண சபை முறைமை ஈழத் தமிழர்களின் பிரச்சினைக்குத் தீர்வும் அல்ல. அது 1987ஆம் ஆண்டே நிராகரிக்கப் பட்ட ஒன்று. ஆனாலும் துரதிஷ்டவசமாக அந்த மாகாணசபை வடக்கு-கிழக்கில் செயற்படுகின்றது.

இந்த நிலையில் அதிகாரம் இல்லா மல் இருந்தும் கூட தமிழர்களுக்கு இன ரீதியாக இழைக்கப்பட்ட அநீதிகள் தொடர்பாக அந்த மாகாண சபையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் இன்று உலகை திரும்பிப் பார்க்க வைத்துள்ளது.

இருந்தாலும் இனப்படுகொலை நடந்தது என்பதற்கான சட்டரீதியான விளக் கங்கள் தீர்மானத்தில் கொடுக்கப்படவில்லை. வெறுமனே ஒரு உள்ளக் குமுறலாகவும் புலம்பலாகவுமே அந்தத் தீர்மானம் அமைந் துள்ளது. மூன்று விடயங்களை அந்த தீர்மானத்தில் பதிவுசெய்திருக்கலாம்.

இனப்படுகொலை என்பது இரண்டு வகைப்படும். ஒன்று நேரடியானது. இரண்டா வது மறைமுகமானது. ஈழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை என்பது இந்த இரண்டு வகைக்குள்ளும் அடங்கும்.

படைகளைக் கொண்டு செய்கின்ற திட்டமிடப்பட்ட தாக்குதல்கள், துப்பாக்கிச் சூடுகள், விமானத்தாக்குதல்கள், சொத்துக்கள் பறிமுதல், கலாசாரசிரழிவுகள் போன்றவை நேரடியான இனப்படுகொலை என்ற வரை யறைக்குள் அடங்கும்.

மறைமுக இனப்படுகொலை என்பது இடம் பெயர்வுகள் மூலம் இன விருத்தியைத் தடுத்தல். பொருளாதார ரீதியான பற்றாக்குறைகளை உருவாக்கு தல், தொழில் முயற்சிளை இல்லாமல் செய்தல், மரபு வழிக் காணிளில் இருந்து ஏதோ ஒருவகையில் இடம் பெயர வைத்தல். அல்லது அதனை இன்னொருவருக்கு விற்பனை செய்ய வைத்தல், பரம்பரை அடையாளங்களை பரம்பரை பெயர்களை மாற்றிவைத்தல், வேலைவாய்ப்புகளைத் தடுத்தல், கல்வியில் தரப்படுத்தல் போன்ற விடயங்கள் மறைமுகமான இன அழிப்புக்குள் அடங்கும்.

யாழ்ப்பாணத்தில் தற்போது ஏற் பட்டுள்ள சுத்தமான குடிநீர் பிரச்சினை கூட மறைமுகமான இன அழிப்புத்தான்.

நேரடியான இன அழிப்பு, மறைமுக மான இன அழிப்பு என்பதற்கு இவை சில உதாரணங்கள் மாத்திரமே. ஆனால் ஆழமாக ஆராய்ந்து பார்த்தால் தமிழர் மீதான இனப்படுகொலையை இன்னமும் பல்வேறுவடிங்களில் வகைப்படுத்தலாம்.

ஆகவே இவற்றை வடமாகாண சபையின் தீர்மானம் சரியாகச் செய்யவில்லை என்பது குற்றச்சாட்டாகும். இனப் படுகொலை ஏன் ஆரம்பிக்கப்பட்டது என்பதற்கான வரைவிலக் கணம் கூட உரியமுறையில் கொடுக்கப் படவில்லை.

**ஐ.நா அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமை-**

ஜெனீவா மனித உரிமைச் சபை யின் ஆணையாளரின் இலங்கை தொடர் பான அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமை தொடர்பாக கவலையடைவதற்கு எதுவும் இல்லை ஆனால் அந்த அறிக்கை ஒத்திவைக்கபடுகின்றமைக்கு சில தமிழ்த் தலைவர்களும் உடந்தையாக இருந்துள்ள னர் என்பதுதான் வேதனைக்குரியது. அந்த அறிக்கை அல்லது சர்வதேச விசாரணை என்பது தமிழர்களுக்கு தீர்வைப் பெற்றுத் தரும் என்று கூற முடியாது. மாறாக தமிழர் விவகாரம் சர்வதேச மயப்படுகின்றது என்ற ஒரு சிறிய ஆறுதல் தான்.

இங்கு அமெரிக்கா என்பது தன்னிலை சார்ந்து செயற்படுகின்றது என்று நான் கட்டுரைகளில் அவ்வப்போது கூறி யிருக்கின்றேன். மஹிந்தவை விழுத்தி ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அல்லது தங்களுக்கு ஏற்ற ஒரு பொம்மை ஆட்சியை இலங்கையில் உருவாக்கு வதே அமெரிக்காவின் நோக்கம். அதற்கு இந்தியாவும் ஒத்துழைப்பு வழங்குகின்றது.

அறிக்கை ஒத்திவைக்கப்பட்டமை மாத்திரமல்ல நீங்கள் கடந்த கால வரலாற்றை ஒருதடவை மீட்டிப்பாருங்கள் ஒன்று நோர்வேயின் சமாதான முயற்சிகளை குழப்பும் நோக்கில் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகாவை பயன்படுத்தி 2003 ஆம் ஆண்டு ரணில் விக்கிரமசிங்கவின் ஆட் சியை இந்தியா வீழ்த்துவதற்கு அமெரிக்கா விரும்பவில்லை என்றாலும் புலிகள் தொடர் பான இந்தியா நிலைப்பாட்டுக்கு அமெரிக்கா வும் அப்போது ஒத்துழைப்பு நல்கியது

இரண்டாவது- 2005 ஆம் ஆண்டு புலிகளையும் இணைத்துக் கொண்ட சுனாமி. நிவாரணத்துக்கான பொதுக்கட்ட மைப்பில் இருந்து முதலில் விலகியது அமெரிக்கா. பின்னர் இந்தியாவும் பின் வாங்கியது. அதனால் பொதுக் கட்டமைப்பு கைவிடப்பட்டது. சந்திரிகாதான் அதன் சூத்திரதாரியாக இருந்தார்.

மூன்றாவது 2006 ஆம் ஆண்டு முற்று முழுதாக நோர்வேயின் சமாதான பணி நிறுத்தப்பட்டு யுத்தம் ஆரம்பிக்கப் படுவதற்கு இந்தியா மஹிந்த ராஜபக்சவுக்கு முழு ஒத்துழைப்பையும் வழங்கியது. அமெரிக்காவும் அதனை ஏற்றுக் கொண்டது. ஆக இந்த மூன்று காரணிகளின் தொடர்ச்சி யாகத்தான் மனித உரிமைச்சபை ஆணை யாளரின் அறிக்கை ஒத்திவைக்கப்பட்டதை யும் நோக்கவேண்டும். அமெரிக்கா விரும்பிய ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதி பதியாகக் கொண்டுவர புலிகள் 2005 இல் தடுத்தார்கள் என்ற ஒரே காரணத் துக்காகவே மஹிந்தவின் போர் வெறிக்கு ஒத்துழைப்பு வழங்கப்பட்டது.

2009 ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னரான காலகட்டத்தில் அமெரிக்கா விரும்பியதை மஹிந்த செய்யமறுத்த காரணத்தினால் ஜெனீவா மனித உரிமைச் சபையில் அமெரிக்கா பிரேரணையை சமர்ப்பித்து வெருட்டியது.

தற்போது நடந்தது என்ன? அமெரிக்கா விரும்பிய ரணில் விக்கிரமசிங்க ஆட்சிக்கு வந்துவிட்டார். ஆகவே இறுதிக் கட்டபோர் தொடர்பான சர்வதேச விசாரணை தேவை இல்லை என்பது அமெரிக்காவின் முடிவு. அதனால்தான் அறிக்கை போடப்பட்டது என்பதை இன்று பிறந்த தமிழ்க் குழந்தையும் அறியும். இவை எல்லாவற்றுக்கும் பின்னணி பாடகர் யார் என்றால் அது இந்தியா.

ஆகவே தமிழ்த் தரப்பு செய்ய வேண்டியது என்ன? முதலமைச்சர் விக்னேஸ்வரன் சொன்னதுபோல தமிழர் விவகாரம் என்பதை அமெரிக்கா மட்டும் கையாளும் வகையில் அனுமதிக்கக் கூடாது. அதற்கான ஏற்பாடுகளை முதலில் செய்ய வேண்டும். ஒன்றைத் தெரிந்துகொள்ளுங் கள். அமெரிக்காவுக்கும் இந்தியாவுக்கும் இந்திராகாந்தி பிரதமாரக இருந்த காலத்தில் முரண்பாடுகள் நிலவியது. ஆனால் அதனை முரண்பாட்டிலும் ஓர் உடன்பாடாக மாற்றினார் இந்திராக காந்தி. ஏன் தெரியுமா? அதற்கான புரிதலை தமிழ் தலைமைகள் இன்னமும் அறியவில்லை. அல்லது அந்த அரசியல் அவர்களுக்கு புரியவில்லை.

1987 ஆம் ஆண்டு அறிமுகப்படுத் தப்பட்ட மாகாண சபைமுறையை அதாவது 13 ஆவது திருத்தச் சட்டம் மற்றும் இலங்கை இந்திய ஒப்பந்தம் போன்வற்றை எழுதியது இந்திரா காந்திதான். ராஜீவ் காந்தியோ ஜே.ஆர் ஜயவர்த்தனாவோ அல்ல. இது பற்றிய விபரங்களை நான் எனது கட்டுரைகளில் எழுதியுள்ளேன். எனவே அறிக்கை ஒத்தி வைக்கப் பட்டமையை மறந்துவிடுங்கள்.

**அ.நிக்ஸன்-**
**-பத்திரிகையாளர்-**
**அரசியல் விஞ்ஞான விரிவுரையாளர்**

**தமிழர்களின் வாக்குரிமை வழி தவறிவிட்டது.**

இலங்கையின் மீதான மனித உரிமை மீறலுக்கான குற்றச்சாட்டு அடுத்து வரும் ஆறு மாதத்திற்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளது. இது இலங்கை அரசுக்கு ஆறு தல் தரும் விடயம். தம்மீதான குற்றச்சாட் டுக்களால் சர்வதேசத்தில் நெருக்கடியை சந்தித்த இலங்கை தற்போது மீண்டுள்ளது. இது இலங்கையின் ஆட்சிப்பொறுப்பை ஏற்றுள்ள புதிய அரசாங்கத்தின் அணுகு முறையாகும்.

இந்த புதிய அரசாங்கத்தைத் தெரிவு செய்வதில் தமிழ் மக்களின் பங்கு அதிகமானது. தமிழ் மக்களின் வாக்குகள் நிராகரிப்பையோ பகிஸ்கரிப்பையோ மேற் கொண்டிருந்தால் புதிய அரசுக்கான வரவு சாத்தியப்பட்டிருக்காது.

ஆனால் இந்த தமிழ் மக்கள் தமது வாக்குகளை வழங்கி தமது மக்கள் படுகொலை செய்யப்பட்டதற்கான விசாரணையை செய்யவிடாது தாமே தடுத்துள்ளனர். இதைவிட துயரமான விடயம் வேறு எதுவாகவும் அமையாது. தாமே தமது அழிவுக்கு காரணமாகும் துயரம் வேறு எந்த தேசிய இனத்திடமும் காண முடியாத அம்சம். இது அரசியல் தூர நோக்கற்ற செயல் என்பதை இப்போதும் அறியாத மக்களாக உள்ளனர் என்பதுதான் வேதனையானதாகும்.

இந்த மக்கள் உணர்ச்சிக்குதான் முக்கியத்துவம் கொடுத்தார்களே அன்றி அறிவுக்கு வாய்ப்புக் கொடுக்கவில்லை. ஆனாலும் இந்த அரசின் அணுகுமுறையை முற்றாக நம்புமளவுக்கு மேற்குலகம் இல்லை என்பதும் விசாரணை ஏதே ஓர் அடிப்படையில் நிகழுமென்பது தெளி வாகத் தெரிகிறது.

(23 ஆம் பக்கம் பார்க்க)

# இது எல்லோருக்குமான உலகம்!

“கேமராவுக்கு முன்பு நிற்பது எப்பொழுதுமே எனக்குச் சங்கடமான விஷயமாக இருக்கிறது. அதனால்தான் நான் ஓர் ஒளிப்படக் கலைஞராக இருக்கிறேன். என்னுடைய ஒளிப்படங்கள் அர்த்தமுள்ள விஷயங்ளைச் சொல்வதாக இருக்க வேண்டும். அதன் மூலம் விழிப்புணர்வும் நல்ல மாற்றமும் நிகழ வேண்டும் என்கிறார்” அமி விட்டாலி.

பூமியின் மூலை முடுக்குகளுக்கு எல்லாம் சென்று வந்திருக்கிறார் போட்டோ ஜர்னலிஸ்ட் அமி விட்டாலி. கடந்த இருபது ஆண்டுகளில் 80 நாடுகளுக்குச் சென்று ஒளிப்படங்களையும் ஆவணப்படங்களையும் எடுத்து வந்திருக்கிறார் இவர். உலகின் முக்கிய அருங்காட்சியகங்களிலும் ஓவியக் கூடங்களிலும் இவரது ஒளிப்படங்கள் இடம் பெற்றுள்ளன. நேஷனல் ஜியாகிராபிக், அட்வெஞ்சர், ஜியோ, நியுஸ்வீக், டைம், ஸ்மித்சோனியன் என்ற புகழ்பெற்ற பத்திரிகைகளில் இவரது ஒளிப்படங்கள் தொடர்ந்து வந்துகொண்டிருக்கின்றன.

இப்போது நேஷனல் ஜியாகிராபிக் பத்திரிகையின் ஒளிப்படக் கலைஞராகவும் நிக்கான் நிறுவனத்தின் அம்பாசடராகவும் இருக்கிறார். உலகின் மிக முக்கிய விருதுகளையும் பட்டங்களையும் பெற்றிருக்கிறார். அமெரிக்கா, ஐரோப்பா, ஆசியாவில் ஒளிப்படக் கலைஞர்களுக்கான பயிற்சிகளையும் அளித்துவருகிறார்.

## புதிய பாதை

அமெரிக்கரான அமி, கல்லூரிப் படிப்பை முடித்தவுடன் ஒளிப்படக் கலைஞராக ஒரு பத்திரிகையில் வேலை செய்தார். குறிப்பிட்ட பணிகளைக் குறிப்பிட்ட காலத்துக்குள் செய்து முடிக்க வேண்டிய அந்த வேலை ஆறு மாதங்களிலேயே, அவருக்கு அலுப்பைத் தந்துவிட்டது. வேலையை விட்டுவிட்டு, அடுத்து என்ன செய்யலாம் என்று யோசித்தபோது அவரது சகோதரியுடன் மேற்கு ஆப்பிரிக்காவில் உள்ள கினி-பிஸ்ஸாவ் நாட்டுக்குச் செல்லும் வாய்ப்புக் கிடைத்தது.

அந்த நாட்டில் நிலவிய போர், வறுமை, எழுத்தறிவின்மை, சுகாதாரமின்மை, அரசியல் எல்லாவற்றையும் நேரில் பார்த்தார். அதுவரை அதுபோன்ற அனுபவங்களைப் பெற்றிருக்காத அமி, புதிய மனிதராக மாறினார். புதிய பாதையைத் தேர்ந்தெடுத்துக்கொண்டார்.

அன்று முதல் உலகின் பார்வையில் அழகாக இருக்கும் விடயங்களை, அவர் படங்கள் எடுப்பதில்லை. சுற்றுலாப் பயணியாக எந்த நாட்டுக்கும் செல்வதில்லை. ஒரு விஷயத்தைப் பார்த்த நொடியில் படங்கள் எடுத்துத் தள்ளுவது அமியின் பாணி அல்ல. ஓர் இடத்துக்குச் சென்றால் முதலில் அங்குள்ள நிலைமைகளை முற்றிலும் அறிந்துகொள்கிறார். மக்களோடு மக்களாக வாழ்கிறார். அவர்கள் உணவைச் சாப்பிடுகிறார். அவர்களைப் போல ஆடைகளை உடுத்துகிறார். அவர்களில் ஒருத்தியாக மாறிவிடுகிறார். இப்படி ஒரு புராஜெக்ட்டை முடிப்பதற்கு ஒன்றிரண்டு மாதங்களில் இருந்து ஆறு மாதங்கள்வரைகூட ஆகும்.

## உண்மையும் மக்களும்

“ஒளிப்படக் கலைஞருக்கு முதலில் பொறுமை அவசியம். குறிப்பிட்ட கணங்களுக்காகக் காத்திருக்க வேண்டும். அந்தக் கணம் வந்தவுடன் மிக வேகமாகச் செயல்படவும் தெரிந்திருக்கவேண்டும். மக்களோடு மக்களாகப் பழகாமல் உண்மையான, முழுமையான விஷயங்களைக் கொண்டு வரவே முடியாது” என்கிறார் அமி.

ஏழை, எளிய மக்கள்தான் அமியின் இலக்கு. ஒரு பொருளைப் போலவோ, ஓர் இடத்தைப் போலவோ நினைத்துக்கொண்டு, மனிதர்களை அவரால் படம் எடுக்க இயலாது. மக்களின் துன்பத்தையும் வறுமையையும் பயன்படுத்திக்கொண்டு விதவிதமான படங்கள் எடுத்து சிறந்த ஒளிப்படக் கலைஞர் என்று பரிசுகளையும் விருதுகளையும் தன்னால் வாங்கவே முடியாது என்கிறார் அமி.

“நானும் ஏழை மக்களின் வாழ்க்கையைத்தான் பதிவு செய்கிறேன். ஆனால் என் ஒளிப்படங்கள், ஆவணப் படங்கள் மூலம் மக்களின் பிரச்சினைகளை வெளியுலகத்துக்குத் தெரிய வைக்கிறேன். பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு நடவடிக்கைகளை எடுத்துவருகிறேன்.

பெண்கள், குழந்தைகள், வறுமை, எழுத்தறிவு, சுற்றுச்சூழல், அமைதி போன்றவைதான் என்னுடைய இலக்கு. சில ஆப்பிரிக்க நாடுகளில் பெண்கள் ஒரு குடம் தண்ணீருக்காக 11 மணி நேரம் நடக்கிறார்கள். பிரசவத்தின்போது ஐந்தில் நான்கு பேர் மரணத்தைச் சந்திக்கும் சூழல் இந்த உலகில் இன்னும் இருந்துகொண்டிருக்கிறது.

இந்தியாவில் 45 வருஷங்களாக கை ரிக்‌ஷா இழுத்துக்கொண்டிருக்கிறார்கள். என்னால் அவர்கள் ரிக்‌ஷாவில் ஏறவே முடியவில்லை. ஒரு ரிக்‌ஷாக்காரரை வைத்து நான் இழுத்தேன். ஐயோ! என்ன ஒரு கொடுமையான வேலை. கைகளிலும் தோள்பட்டைகளிலும் பயங்கர வலி. மனிதர்கள் என்றால் எல்லோரும் மனிதர்கள்தானே? ஏன் உணவு, உடை, உறைவிடம் என்ற அத்தியாவசியத் தேவைகள்கூட எல்லா மனிதர்களுக்கும் கிடைப்பதில்லை?’ என்று கேள்விகளை வீசுகிறார் அமி.

## வலி தரும் அனுபவங்கள்

ஆப்பிரிக்காவிலும் இந்தியாவிலும் அதிக ஆண்டுகள் வாழ்ந்திருக்கிறார். வாழும் இடங்களுக்கு ஏற்ப அவர்களுடைய மொழியையும் ஓரளவு கற்றுக்கொள்கிறார். இதனால் எந்த நாட்டு மக்களாக இருந்தாலும் எளிதில் நெருங்கிவிடுகிறார். கினி-பிஸ்ஸாவ் நாட்டிலிருந்து கிளம்புவதற்கு முதல் நாள் இரவு குழந்தைகளுடன் அரட்டையடித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது ஒரு சிறுவன், நிலாவைக் காட்டி அமெரிக்காவிலும் நிலா இருக்கிறதா என்று கேட்டான்.

அமெரிக்கா ஏதோ வேற்றுக் கிரகத்தில் இருப்பது போல எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் எளிய மனிதர்கள். நிலாவைப் பார்க்கும்போதெல்லாம் அந்தச் சிறுவனின் கேள்வி அமியைத் தொந்தரவு செய்துகொண்டிருந்தது. பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்த நாட்டில் அதே சிறுவனைக் கண்டார். இளைஞனாக செல்போனுடன் காட்சி தந்தான். அவனது கேள்வியை நினைவூட்டினார் அமி. ‘ஆமாம்’ இப்போது எனக்குத் தெரிந்துவிட்டது. நாம் எல்லோரும் ஒரே கிரகத்தைச் சேர்ந்த மனிதர்கள். நிலாவை நாம் பகிர்ந்துகொண்டிருக்கிறோம்’ என்றான்.

“சூரியனையும் சந்திரனையும் அனைவரும் பகிர்ந்துகொள்வது போலவே மனிதர்கள் அனைவரும் எல்லாவற்றையும் பகிர்ந்துகொள்ளத்தான் வேண்டும். எல்லோருக்கும் ஒரே மதிப்புதான் இருக்கிறது” என்கிறார் அமி.

## தனிமையே நண்பன்

ஒளிப்படக் கலைஞராக இருப்பதில் ஒரே ஒரு சங்கடம் இருப்பதையும் ஒப்புக்கொள்கிறார் அமி. அது தனிமை. தனியாகச் செய்யும் வேலை இது. அதிக காலம் எடுத்துக் கொள்வதால் தனிமையைத் தவிர்க்க இயலாது. ஆண்டுக்கு இரண்டு, மூன்று வாரங்களே அமெரிக்காவில் அவரது வீட்டில் இருக்கிறார். “தனிமை கடினம் என்றாலும், அது அவ்வளவு கடினம் என்று சொல்ல மாட்டேன். உலகில் உள்ள பெரும்பாலான மக்கள் படும் துயரங்களைப் பார்க்கும்போது, இது ஒன்றும் பெரிய விஷயமே இல்லை.

எத்தனை போர்கள், வன்முறைகள், வறுமை எல்லாம் வாட்டினாலும் அத்தனையும் மீறி வாழ்வதற்கு ஏதோ ஒரு காரணம் ஒவ்வொரு மனிதனிடம் இருப்பதால்தான் இந்த உலகம் இயங்கிக் கொண்டிருக்கிறது. அந்த மக்களின் நம்பிக்கைதான் எனக்கும் இருக்கிறது. என்றாவது ஒருநாள் இவர்களின் நிலைமையை மாற்ற முடியும் என்று தான் ஒவ்வொரு வேலையையும் ஏற்றுக்கொள்கிறேன்’இறக்கி வைக்க முடியாத பாரத்துடன் கூறுகிறார் அமி.

●



அமெரிக்கா ஏதோ வேற்றுக் கிரகத்தில் இருப்பது போல எண்ணிக் கொண்டிருக்கிறார்கள் எளிய மனிதர்கள். நிலாவைப் பார்க்கும்போதெல்லாம் அந்தச் சிறுவனின் கேள்வி அமியைத் தொந்தரவு செய்துகொண்டிருந்தது. பத்தாண்டுகளுக்குப் பிறகு அந்த நாட்டில் அதே சிறுவனைக் கண்டார். இளைஞனாக செல்போனுடன் காட்சி தந்தான். அவனது கேள்வியை நினைவூட்டினார் அமி.

18 ஆம் பக்கத் தொடர்ச்சி

**மௌனம் உடைத்து...**

‘இன்றையை நிலையில் தமிழர்கள் மிகுந்த ஏமாற்றத்துடன் இருக்கிறார்கள். இந்த ஐ.நா விசாரணை பிற்போடப்பட்டமை வேதனையை அளித்தது. இந்த இடத்தில் இலங்கை அரசாங்கத்தை நம்பி நாம் இல்லை என்பதை தெளிவாகக்கூறிக்கொள்கிறோம். எமது மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட இனப்படுகொலைக்கு நீதி வேண்டும். இதற்கான விசாரணை சர்வதேச மட்டத்தில் நடக்க வேண்டும். நீதியான தீர்வொன்று தமிழ் மக்களுக்கு கிடைக்க வேண்டும் இந்த நோக்கோடு யாழ். பல்கலைக்கழக மாணவர்களாகிய நாம் இன்று இந்தப் பேரணியை ஒழுங்குபடுத்தினோம். நாம் எதிர்பார்த்ததை விட பல்லாயிரக்கணக்கான மக்கள் தமது உரிமையை சர்வதேசத்துக்கு சொல்ல, நீதியை நிலைநாட்ட எம்மோடு அணிதிரண்டிருக்கிறார்கள். எமக்கெதிராக இழைக்கப்பட்ட இனப்படுகொலைக்கு எதிராக சர்வதேச விசாரணை ஒன்று வேண்டும் என்பதை அடித்துக்கூறியிருக்கிறார்கள். இதனை உலகம் விளங்கிக்கொள்ள வேண்டும். என்றார்.

●

# மலையகத்தில் அடிநிலைத் தொழில்முறை மாற்றப்படவில்லை

சென்றவாரத் தொடர்ச்சி...



இவர்கள் இலங்கைத் தமிழர்களுடன் இணைந்துவிடக்கூடாது என்ற ஒரு பயம் அரசாங்க நிலையில் உண்டு. தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் கட்சிகளும் இவர்கள் தனிக்குழுமமாக இருப்பதையே விரும்புவர்.

- பேராசிரியர். கா.சிவத்தம்பி-

இந்திய வம்சாவளித் தமிழர்களைப் பொறுத்த வகையில் இவர்களின் இருப்பும் தொழிற்பாடுகளும் சமூகவிஞ்ஞான ஆய்வாளர்கள் பலரது கவனத்தை ஈர்த்துள்ளன. பெருந்தோட்டத் தொழிலாளர்களாக குறிப்பாக தேயிலைத் தோட்ட தொழிலாளர்களாக கடமைபுரியும் இவர்களை ஒரு தனிக் குழுமமாக வைத்திருப்பதில் அரசியல் இலாபங்கள் உள்ளன என்பது உண்மையே.

இவர்கள் இலங்கைத் தமிழர்களுடன் இணைந்துவிடக்கூடாது என்ற ஒரு பயம் அரசாங்க நிலையில் உண்டு. தோட்டத் தொழிலாளர்களின் அரசியல் கட்சிகளும் இவர்கள் தனிக்குழுமமாக இருப்பதையே விரும்புவர்.

இலங்கைத் தமிழர்கள் என்ற எண்ணக் கருவின் அடிப்படையில் நோக்கும் பொழுது யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, திருமலை, மன்னார், வன்னி ஆகிய பகுதிகளில் பாரம்பரியமாக வாழும் இலங்கைத் தமிழ் மக்களுக்கும் மலையகத் தமிழர்களுக்கும் இடையே கணிசமான சமூக ஒழுங்கமைப்பு, பண்பாட்டு வேறுபாடுகள் உள்ளன. ஆனால்1960,1970 களில் ஏற்பட்ட தோட்டப் பிரதேச காணிகளை தேசியமயமாக்கும் நடைமுறை காரணமாக பெருந் தோட்டத்தமிழ் குடும்பங்கள் பல வன்னிப் பகுதிக்கு குறிப்பாக,கிளிநொச்சி, மாங்குளம், சார்ந்த பகுதிகளுக்கு விவசாயத் தொழிலாளராக செல்லும் ஒரு நிலைமை ஏற்பட்டது, இப்பொழுது அவர்கள் அப் பிரதேசத்துடன் நன்கு இணைந்துள்ளனர் என்பதனை குறிப்பிடுதல் அவசியம்.

செங்கையாழியானின் "காட்டாறு" நாவல் இந்த விடயப் பொருள் பற்றிப் பேசுகின்றது. இப்பிரதேசத்தின் சில இடங்களில் தேர்தல் முடிவுகளை நிச்சயிக்கின்ற அளவிற்கு பெருந்தொகையினராக இவர்கள் உள்ளனர். அத்துடன் உள்ளூர்வாசிகளுடன் திருமண உறவுகளும் ஏற்பட்டுள்ளது. ம்லையகத் தோட்டத் தொழிலாளர்கள் பற்றிய மிக மிக முக்கியமாக குறிப்பிடவேண்டியது பெருந்தோட்டப் பகுதியான மலைசார்ந்த இடங்களில் இவர்கள் வாழ்வதன் காரண-மாக "மலையகம்" என்று குறிப்பிடும் வழக்கம் வந்து விட்டமையாகும். இப்பிரதேசத்திற்குரிய முக்கிய அரசியல் கட்சியொன்று மலையக மக்கள் முன்னணி என்ற பெயரையே கொண்டுள்ளது.

திரு. இராமநாதன் அவர்களும் இந்நூலின் தலைப்பினை மலையக இந்திய வம்சாவளி என்றே குறிப்பிடுகின்றார். பாரம்பரியமாக " கந்த-உடரட்ட" என சிங்களத்திலே குறிப்பிடப்படும் இப் பிரதேசம் இப்பொழுது "மலையகம்" என்ற தமிழ்த் தொடர் கொண்டு அழைக்கப்படுவது பெரும்பான்மை சமூகத்தை சார்ந்த சில அரசியல் வாதிகளிடத்திலே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது என்ற உண்மையையும் மறந்துவிடக்கூடாது.

எவ்வளவு நோக்கினாலும் மலையகத் தமிழர்கள் இலங்கை சனத்தொகையில் ஒரு முக்கிய அலகாக இருப்பது மாத்திரமல்லாமல் தனித்துவமான பண்பாட்டாளராகவும் விளங்குகின்றனர். சமஸ்கிருத நெறிப்படுகை (Sanskritisation) காரணமாக மலையக நகரங்களின் பல கோவில்களில் யாழ்ப்பாணத்தைச் சார்ந்த பிராமணர்களே பணிபுரிகின்றனர்.

மலையக தமிழர்களின் வளர்ச்சியில் கல்விக்கு ஒரு முக்கிய இடமுண்டு. தோட்டங்களின் நிர்வாகத்தேவை அத்தியாவசியம் காரணமாக பெருந்தோட்டங்களில் 05 ஆம் தரம் வரையிலான வகுப்புக்களையுடைய தோட்டப்பாடசாலைகள் இருந்து வந்துள்ளன. 20 ஆம் நூற்றாண்டின் முற்பகுதி, நடுப்பகுதிகளின் தோட்டப்பாடசாலைக் கல்வி மிகவும் குறைந்த தரத்திலேயே இருந்தது. ஆனால் 21 ஆம் நூற்றாண்டின் முதல் பத்தாண்டு நிலையில் நின்று நோக்கும்போது அப்பகுதி கல்வி முறையிலே பெருத்த வளர்ச்சி ஏற்பட்டுள்ளதை அவதானிக்கலாம். தோட்டப் பாடசாலைகளிலேயே கல்வி தொடங்கியவர்கள் பல்கலைக் கழகங்களிற்குச் சென்று பட்டங்கள் பெற்று உயர் நிலை உத்தியோகங்களை வகிப்பது இப்பொழுது சாதாரணமாகிவிட்டது என்றே கூறவேண்டும்.

தோட்டப் பகுதிக்கென இருந்த சுகாதாரத் துறையும் பாரியவரையறைகளுடனேயே தொடக்கத்தில் இயங்கிற்று. இப்பொழுது அது தேசிய நீரோட்டத்துக்குள் கொண்டுவரப்பட்டுள்ளது.

ஈழத்திலக்கியத்தில் மலையக இலக்கியம் இன்று நிரந்தர இடத்தைப் பிடித்துள்ளது. தோட்டப்பகுதியைச் சார்ந்த c.v வேலுப்பிள்ளை எழுதிய 'In Ceylon's Tea Gardens' என்ற கவிதைத் தொகுதி மிக பிரசித்தமானது. அனைத்து இந்திய இலக்கிய முக்கியத்துவம் உடைய மு.கணேஷ் N.S.M. இராமையா மலையகத்தைச் சார்ந்தவர்களே. சாரல் நாடான், குறிஞ்சித் தென்னவன், லெனின் மதிவாணன் என முக்கிய எழுத்தாளர் பலர் இன்று எழுதுகின்றனர். இன்றைய நிலையில் மலையக இலக்கியம் ஈழத்து இலக்கியத்தில் பெறுமதிமிக்க ஓர் அம்சமாக விளங்குகின்றது.

முற்றும்

11 ஆம் பக்க தொடர்ச்சி

யாழில் மாசடைந்த ......

படுத்துபவர்கள் ஆவர். பெரும்பாலான ஆர்பாட்டக்காரர்கள் யாழ்பாணத்திலிருந்து கொழும்பிற்கு இடம்பெயர்ந்த இளந்தலைமுறையினர் ஆவர். இவ்வார்பாட்டத்தினை வருன் வதீஷ்வரன் என்பவரே ஒழுங்கு செய்திருந்தார். ஊடகங்களிற்கு கருத்து வெளியிடுகையில் அவர் கூறியதாவது யாழிலுள்ள நீர் பிரச்சினை தொடர்பாக யாழ் பல்கலைக்கழகம் மற்றும் பேராதனைப் பல்கலைக்கழகங்கள் முன்னெடுத்த ஆய்வு அறிக்கைகளை மக்கள் பார்வைக்காக வெளியிடவேண்டும். இவ்வறிக்கைகளை மறைப்பதன் மூலமாக புலப்படுவது வடக்கிலுள்ள நீர் மாசடைவு நாம் எண்ணுவதைக் காட்டிலும் ஆபத்தானதா? என வினவினார். இவ்வார்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட பெரும்பாலான இளந்தலைமுறையினர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இப் பிரச்சினை தொடர்பாக காட்டிய ஆர்வம் தொடர்பில் கேள்வி எழுப்பியுள்ளனர். வடக்கில் தமிழ் மக்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான தேவை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தலைவர்களிடம் இல்லை. அவர்கள் அரசியல் இலாபத்தின் பொருட்டு பிரச்சினைகளை அவ்வாறே விட்டுவிடுகின்றனர் என மேலும் தெரிவித்தனர். யாழ் இளைஞர், யுவதிகளிடையே தமிழ்த் தேசியக்கூட்டமைப்புதொடர்பாகஇவ்வாறானதோர் நிலைப்பாடு காணப்படுமேயானால் இந்நிலைப்பாடு தொடர்பாக மாற்றங்கள் ஏற்படுத்துவது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கடமையாகும்.

**பாடசாலைகளும் ஆபத்தை எதிர் நோக்குகின்றன**

யாழ்ப்பாணத்தில் பெரும்பாலானவர்கள் தங்களுடைய குடிநீர்த் தேவையை கிணறுகளின் மூலமாகவே பூர்த்தி செய்து கொள்கின்றார்கள் என்ற அடிப்படையில் இக் குடிநீர் பிரச்சினையானது பூதாகரமானது என இலங்கை ஆசிரியர் சங்க செயலாளர் ஜோசப் ஸ்டாலின் கூறினார். வடக்கிலுள்ள 38 பாடசாலைகள் நேரடியாகவே இக்குடிநீர் பிரச்சினைக்கு முகங்கொடுக்கின்றனர். ஐரோப்பிய பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரிற்கு சொந்தமான இந்நிறுவனம் இப் போதைக்கு இலட்சக்கணக்கான கழிவு எண்ணெய்யை நிலத்தினுள் ஏற்கனவே வெளியேற்றிவிட்டது என்றும் தெற்கு மக்கள் இதுதொடர்பில் போதிய அவதானம் செலுத்தாமை கவலைக்குரியவிடயமாகுமென்று அவர் குறிப்பிட்டார். நீர் மாதிரிகளை பரிசோதிக்க ரூ.5,000 வரையில் செலவிட நேரிடுகின்றது. தம்முடைய தனிப்பட்ட தேவைக்காகப் பயன்படுத்துகின்ற கிணற்று நீா மாசடைந்து இருக்கின்றதா? என பரிசோதிப்பதற்கு ஏழை விவசாயி ஒருவரால் முடிவதில்லையென அவர் மேலும் தெரிவித்தார்.

தெற்கு மனிதர்களாகிய நாம் வடக்கு மக்களின் பிரச்சினைகளில் தலையிடாதிருக்கின்றமை தொடர்பாக மீண்டுமொருமுறை சிந்தித்துப் பார்க்கவேண்டும். ஏனெனில் நாம் இரு துருவங்களில் வாழ்ந்தப் போதிலும் ஒருநாட்டில்வாழும்இருசகோதரசகோதரிகள் ஆவர். வடக்கு மக்கள் எதிர்நோக்குகின்ற குடிநீர் பிரச்சினை அதியுயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிப் பிரச்சினை தொடர்பாக தெற்கிலுள்ள மக்கள் போதியளவு ஆர்வம் காட்டினால் தகர்ந்துபோயுள்ள தேசிய ஒற்றுமையினை மேலும் ஒன்றிணைக்க சந்தர்ப்பம் உள்ளது. இதுவே சிறந்ததோர் தேசிய ஒற்றுமைக்கு வழி கோலும்.

# அழிக்கப்பட்ட கிராமம்

## புல்லுமலைப் படுகொலை

-எஸ்.ஜெயானந்தமூர்த்தி-

**பா**லென்றால்பாலும், தேனென்றால் தேனும், நெல்லென்றால் நெல்லும் விரும்பிய நேரம் விரும்பிய அளவினைப் பெற்றக்கொள்ளக்கூடிய வளம் மிகு கிராமம் . புல்லுமலை பலா, மா, வாழையென முக்கனியும் சொரிந்து கிடக்கும் தமிழர் பூமி . மலைநாட்டின் சாயலை ஒத்த இப்பிரதேசம் பார்ப்பவர் மனதை சுண்டியிழுத்துவிடும் அழகுடையது.

பல நூற்றாண்டுகளாய் தமிழர் வாழ்ந்த இப்பூமி இன்று புதர்மண்டிக் கிடக்கிறது. மண்ணைக் கிளறக் கிளற செல்வத்தை அள்ளிக் கொடுக்கும் இப்பிர தேசத்தை சிங்களக் குடியேற்றத்தினால் அபகரித்து விட சிங்கள தேசம் அவ்வப்போது முயன்றது, 1983ஆம் ஆண்டு தொடங்கி 1990ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதிக்குள் ஐந்துக்கு மேற்பட்ட தடவைகள் சிங்கள இராணுவத்தினரும் சிங்களக் காடையர் கும்பலும் இணைந்து இக் கிராமத்தை அழித்துவிடும் படுகொலை களில் இறங்கினர். வீடுகள் தீக்கிரையாக்கப் பட்டன. சொத்துக்கள் சூறையாடப்பட்டன. கொடூரக்கொலைகள் நடந்தன. வாய் திறந்து சொல்லமுடியாத பாலியல் கொடுமைகள் கொலையுடன் நிகழ்ந்தன. நானூறுக்கு மேற்பட்ட குடும்பங்களுக்கு என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாமல் புதையுண்டு போனது.

ஒவ்வொரு தடவையும் ஓடி ஒழிந்து தப்பிக்கொண்ட ஒரு சிலர் மட்டுமே இன்று உறுகாமம், கித்துள், மரப்பாலம், சின்னப்புல்லுமலை ஆகிய கிராமங்களில் வாழ்ந்து வருகின்றனர். வாழ்வின் முழுமையை தொட்டு நிற்கும் இவர்களும் இறந்துவிட்டால் புல்லுமலைப் படுகொலைகளின் உண்மைகளும் மறைந்து புதைந்து விடும். அந்த முதுமைகளின் உள்ளத்தில் உறைந்து கிடந்த ஒரு பகுதியை கிளறிய போது உள்ளம் கொதிக்கும் உண்மைகள் வெளிவந்தன.

உறுகாமத்தில் இடம்பெயர்ந்து வாழும் சூசைமுத்து தம்பிமுத்து (அந்தோணி) என்பவரும் அவரது தம்பியான செல்லத்தம்பி பேரின்ப ராசாவையும் சேர்த்து அவரது மனைவியையும் இழந்து போன நாளை வேதனையுடன் வெளிப்படுத்தினார்.

1983ஆம் ஆண்டு சிங்கள ஆமியும், சிங்கள காடையர்களும் சேர்ந்து வந்து நம்மட தமிழ் ஆட்களின்ர வீடுகள் எல்லாத்தையும் கொழுத்தினாங்கள். வீடுகளுக்க இருந்த நம்மட சொத்துக்கள் எல்லாத்தையும் வாகனங்கள் கொண்டு வந்து ஏத்திக் கொண்டு போயிட்டாங்கள். 40,45 வீடுகளை கொழுத்தினாங்கள். எல்லாரும் பயத்தில் ஓடி சேனைப்பக்கம் போயிருந்திட்டாங்க. நாங்களும் மூங்கில் மலையில இருக்கிற நம்மட சேனையில் ஓடிப்போயிருந்தம். மறுகா மூங்கில்மலைக்கு வந்த சிங்கள ஆமி சேனையிலிருந்த எல்லோரையும் சுத்தி வளைச்சுப் பிடிச்சிட்டுப் போனான். அதில நம்மட தம்பியும் பெஞ்சாதியும் அகப்பட்டிட்டாங்கள். தம்பிட பெஞ்சாதி கர்பிணியாக இருந்தாங்க. அவங்கள தம்பிக்கு முன்னால வைச்சே மாறி மாறி கற்பழித்தாங்கள். தம்பியை கையும் காலையும் கட்டிப்போட்டு பெஞ்சாதியின் வயித்தை கத்தியால கிழிச்சு குழந்தையை வெளியில எடுத்துப்போட்டு சப்பாத்துக் காலால மிதிச்சுக் கொண்டிருந்தாங்க. கடைசியா

**1983ஆம் ஆண்டு சிங்கள ஆமியும் சிங்களக் காடையர்களும் சேர்ந்து வந்து நம்மட தமிழ் ஆட்களின்ர வீடுகள் எல்லாத்தையும் கொழுத்தினாங்கள். வீடுகளுக்க இருந்த நம்மட சொத்துக்கள் எல்லாத்தையும் வாகனங்கள் கொண்டுவந்து ஏத்திக் கொண்டு போயிட்டாங்கள். 40,45 வீடுகள் கொழுத்தினாங்கள்.**



தம்பியை காதுக்குள்ள வைச்சு சுட்டுப் போட்டு நிர்வாணமாய் கிடந்த அவங்கட பெஞ்சாதியோட உடலுறவு வைச்சுக்கொள்ளுற மாதிரி தம்பியிட கால அவங்களின்ர உடம்பில தூக்கிப்போட்டு அவங்க கையால தம்பியை கட்டிப்பிடிக்கிற மாதிரி முகத்தோட முகம் சேரவைச்சிட்டுப் போயிருந்தானுவ. அவங்களுக்கு பக்கத்தில கொஞ்சம் தள்ளி யோகநாதன் அவங்கட அப்பா ஆறுமுகம் ஜெகநாதன் ராமையா என ஆறு பேரை ஒன்றாக சுட்டுப் போட்டிருந்தாங்கள். ஒராலின்ர நெஞ்சை கத்தியால கிழிச்சை ஈரல் எல்லாத்தையும் இழுத்து வெளியில போட்டிருந்தாங்க. பிடிச்சுட்டுப் போன மற்ற ஆட்களுக்கு என்ன நடந்தது என்று இன்று வரைக்கும் யாருக்கும் தெரியாது என தன் தம்பி குடும்பத்திற்கு நடந்த துயரத்தை சொல்லும் போது அவரது கண்கள் கலங்கிக் குளமாகிறது.

பிள்ளைகளையும் தனது கணவனையும் சிங்கள இராணுவத்திடம் பறிகொடுத்த கதிர்வேலு ராசம்மா என்ற மூதாட்டி தன் மனச்சுமைகளை கொட்டினாள். 83, 84 ஆம் ஆண்டுகளிலும் மறுகா 90ஆம் ஆண்டிலும் மாறி மாறி ஒவ்வொரு பிள்ளையாய் கொண்டுபோய் சுட்டுட்டாங்கள் பாவியல் பிள்ளையை பிடிச்சுட்டுப் போறானுகள் என்று சொன்னதும் பின்னால ஓடினன். ஓடி வராத சுட்டிடுவம் என்று மிரட்டினார்கள். வீட்டுக்குப் போய் விசாரிச்சு விட்டிடுவம் என சொல்லிவிட்டு மறுபடியும் துவக்கை நீட்டி சுடுவம் என மிரட்டினான் கொஞ்ச நேரம் நிண்டாப்புறம் காம்புக்குப் போனம். போனதும் சொன்னான் இன்டைக்குப் போட்டு நாளைக்கு வாங்க என்டான். மறுகா நாளைக்குப் போனம் விடல . அடுத்தநாள் போனம் போனப்போ சொன்னாங்க உங்கட பிள்ளையல காட்டில கொண்டு போய் விட்டுட்டம் அங்க போய் பாருங்க என்டு சொன்னதும் பயத்தில உடன நாங்கள் போகல . இரண்டொரு நாள் கழிச்சு தேடிப்போனா காட்டில நிறைய சவங்கள் கிடக்குது. அங்கால திரும்பினால் தலையை வெட்டினால் போல கிடக்குது இங்கால திரும்பினா காலை கையை வெட்டினால் போல கிடக்குது. பாக்கிற இடத்திலயெல்லாம் கிடக்குது. என்ட பிள்ளையா உன்ர பிள்ளையா என்டு ஒன்றையும் அடையாளம் தெரியல. எல்லாம் ஊதி உருமாறிப்போச்சு புதைக்கவும் முடியாம அங்க நிற்கப் பயந்திட்டு அப்படியே விட்டிடுட்டு வந்திட்டம் அதுக்கு அப்புறமாயும் ஆமி விடல. ஓடிட்டு திரும்பவும் உருக்குவந்த போது மற்ற மகனும் குளத்திற்கு மீன் பிடிக்கப் போன மகன் ஆறுமுகநாதனையும் அங்க பிடிச்சு வெட்டிப்போட்டுட்டான் மீன் பிடிக்கப்போனவனை காணல்ல என்று தேடிப்போன போது அங்கேயும் கழுத்து வெட்டின படியும். கைவெட்டின படியும் வெட்டிப்போட்டிட்டு

(22 ஆம் பக்கம் பார்க்க)

**எத்தனை நாள்**

**துயின்றிருப்பாய்**

**என்னருமை**

**தாய்மண்ணே..!**

**பல்லாயிரம் பேர் தெருவில் இறங்கிப் போராடினர்**

# மௌனம் உடைத்தது யாழ்.பல்கலைக்கழகம்

-பாமரன்-



நீண்டகாலத்தின் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலை எழுச்சி கண்டது. யாரும் எதிர்ப்பார்த்திருக்கவில்லை இவ்வளவு மக்கள் பேரெழுச்சியுடன் தம் மீது இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராகத் தெருவில் இறங்குவார்கள் என்று.

இலங்கைக்கு எதிரான ஐ.நா விசாரணைகள் தள்ளிப்போடப்பட்டமை தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அதிர்ச்சியையும், வேதனையையும் ஏற்படுத்தியிருந்தது. சர்வதேச சமூகம் மீதான முழு நம்பிக்கையையும் இழந்து போகுமளவுக்கு வெறுமையை உணர்ந்தார்கள். இதனைத் தெளிவாக விளங்கிக்கொண்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழக சமூகம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தியும் இலங்கை தொடர்பாக மார்ச் மாதம் வெளியிடப்படவிருந்த அறிக்கையைப் பிற்போடப்படுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்ததும் உடனே அந்த அறிக்கையை வெளியிட வேண்டும் எனவும் வலியுறுத்தியும் போராட்டம் ஒன்றினை நடாத்தியதன் மூலம் தனது வரலாற்றுக் கடமையை நிறைவேற்றியுள்ளது.

தமிழ் மக்கள் இப்போது அரசியல் கட்சிகள் ஏற்பாடு செய்யும் போராட்டங்களுக்குப் பெரிதாக ஆதரவு வழங்காத விரக்தி மனநிலைக்கு வந்துவிட்டனர். எனவே மக்களை அரசியல் கட்சிகளின் தலைமைத்துவத்தின் கீழ் அணிதிரட்டுவது மிகக்கடினமான விடயம். எனவேதான் யாழ். பல்கலைக்கழக சமூகம் தனக்கிருக்கின்ற சமூகப் பொறுப்பை உணர்ந்து தனது கடமையை சரியான நேரத்தில் நிறைவேற்ற முன்வந்திருந்தது.

அதன்படி, கடந்த பெப்ரவரி 24 ஆம் திகதி காலை 9.30 மணிக்கு அமைதிப் பேரணி நடத்துவதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டன. அரியல் கட்சிகள் சிவில் சமூக அமைப்புகள் போன்றன இதற்கு ஆதரவை வழங்கின. குறிப்பிட்டபடி சரியான நேரத்தில் யாழ்.பல்கலைக் கழக வளாகத்திலிருந்து மூத்தோரின் ஆசியுடனும் சடங்காசார முறையுடனும் ஆரம்பமானது.

மதகுருமார்கள், சிவில் சமூக அமைப்புக்கள், மாணவர்கள், அரசியல்கட்சிகளின் உறுப்பினர்கள், பொதுமக்கள் என அணிவகுத்து பல்கலைக்கழக வளாகத்தை விட்டு இராமநாதன் வீதியை அடைந்தது பேரணி. வீதியில் நின்றவர்களும் பேரணியுடன் கலக்க பல்லாயிரக்கணக்கான மாணவர்கள், இளைஞர்கள், பொது மக்களின் அமைதி நடைபயணம் பதாதைகளைத் தாங்கியபடி பலாலி வீதியை அடைந்தது. அங்கிருந்து பயணித்த பேரணியாளர்கள் ஆலடி சந்தி கடந்து கந்தர்மடம் சந்தி வழியாக நல்லூர் ஆலயத்தை நோக்கி நகர்ந்தனர். மேலும் பேரணியில் கலந்து கொண்ட மக்கள் தொகை அதிகரித்தது. போக்குவரத்து நெரிசலை கவனத்தில் கொண்டு ஒழுங்கான முறையில் மூவர் மூவராக சேர்ந்து வரிசையாக அனைவரும் நடந்தனர். அந்த ஒழுங்கமைப்புக்களில் பல்கலைக்கழக மாணவர்கள் மிகவும் பொறுப்புடன் ஈடுபட்டிருந்தனர். சில கிலோ மீற்றர்கள் அளவிற்கு பேரணியாளர்களின் ஊர்வலம் நகர்ந்தது.

அப்படியே நகர்ந்து நல்லூர் பின் வீதியை அடைந்தவர்கள் அந்தத் திடலில் கூடினர். காணாமல் போனவர்களின் பெற்றோர், உறவினர் பேரணியாளர்களுக்கு முன்வரிசையில் வந்து அழுது புரண்டு தமது சோகத்தை இந்த உலகுக்கு வெளிப்படுத்தினர். அந்தக் காட்சி மிகவும் உருக்கமானதாக, அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாகவும், வேதனைப்படுத்துவதாகவும், சர்வதேசத்தின் மீது தமிழர்களின் கூட்டு கோபத்தை வெளிப்படுத்துவதாகவும் இருந்தது. பாதிரியார்கள் மக்களை ஆறுதல் படுத்தினர்.

தொடர்ந்து சிறு அரங்கு போன்ற உயர் அடைவிடத்துக்கு, யாழ்.பல்கலைக் கழக சமூகத்தை சேர்ந்தவரும், நிகழ்வின் ஏற்பாட்டாளருமான இராஜகுமாரன், சிவில் சமூக அமையத்தின் தலைவர் வணக்கத்துக்குரிய ஆண்டகை இராயப்பு யோசப்பு, சர்வதேச இந்து மத ஒன்றியத்தின் தலைவர், யாழ்.பல்கலைக்கழகத்தின் மாணவர் ஒன்றிய தலைவர் துசிந்தன் ஆகியோர் வந்தனர். ஐ.நாவுக்கு சமர்ப்பிக்கவுள்ள அறிக்கையை இராஜகுமாரன் வாசித்தார். வாசித்து முடிந்ததும், அதனை ஐ.நாவுக்கு வழுங்குவதற்காக மதபெரியார்களிடம் கையளித்தார். அவர்கள் அதனைப் பெற்றுக் கொண்டதும், பேரணி முடிவுக்கு வருவதாக அறிவிக்கப்பட்டது.

இந்த பேரணி முடிவுற்றதும் ஊடகங்களுக்கான கருத்துக்களை ஏற்பாட்டாளர்கள் வழங்கினர். அதில் கலந்துகொண்ட பேராயர் ராயப்பு யோசப்பு கருத்து வெளியிடுகையில்,

'இறுதி யுத்தத்தின் போது பாதுகாப்பு வலயம் என்று அரசு அறிவித்த பகுதிக்குள்ளேயே 46 ஆயிரம் அப்பாவி தமிழர்களை கொன்று குவித்தது சிங்கள அரசு. இது மிகப் பெரும் மனித இனப்படு கொலை ஆகும். இவ்வாறு யுத்தத்தின் போது மனித உரிமைகளை இலங்கை இராணுவம் மீறியது. யுத்த சூனிய வலயங்களை அறிவித்து அதற்குள் புலிகள் இருக்கின்றனர் எனக் கூறி மக்கள் மீது கண்மூடித்தனமாகத் தாக்குதல் நடத்தியது. இது எதற்காக என்றால்புலிகளைமக்கள் வெறுக்கவும், தாங்கள் இந்த மீறல்களை செய்யவில்லை புலிகளே செய்தனர் என சர்வதேசத்திடம் கூறித் தப்பவுமே. யுத்தத்துக்குக் கட்டளையிட்ட போர்க் குற்றவாளியான மஹிந்த ராஜபக்ஷவே போர் குற்றங்கள், மனித உரிமைகள் மீறல் குறித்து விசாரணை செய்ய குழு ஒன்றை நியமித்தார். குற்றவாளியே நீதிபதியாக இருக்கும் நிலை தான் இது. இவர்களிடம் இருந்து எமது மக்களுக்கு நீதி கிடைக்கும் என்று எப்படி நம்புவது. புதிய அரசாங்கத்தை மக்கள் நம்புகின்றனர். ஆனால் தமிழருக்கு எதிராக இழைக்கப்பட்ட குற்றங்கள் குறித்து விசாரணை விடயத்தில் புதிய அரசாங்கத்தில் மக்கள் நம்பிக்கை வைக்கவில்லை. இந்நிலையிலேயே தமிழ்மக்கள் ஐ.நா. மனித உரிமைகள் ஆணைக்குழுவின் விசாரணை இறுதி அறிக்கையில் தமக்கு நீதி கிடைக்கும் என நம்பினர். ஆனால் இந்த அறிக்கை மார்ச் மாதம் சமர்ப்பிக்கப்படாமல் பிற்போடப்பட்டமை தமிழருக்கு ஏமாற்றமே" - என்றார்.

> **"அப்படியே நகர்ந்து நல்லூர் பின்வீதியை அடைந்தவர்கள், அந்தத் திடலில் கூடினர். காணாமல் போனவர்களின் பெற்றோர், உறவினர் பேரணியாளர்களுக்கு முன்வரிசையில் வந்து அழுது அரற்றினர். அந்தக் காட்சி மிகவும் உருக்கமானதாகவும், அனைவரின் கவனத்தையும் ஈர்ப்பதாகவும், வேதனைப் படுத்துவதாகவும், சர்வதேசத்தின் மீது தமிழர்களின் கூட்டு கோபத்தை வெளிப்படுத்துவதாகவும் இருந்தது"**

அங்கு, இந்தப் போராட்டதின் மூலம் சர்வதேசத்துக்கு நீங்கள் சொல்ல விளைவது என்ன எனக் கேட்கப்பட்ட கேள்விக்கு பதிலளித்த பேரணியின் ஏற்பாட்டாளரும், யாழ்.பல்கலைக்கழக சமூகத்தை சேர்ந்தவருமான அ. இராஜகுமாரன்.

'இந்தப் போராட்டத்தின் மூலம் சர்வதேசத்துக்கு சொல்ல விளைவது என்னவென்றால் இலங்கையில் மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள், சட்டவிரோத தடுத்து வைப்புக்கள், கடத்தல்கள் பாரிய அளவில் நடந்துள்ளன. அவை இனப்படுகொலைக்குச் சமமானவை. இவை எந்தக் காரணத்தினாலும் உள்ளக விசாரணை பொறிமுறையொன்றினால் விசாரித்து தீர்வு காணப்படமுடியாதவை. காரணம் இன்றைய அரசில் இருப்பவர்கள் நேற்றைய அரசில் இருந்தவர்கள். தமிழர்களுக்கு எதிரான இத்தனை இனப்படுகொலைக்கும் காரணமாக, ஒத்தாசையாக இருந்தவர்கள். இந்தநிலையில் தமிழர்களுக்கு நீதியைப் பெற்றுத்தருவதற்கு உள்ளகவிசாரணை எந்த வகையிலும் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு நீதியை வழங்கும் என்பதில் நம்பிக்கை இழந்து இருக்கின்றோம். இந்த விடயத்தில் சர்வதேச சமூகம் தமது நலனைக் கருத்தில் கொண்டு போலியாக செயற்படக் கூடாது. நவிபிள்ளைக்கு பின்னர் ஐ.நா மனித உரிமை பேரவையின் ஆணையாளராக வந்தவர் மிக இறுக்கமானவராகவும், நடுநிலை தவறாதவராகவும் இருப்பார் என்று சொன்னபோது மிகவும் சந்தோசப்பட்டோம். பக்கம் சராதீர்கள். உலகம் முழுவதும் பாதிக்கப்பட்ட மக்கள் விடயத்தில் நேர்மையாக நடந்துகொள்ளுங்கள். ஈழத்தமிழர்கள் மிகமோசமான அடக்குமுறைக்குள்ளாகியிருக்கிறார்கள். உயிரிழப்புக்கள், சொத்திழப்புக்களைத் தொடர்ச்சியாக சந்தித்துக்கொண்டிருக்கிறார்கள். எனவே தமிழர் விடயத்தில் நேர்மையான போக்கை கடைப்பிடியுங்கள். அப்படியொரு நிலை வரும்வரை தொடர்ச்சியாக ஜனநாயக வழியில் போராடுவோம். அது உங்களுக்கு பெரும் சங்கடத்தை ஏற்படுத்தக்

(15 ஆம் பக்கம் பார்க்க)

# மாதொருபாகன்

## (நாவல்)



பெருமாள் முருகன்




2

வெள்ளைச் சேலைக்காரி விதைத்தால் ஒன்றும் விளையாது என்பார்கள். பல பேரையும் கூப்பிட்டுப் பார்த்து விட்டு "நாலு பயிரு மொளச்சாலுஞ் செரி. அதும் இல்லாம போனாலுஞ் செரி" என்று அவளே விதைத்து ஓட்டிவிட்டாள். ஒன்றும் மோசம் போகவில்லை. எல்லாருக்கும் விளைந்த மாதிரியே அவளுக்கும் விளைந்தது.

என்றாலும் அவன் பொட்டுக்கூடையைத் தூக்கி வைத்துக் கொள்ளும் அளவு கைவலுப் பெற்றதும் அவனிடம் கொடுத்து விட்டாள். அவன் விதைப்பு ஒரே சீராக வரும் வரை கூடமாட ஒத்தாசை செய்தாள். அதன் பின் முழுக்கவே அவன் பொறுப்பானது. காடு மேடு என்று திரிந்தாலும் எப்போதும் அம்மாவுக்குக் கட்டுப்பட்டே இருப்பான் காளி. கல்யாணத்திற்கு முன்னால் எங்கெங்கோ சுற்றி அலைவான். வேலை சமயத்தை தவிர மற்ற நாட்களில் அவனைக் கண்டு



பிடிப்பதே கடினம். மாராயிடம் யாராவது கேட்டால் 'நாயிக்கு என்ன வேல. நெவுலுக் கண்ட எடத்துல குழி பறிச்சுப் படுத்துக் கெடக்கும். இல்லீனாக் காடு மேடுன்னு ஓடிச் சலிக்கும்.' எங்க போனா என்ன, ராத்திரி பட்டிச்சோத்துக்குக் கூப்புடும் போது ஒடியாந் திரும் என்பாள். அந்த நம்பிக்கையை அவன் ஒரு போதும் குலைக்கவில்லை. காட்டு வேலையில் குறை வைக்கமாட்டான். இப்போது சமீப காலமாக அவனுண்டு காடுண்டு என்றுதான் இருக்கிறான் எங்கும் போவதில்லை. யாரையும் பார்ப்பதில்லை. சேக்காளிகளை எல்லாம் விட்டு விலகி விட்டான். வேலி சூழ்ந்த தொண்டுப்பட்டியே கதி. அப்படி ஆகிவிட்டது.

கட்டிலிலில் படுத்துக் கண்களை மூடிக்கொண்டான். வேலை இல்லை என்று தெரிந்துவிட்டால் உடலில் அசதி குடிபுகுந்து கொள்கிறது. சொன்னது போல அவன் வந்துவிட்ட சந்தோசம் பொன்னாளுக்கு. புதிதாகக் கல்யாணமாகி வந்து சேர்ந்திருக்கிற மாதிரி ஒரு துள்ளாட்டத்துடன் வீட்டுக்குள் அவள் நடமாடுவதை உணர்ந்தான். எங்கிருந்தாலும் அவள் என்ன செய்வாள், எப்படிச்செய்வாள், என்பதெல்லாம் அவனுக்கு அத்துபடி. அவன் எண்ணங்களில் நிரம்பி அசைவுகளையும் சொல்லும் அளவுக்கு ஆக்கிரமித்துவிட்டாள். மாமனுக்காகப் பலகாரம் செய்து கொண்டிருப்பதை அவன் நாசி உணர்ந்திருந்தது. என்ன பலகாரமாக இருக்கும் என்பது அவனறிந்தது தான்.

**பன்னிரண்டு வருசத்தில் மரம் காய்த்துச் செழிக்கிறது. இந்தப் பாழும் வயிற்றில் ஒரு புழுப் பூச்சிக்குக்கூட வழியில்லையே என்று யோசித்திருப்பாள். எதைப் பார்த்தாலும் தன் குறை நினைவுக்கு வந்து தொலைகிறது.**

கொஞ்ச நேரத்தில் 'மாமா மாமா' என்று எழுப்பினாள். கையில் பலகாரத்தட்டு கராப் பக்கடாவும் அரிசிக் கச்சாயமும். உறங்கி விழிப்பவன் போல எழுந்தான். அவள் முகத்தில் சிரிப்பு. கண், மூக்கு, கன்னம், நெற்றி எல்லாம் ஒருசேரச் சிரிக்கும் சிரிப்பு இவளுக்கு எங்கிருந்து தான் வருகிறதோ. அவன் மடியில் பலகாரத் தட்டை வைத்து விட்டுக் கீழே உட்கார்ந்தாள். 'மரத்தப் பாத்தியா' என்றான். காரப் பக்கடா மொறுமொறு வெனக் கரைந்தது.

'ஆமா வரும் போதெல்லாம் மரத்தப் பாத்துக்கிட்டுத் தனா இருக்கறன்' என்றாள் சலிப்புடன்.

'இல்ல பிள்ள. ஒருக்கா அண்ணாந்து பாரு. எலையும் தழையுமா மரம் எப்பிடி ஒடி வளர்ந்திருக்குது. பூவுக்கும் பம்பரக் காய்க்கும் அளவில்ல' என்றான் உற்சாகக் குரலில்.

உள்ளிருந்து அவள் அம்மா 'பொன்னா இங்க வா. இந்தக் கருப்பட்டியச் சீவிக் குடு' என்று சத்தம் போட்டாள். 'இதா வர்றம்மா' என்று குரல் கொடுத்து விட்டு அவன் பக்கம் திரும்பினாள்.

'நம்ம கல்யாணம் ஆனப்ப வெச்ச மரம். அதா இதான்னு பன்னண்டு வருசம் ஓடிப் போயிருச்சு' என்று பெரு மூச்சு விட்டாள்.

அவள் முகத்தில் நிழல் படர்ந்தது. பன்னிரண்டு வருசத்தில் மரம் காய்த்துச் செழிக்கிறது. இந்தப் பாழும் வயிற்றில் ஒரு புழுப் பூச்சிக்குக்கூட வழியில்லையே என்றுயோசித்திருப்பாள். எதைப்பார்த்தாலும் தன் குறை நினைவுக்கு வந்து தொலைக் கிறது.

கல்யாணமான போது அவள் அப்பனிடம் சண்டை போட்டு மாட்டுக்கிடாரி ஒன்றைப் பிடித்து வந்தாள். அது ஏழெட்டு முறை ஈன்று விட்டது. அதன் வருக்கம் தொண்டுப் பட்டி நிரம்பிக் கிடக்கிறது. அந்த மாட்டைப் பார்க்கும் போதெல்லாம் கண்ணீர் தானாக வரும். 'இந்த வாயில்லாச் சீவன் வாங்கி வந்திருக்கிற வரம் நான் வாங்கலியே' என்று வாய் விட்டுக் கதறி இருக்கின்றாள் அவள் அழுகை பொறுக்காமல் அந்த மாட்டு வர்க்கத்தையே அடியோடு ஒழித்துவிட வேண்டும் என்று அவனுக்கு வெறி வரும். ஆனால் அதன் முகத்தைப் பார்த்ததும் 'நம்ம கஷ்டத்துக்கு இது என்ன பண்ணும், பாவம்' என்று நெகிழ்ந்து விடுவான்.

'கருப்பட்டி போட்டாலே கச்சாயத் துக்குத் தனி ருசிதான்' என்று பேச்சை மாற்றினான். கொஞ்சம் பிய்த்து அவள் வாயருகே கொண்டு போனான். 'ஆமா இப்பத்தான் பாசம் பொத்துக்கிட்டு வருது' என்று கோபிப்பது போலச் சந்தோசமாய் வாயில் வாங்கிக் கொண்டாள். உள்ளே யிருந்து அவள் அம்மா அழைத் தாள்.

**'கருப்பட்டி போட்டாலே கச்சாயத் துக்குத் தனி ருசிதான்' என்று பேச்சை மாற்றினான். கொஞ்சம் பிய்த்து அவள் வாயருகே கொண்டு போனான். 'ஆமா இப்பத்தான் பாசம் பொத்துக்கிட்டு வருது' என்று கோபிப்பது போலச் சந்தோசமாய் வாயில் வாங்கிக் கொண்டாள்.**

'இங்க வா பிள்ள. எண்ண காயுது.'

'கொஞ்ச நேரங்கூடப் பொறுக்காதே. 'நல்லாயி பொல்லாதவ, நாளும் கெழமயும் இல்லாதவன்னு சும்மாவா செலவாந்தரம் சொல்லியிருக்குது. எதுக்கு இப்ப இப்படிக் கூப்புடறாளோ' என்று எழுந்து போனாள் பொன்னா.

போகிறவளைப் பார்த்தபடி கண்கள் நின்றன குலையாத உடம்பு பார்க்கப் பார்க்கத் தீராத ஆசை பெருகிப் பொங்க இப்போதே அவள் வேண்டும் போலிருந்தது. மாமனார் வீட்டில் தனியாக இருந்து கொள்ள அறை கிடையாது. கல்யாணம் ஆனபோது தவச மூட்டை, மொடா வரிசைகள்அடுக்கியிருந்த வீட்டை அப்படி இப்படி சரிசெய்து ஒதுக்கிக் கொடுத்தார்கள். பழைய ஆள் ஆனதும் திண்ணையிலோ வாசலிலோ கட்டில் வாவென்று இழுத்து ஊருக்குக் கூட்டிப் போய்விட்டால் என்ன வென்று பரபரத்தான்.

மொட்டைவெயில்நேரத்தில் உடம்பு படுத்தும் பாடு தாளவில்லை. அடைமழைக் காலத்திலெல்லாம் அடைக்கோழி போல அவளையே அணைந்து வீட்டில் கிடப்பான். ஒவ்வொரு சமயம் தோன்றும். அவள் வயிரு திறந்திருந்தால். எல்லாப் பெண்களையும் போல் உடம்பு பருத்துக் கிழவியாகி இருப்பாளோ? பெண் பற்றிய கவனம் ஏற்பட்ட வயதில் அவள் உடம்பு அவனைச் சீண்டிக் கொண்டே இருக்கும். இம்சை தாளாது அவளைப் பார்ப்பதைத் தவிர்க்க முயல்வான். ஆனால் மனதின் கண்கள் அவளைத் துளாவியபடியே இருக்கும். இப்போதும் அதில் மாற்றமில்லை சீண்டலுக்கு ஆட்பட்டு அவளை அணைக்கும் போது இது பழைய அணைப்பில்லை என்று தோன்றி விடுகிறது. ஒவ்வொரு முறையும் புதிதாக அவளை அறிந்துகொள்ளும் ஆர்வமும் வேகமும் இருந்தன. இப்போது தணிந்து போனது முகத்தருகே முகம் போகும் போதே 'இந்த முறை உருவாகுமா?' என்று மனம் யோசிக்கத் தொடங்கிவிடும். முழங்கிய தீ அணைந்து நெருப்புக் கங்குகளாகிச் சாம்பல் பூக்கும். தண்ணீர் தெளித்து அணைக்கும் முயற்சியாக அவன் எந்திரமாகிவிடுவான்.' சாமீ இந்த முற கொடுத்திரு. எப்படியாவது கொடுத்திரு' என்று சொல்லிக் கொண்டே இருப்பான். புகைந்து தணியும்.

ஏழெட்டு வருசமாகவே இரண்டாம் கல்யாணம் பற்றிப் பேச்சு வெளிப்படையாகவும் மறைமுகமாகவும் நடந்து கொண்டிருக்கிறது. அதனாலேயே பொன்னாயிக்கு பலபேரைப் பிடிக்காமல் போய்விட்டது. ஆடு மாடு வியாபாரம் செய்யும் செல்லப்ப கவுண்டர் ஒருமுறை தொண்டுப் பட்டிக்கு வந்திருந்தார். ஒரு கிடாரி இரண்டு மூன்று முறை காளைக்குச் சேர்த்தும் சினையாக வில்லை. விற்றுத் தொலைத்துவிடலாம் என்று அவரை வரச் சொல்லியிருந்தான். அவரோடு பேசிக் கொண்டிருந்த போது பொன்னா சாணி அள்ளிக் கட்டுத்தரையைச் சுத்தம் செய்து கொண்டிருந்தாள். தொண்டுப்பட்டிக்கு வந்தால் சும்மா இருக்கமாட்டாள். அவள் சாணி எடுத்து முடிந்திருந்தாலும் கட்டுத்தரையைச் சுத்தமாக்குவாள். மாடு கன்றுகளைக் கழுவி விடுவாள். மாற்றிக் கட்டுவாள். தீனி போடுவாள். பெரும்பாலும் ஆட்டுப் பட்டியை அவளே கூட்டி அள்ளிக் கொட்டுவாள். அவள் வேலையில் கவனமாக இருந்தாள். என்றாலும் தன் குடுமியைத் தட்டி முடிந்தபடி அவளைப் பார்த்துக்கொண்டே அவர் சொன்னார்.

(தொடரும்....)

**"மரணம் தன் அருகில் நெருங்கி வருவது தெரிந்தும் தன் மகளைப் படிக்க பள்ளிக்கு அனுப்பும் வரை தான் சாகக்கூடாது. சாகமாட்டேன் என்ற வைராக்கியத்தோடு, மரணத்தோடு போராடுகிறாள்"**



# நேற்று

## Yesterday

ஜெ.பிஸ்மி

சினிமா

விஞ்ஞானத்தில் வியக்கத்தக்க முன்னேற்றங்களால் வளர்ச்சியடைந்திருக்கும் நாம் இன்னொரு பக்கம், மனித இனத்துக்கே மிகப்பெரிய அச்சுறுத்தலாய் இருக்கும் ஆபத்து வளையத்துக்குள் வளைய வந்து கொண்டிருக்கின்றோம். கண்ணுக்குத் தெரியாமல் மனித உயிர்களை அரித்துக் கொண்டிருக்கும் , அழித்துக்கொண்டிருக்கும் எய்ட்ஸ் எனும் ஆட்கொல்லி நோய்தான் அந்த ஆபத்து! உலக மக்கள் தொகையில் பத்து சதவிகிதத்தினர் எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், அவர்களில் முப்பது சதவிகிதத்தினர் ஆபிரிக்க மக்கள் என்றும் வயிற்றில் புளியைக் கரைக்கின்றன புள்ளிவிபரங்கள்! கடந்த கால் நூற்றாண்டில் இருபது மில்லியன் ஆபிரிக்க மக்கள் எய்ட்ஸ் நோயினால் மரணமடைந்திருக்கிறார்கள் என்பதும், அவர்களில் பெண்களும், குழந்தைகளும் அடக்கம் என்கின்ற தகவலும் அதைவிட அதிர்ச்சி தருகின்ற செய்தி...! எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஆபிரிக்க மக்களில் எழுபத்தைந்து சதவிகிதம் பேர் அந்நோயால் பாதிக்கப்பட்டது தெரியாமல், அது பற்றிய விழிப்புணர்வு இல்லாமல் இருக்கின்றார்கள் என்பது மேலும் அதிர வைக்கின்றது.

எய்ட்ஸ்நோய்க்குபலியாகிக்கொண்டிருக்கும் தன் நாட்டு மக்களைப் பற்றி ஒரு படைப்பாளனுக்கு ஏற்பட்ட கவலையின் வெளிப்பாடாக உருவாக்கப்பட்ட திரைப்படமே - யெஸ்டர்டே! (yesterday) தென்ஆபிரிக்காவில் வசிக்கும் வெள்ளையரான இயக்குநர் டாரல் ரூட் (Darrell Roodt) இயக்கி, 2004 ஆம் ஆண்டு வெளியான இப்படம், ஆஸ்கர் விருதுக்கான போட்டியில் சிறந்த வெளிநாட்டுப் படத்துக்கான பிரிவில் முன்மொழியப்பட்டது. பெரும்பான்மை ஆபிரிக்கர்கள் பேசும் மொழியான ஜுலு மொழியில் எடுக்கப்பட்ட முதல் படமான 'யெஸ்டர்டே' திரைப்படம் தாங்கி வந்த செய்தியும் எய்ட்ஸ் நோயின் கொடூரத்தை அது விவரித்த விதமும் உலகஅரங்கில்இப்படத்தைபரபரப்பாகப்பேச வைத்ததோடு வெனீஸ், டொரோண்டா திரைப்பட விருதுகள் உட்பட பல சர்வதேச விருதுகளையும் பெறக் காரணமாக இருந்தது.

யெஸ்டர்டே - எய்ட்ஸ் நோயால் பாதிக்கப்பட்ட ஒரு இளம் தாயின் கதை! ஆபிரிக்காவில் ஜுலு பிரதேசத்தில் உள்ள ஒரு குக்கிராமத்தில் வசிக்கும் யெஸ்டர்டே படிப்பறிவில்லாதவள்! கணவன் ஜான், தொலைதூர நகரமான ஜோகன்ஸ்பர்கில் உள்ள தங்கச்சுரங்கத்தில் வேலை பார்த்துக் கொண்டிருக்க தன் ஏழு வயது மகள் பியூட்டியுடன் வசித்து வருகிறாள். யெஸ்டர்டே எப்போதாவதுதான் கணவன் வீட்டுக்கு வருவான். அப்படி வரும்போது கூட மனைவியிடமிருந்து விலகியே இருக்கிறான். தன் கணவனின் புறக்கணிப்புக்குக் காரணம் தெரியாமல் கவலைப்படுகிறாள் யெஸ்டர்டே!

இன்னொரு பக்கம், அவளது உடம்பு நாளுக்கு நாள் பலகீனமாகிக் கொண்டே வருகிறது. அடிக்கடி நோய்வாய்ப்படுகிறாள். அந்தக் கிராமத்தில் மருத்துவமனை இல்லை. மருத்துவமனைக்குச் செல்வதென்றால் பல மணி நேரம் வெகுதூரம் நடந்து செல்லவேண்டும். தன் உடல் பலகீனத்தைப் பொறுத்துக்கொண்டு பல முறை மருத்துவமனைக்குச் செல்கிறாள். ஒவ்வொருமுறையும் மருத்துவமனையை அவள் அடையும் போது நேரமாகிவிடுவதால் டாக்டர் இருப்பதில்லை.

யெஸ்டர்டேயின் உடல்நிலை மோசமாகிக் கொண்டு வருவதை கவனிக்கும் அந்தக் கிராமத்தில் இருக்கும் டீச்சர் அவளுக்கு உதவ முன் வருகிறாள். யெஸ்டர்டேவுக்கு தானே பணம் கொடுத்து, வாடகை டாக்ஸியில் சென்று டாக்டரை பார்த்து சிகிச்சை பெற்று வரும்படி அனுப்பி வைக்கிறாள் . அவளைப் பரிசோதிக்கும் டாக்டர் அவளுக்கு எய்ட்ஸ் நோய் இருப்பதை உறுதி செய்கிறார். அதைக் கேட்டு இடிந்து போகிறாள். யெஸ்டர்டே! தன் கணவன் ஜான் மூலம்தான் தனக்கு இந்த நோய் வந்திருக்கும் என்பதைப் புரிந்துகொள்ளும் அவள். ஜோகன்ஸ்பர்க் சென்று கணவனை சந்திக்கிறாள்.

**அவனோ தன்னால்தான் அவளுக்கு எய்ட்ஸ் வந்தது என்பதை ஏற்க மறுக்கிறான். அதோடு அவளை கடுமையாய் திட்டி அனுப்பி விடுகிறான். ஆழ்ந்த துயரத்தில் தன் கிராமத்துக்குத் திரும்புகிறாள். எய்ட்ஸ் நோய் தாக்கப்பட்டாலும் தன் அன்றாட வேலைகளிலிருந்து அவளுக்கு ஓய்வில்லை.**

அவனோ தன்னால்தான் அவளுக்கு எய்ட்ஸ் வந்தது என்பதை ஏற்க மறுக்கிறான். அதோடு அவளை கடுமையாய் திட்டி அனுப்பி விடுகிறான். ஆழ்ந்த துயரத்தில் தன் கிராமத்துக்குத் திரும்புகிறாள். எய்ட்ஸ் நோய் தாக்கப்பட்டாலும் தன் அன்றாட வேலைகளிலிருந்து அவளுக்கு ஓய்வில்லை. எப்போதும் போல்தண்ணீர் எடுப்பது, விறகு வெட்டுவது என்று கடுமையாய் உழைக்கவே செய்கிறாள். வாயிற்றுப் பாட்டுக்காக கடுமையாக உழைப்பதும், மருத்துவ சிகிச்சைக்காக அடிக்கடி வெகு தொலைவு நடப்பதும் அவளை மேலும் பலவீனமாக்குகிறது. மரணத்தை நோக்கிய தன் பயணம் சற்று வேகம் பிடித்திருப்பதை அவளும் உணர்கிறாள். ஆனாலும் மன உறுதியால்தன் ஆயுளை நீடித்துக் கொள்ளப்போராடுகிறாள் யெஸ்டர்டே.

மரணம் தன் அருகில் நெருங்கி வருவது தெரிந்தும் தன் மகளைப் படிக்க பள்ளிக்கு அனுப்பும் வரை தான் சாகக்கூடாது. சாகமாட்டேன் என்ற வைராக்கியத்தோடு, மரணத்தோடு போராடுகிறாள் யெஸ்டர்டே! வாழ்க்கை மீது நம்பிக்கையை ஏற்படுத்தும் விதமாக யெஸ்டர்டே திரைப்படத்தின் முடிவை அமைத்திருக்கிறார் இயக்குநர் டாரல் ரூட்!

யெஸ்டர்டே திரைப்படம் எய்ட்ஸ் நோயின் கொடுமையைப் பற்றி மட்டுமல்ல அந்நோயால்பாதிக்கப்பட்டவர்களைமற்றவர்கள் எப்படி கருணையோடு அரவணைக்க வேண்டும் என்பதையும் விவரித்திருக்கின்றது. எய்ட்ஸ் நோய் முற்றிப்போன நிலையில் ஜோகன்ஸ்பர்கிலிருந்து தன் கிராமத்துக்கே திரும்பி வருகிறான். யெஸ்டர்டேயின் கணவன் ஜான். மரணம் அடையும் தறுவாயில் இருக்கும் அவனையும், யெஸ்டர்டேயையும் அக்கிராமத்தினர் தவிர்க்கவில்லை. மாறாக மனிதாபிமானத்தோடு, உதவிகளை செய்வதாகக்காட்சி அமைத்திருக்கிறார். இக்காட்சி படம்பார்ப்போரை நெகிழ்ச்சியில் நெக்குருக வைப்பது மட்டுமல்ல எயிட்ஸ் நோயாளிகளை எவ்விதம் நடத்த வேண்டும் என்று அறிவுறுத்துவதாகவும் இருக்கிறது.

யெஸ்டர்டே திரைப்படத்தை முதலில் ஆவணப்படமாக எடுக்கவே திட்டமிட்டிருக்கிறார் இயக்குநர் டாரல் ரூட்! ஆனால் இந்த விஷயம் மிகப்பெரிய அளவில் உலக மக்களை சென்றடைய வேண்டும் . எய்ட்ஸ் நோய் பற்றி மக்களுக்கு இன்னும் விழிப்புணர்ச்சி உண்டாக வேண்டும் என்பதற்காக அதைத் திரைப்படமாக எடுக்கும் முடிவுக்கு வந்திருக்கிறார். அவரது எண்ணத்துக்கும், எதிர்பார்ப்புக்கும் பல மடங்கு அதிகமாகவே எய்ட்ஸ் நோயின் கொடூரத்தைப் புரியவைத்துவிட்டது யெஸ்டர்டே திரைப்படம்! மட்டுமல்ல ஒரு படைப்பாளன் சமூகத்துக்கு ஆற்ற வேண்டிய கடமை எவ்விதமானது என்பதையும் தான்.



# உறுதி

பயணங்கள்
ஆபத்தானபோது
பயனிப்பவர்கள்
வீதியில் வந்த போது
நாங்களும்
பயணிக்க வேண்டிய தேவை
பயந்து நாங்கள்
பயணிக்காமல் விடவில்லை
பயணிக்கும் போதும்
உறுதியாக இருந்தோம்.
பயணத்தில் மடிய நேரிடலாம்
மடியும் போது
விடுதலையின் விதைகளாக
மடிவோம்.

அருட்பணி அன்ரன் ஸ்ரீபன்

# மிகவும் அழகான மனிதன்

சமீர் அபூ ஹவ்வாஷ்
தமிழில்: பாரிமைந்தன்

என் தந்தை எனக்காக
ஆனால் அவரை
அவர்கள் பார்த்தார்கள்.
ஓர் உடல்
வெறும் நிர்வாணமாய்
பூமியின் மீது.
ஒரு பச்சைக்கொடி கயிற்றால்
நிழலோடு கட்டப்பட்டிருந்ததாக,
அவர்கள் கூறினார்கள்.
"எனவே இவர் அஜாக்கிரதையாய்
இனிமேல்
இவ்வாறு தூங்கமாட்டாரென."
பின்னர் அழுதனர்,
இவ்வாறாக அவர்கள்
அவரைப் பகலில் கண்டார்கள்.
மிகவும் அழகான மனிதன்
பக்கவாட்டில்!
பக்கவாட்டில் மீன்களோடு.

# துணி உலர்த்தும் கொடி

துணி உலர்த்தும் கொடி.
அனைத்தும் அதை விட்டுவிட்டு
தன்னந்தனியே!
ஏன் அவர்கள்
குறைந்தது ஒரு
சிறு துண்டு துணியையாவது.
விட்டுவிட மறந்தார்கள்?



# கிறான் மரமும் கிளுவை வேலியும்

நிலவை மறைத்துப்
பெரும்படையாய் இறங்கும்
பனித்துளியை வழிமறித்து
இலை விரலில்
ஏந்தும் கிறான் மரம்.

ஊரெல்லாம் வெளிச்சமிட
நிலம் பிளந்து தலை நிமிர்த்திய
மின்கம்பம்
ஒளி சிந்த
மினுங்கும் வெள்ளியென.

உறையவைக்கும் குளிரெனினும்
எல்லா மரங்களும்
இலையுதிர்த்த பின்னாலும்
பனியுதிர்வுக்காய்க்
காத்திருக்கும் கிறான் இலைகள்
காதலுடன்-

என் வீட்டின் முன்னாலோ
வேலியென நட்ட
கிளுவை
பொன்வண்டு சுமந்து
கோடையிலும் பார்த்திருக்கும்
பிறை நிலவின் கதிர்பட்டுப்
பொன்னின் துகல்கள் என
மின்னித் தெரியும்.

கோடையிலும் இறவாத
கிளுவைகளாக
குளிரினிலும் தலைநிமிரும்
கிறான் மரமா
சிறந்ததென்று கேட்டாயோ?

துயரம் சுமந்த மனிதரின்
நினைவுகட்குத் துணையிருக்கும்
இயற்கையின் விதிகட்கு
விடையில்லை என்னிடம்.

இளவாலை
விஜயேந்திரன்



# திசைகள்

காலைச் சூரியனுக்கு
முகம் காட்டி நின்றால்
புற முதுகில் மேற்கிருக்கும்.

இடக்கைப்பக்கம் வடக்கு
வாடைக் காற்றுத் தழுவும்.

வலக்கைப்பக்கம் தெற்கு
சோழகம் பெயரும்.

வாடை சோழகம்
கச்சான், கொண்டல் என்றே
திசைகள் உணர்த்தும்
காற்றின் பெயர்கள்.

அன்றைக்கு அம்மா சொல்லிடும்
எளிமையில்
திசைகள் துலக்கமாய் இருக்கும்.

இப்போவெல்லாம் திசைகள்
எனக்குத் துலக்கமாயில்லை.

பெயர் சொல்லும்படியான
காற்றகளும் ஏதுமில்லை.

வீசுவது புயல் எனத் தெரியும்.
புயலுக்குண்டா திசை?
அதனிடை நான் இல்லாததால்
வெளியில் நின்ற படி
திசைகளைத் துலக்கும்
ஒரோர் தடவையும்
முயற்சியில் தோற்கிறேன்.

அவை தொலைந்திருக்குமோ?
ஏன் இந்தச் சந்தேகம்?
வடக்கிலிருந்து புறப்பட்டவன் நான்
என் நினைவு சொல்கிறது.

'தெற்கிலிருந்து வருகிறாய் நீ'
குளிர் வலயத்தில்
எதிர் கொள்பவர் சொல்கின்றனர்.

எங்கிருந்து வந்தேன்?
எத்திசையில் செல்கிறேன்?
என் விந்தணுவில் முளைத்தவையும்
குரல் எழுப்புகின்றன.
எத்திசையை முகங்கொள்வது?
எனக்கு சொல்லித்தர
அம்மாவுக்கு இலகாயிருந்தது.
என் குழந்தைகளுக்கு சொல்லித்தர
எனக்கோ முடியவில்லை.

அம்மாவின் எளிமை எனக்கில்லை.
ஒரே ஒரு தடவை
எழுவான் திசையை
யாரேனும் சுட்டுவீராயின்
சுடரும் விடியற் சூரியனுக்கு
முகம் காட்டி நிற்பேன்.
திசைகளைக் கண்டு கொள்வேன்.
குழந்தைகளுக்கும் அறிவிப்பேன்.

அரவிந்தன், கி.பி



# சிவப்புக் கப்பல்

ஈர விழிகள்
கடலை நோக்கும்
வருமா வராதா?
வரும் என்றால்
சற்று நிம்மதி
ஷெல்லடி குறையும்
வீதிகள் ஒழுங்கு படுத்தப்படும்
வைத்தியசாலையில்
காயமடைந்தோர்
தொகை குறையும்
எங்கும் பரபரப்பு
காலையில் வந்த கப்பல்
இரத்தக் கறைகளுடன்
மாலையில் மறையும்.

கப்பல் கண்ணைவிட்டு
மறையும் முன்
மீண்டும்
கொத்துக்குண்டுகள் விழும்
பல்குழல்கள் வெடிக்கும்
எறிகணைகள்
சாண்கணக்கில் பதம் பார்க்கும்.

சிவப்பு கப்பல் A9 பாதை பூட்டப்பட்ட பின் 2009 மாசி மாத நடுப்பகுதியிலிருந்து வைகாசிமாதம் ஆரம்பநாள் வரை ICRC துணையுடன் . மாத்தளன், வலைஞர்மடம், முள்ளிவாய்க்கால், கடற்கரையூடாககாயமடைந்தவர்களைஏற்றிச் செல்லும் சேவை ஒன்று நடைபெற்றது.

அருட்பணி அன்ரன் ஸ்ரீபன்

# பட்டாம் பூச்சி

யாழ். தர்மினி பத்மநாதன்

சென்றவாரத் தொடர்ச்சி...



காவியா மாணவர் படையணியில் தன்னை இணைத்த பின்பு தாயக வேட்கையில் தன்னை அர்ப்பணித்திருந்தாள். ராகவனும் பொறுப்பான வேலைகளில் இருந்தான். அவன்மீது காவியாவுக்கு ஈர்ப்பு அதிகமானது. இருவரின் பெற்றோர் சம்மதமின்றி கிடைத்த சந்தர்ப்பத்தில் அவர்க்குரிய உறவுகளின் முன்னிலையில் குடும்பமாகிக் கொண்டனர்.

"ப...வி..." தூரத்தே அவள் அப்பா கூப்பிடுவது மழை மேகத்தையும் தாண்டிக் கேட்டது.

"வரட்டாம் போ... இப்ப நீ போய்ப் பேச்சுவாங்கு"' என கிண்டல் அடித்தான் ராகவன். குறும்புத்தனத்துடன் அத்தையிடம் விடைபெற்று ஓடினாள் பவித்திரா.

இளம்சூட்டு நீரினால் தனது கால்களுக்கு டிற்றோல் போட்டு கால்களைக் கழுவித் துடைக்க மழையும் ஓய்ந்தது. கஞ்சியை குடித்துவிட்டுத் திண்ணையில் பாயைப் போட்டுப் படுத்து விட்டான் ராகவன்.

தனது அண்ணன் சுந்தரமூர்த்தியிடம் போயிட்டு வந்த மீனாட்சிக்கு மனம் நிறைய குளிர்ந்தது.

நாட்கள் மாதங்கள் ஆக ராகவன் வீட்டிற்கு ஆடிக்கும் அமாவாசைக்கும் தலை நீட்டிய பவித்திரா அடிக்கடி அவன் வீடுவர ஆரம்பித்தாள்.

அன்றும், அப்பா.. 'அம்மா எங்கப்பா?...' என்று பாடியவளுக்கு மிகுந்த மகிழ்ச்சியுடன்

"பிள்ளைண்டஅம்மாவரப்போறா... அப்புச்சாமி பிள்ளையிட்ட அம்மாவை போக சொல்லிட்டாராம்.." செல்லம் கொஞ்சினாள் மீனாட்சி.

எனக்கு நிறைய சொக்கிலேட்.. பிக்கா எல்லாம் கொண்டு வருவாவா? அச்சாச் சட்டை, சப்பாத்து, மாலை, குட்டி சயிக்கில் நிறைய பொட்டு... பென்சில், ஐ போன் எல்லாம் கொண்டு வருவாவா.

அம்மாட்ட சொல்லுவன் ஒரே என்னை அடிக்கிறனீங்கள், பேசிறனீங்கள் எண்டு சொல்லுவன். உங்களுக்கும் அடி வாங்கித் தருவன்" என செல்லம் கொஞ்சியவளை.

இறுகக் கட்டி அணைத்தபடி படுக்கையில் சரிந்தான் ராகவன். இசையாளுக்கு அடிப்பது தொடக்கம், திட்டுவது அவள் மீது கோபப்படுவது வரையும் நினைத்து நினைத்து அழுதான்.

ராகவன் போராளி குடும்பம் என்பதால் அவன் மீது நேசம் அதிகம் காவியாவுக்கு. காவியா மாணவர் படையணியில் தன்னை இணைத்த பின்பு தாயக வேட்கையில் தன்னை அர்ப்பணித்திருந்தாள். ராகவனும் பொறுப்பான வேலைகளில் இருந்தான். அவன்மீது காவியாவுக்கு ஈர்ப்பு அதிகமானது. இருவரின் பெற்றோர் சம்மதமின்றி கிடைத்த சந்தர்ப்பத்தில் அவர்க்குரிய உறவுகளின் முன்னிலையில் குடும்பமாகிக் கொண்டனர். காவியாவும் ராகவனும் தமக்கான பணிக்காக களத்தில் நிற்கவுமே அவர்களின் காலங்கள் நகர்ந்தது.

ஆயினும், ஆத்மார்த்த விதிப்படி காவியா தாய்மையுற்றாள். காலநகர்வில்....

## சிறுகதை

"பிள்ளையின்ட முகத்தை கூட ஒரு மாதம் தானே பார்த்தாய்.... அவள் அடிக்கடி...." அம்மா எங்க.....? அம்மா எங்க" என்று கேட்டு கேட்டு என்னை சாகடிக்கிறாள் காவியா... நான் என்ன செய்வன்...?

இங்க பார்.. ஆ.. இங்க என்ர ஒரு காலும் போட்டுது. போட்டுது..... ஒரு நேர சாப்பாட்டுக்கே வழி இல்லாம இப்ப கஷ்டப்படுறன்.. பார்... என்ற காலைப் பார்... கையைப் பார் எத்தினை காயம் பார் பார்.... பார்..... பார்.... ஆஆ.... அழுதான் ராகவன்...."

தம்பி... ரகு... ரகு... என்னய்யா?

"அம்மா.. அம்மா..." என்ர காவியா.... கதறியழுதான்.

பிள்ளையை சரிச்சு படுக்க விடு... எதுக்கு நெஞ்சிலையே படுக்க விட்டனீ.. உனக்கு.. ஏலாது எண்டு தெரியும்தானே.. எழுப்பி கொஞ்சத் தண்ணி குடி.... இந்தா எழும்பு அவனை மெல்ல எழுப்பி தண்ணீர்ச் செம்பைக் கொடுத்தாள் தாய். இருட்டுலகின் மூலையில் சிறிய குப்பிவிளக்கு கண் சிமிட்டியது. மழைக்கூதல் வேறு நடுங்கச் செய்தது. போர்வையை இழுத்துப்போர்த்தி விபூதி பூசி படுக்க விட்டாள்.

"அம்மா... அம்மா எப்ப வருவா....ப்பா..." தூங்கிக்கொண்டிருந்த இசையாள் உதடுகள் புலம்பிக் கொண்டிருந்தது

---

15 ஆம் பக்க தொடர்ச்சி

## அழிக்கப்பட்ட கிராமம்.....

போயிருந்தானுகள் என்னோட மகன்ட சவத்தை அடையாளம் காணமுடியல. இனி இங்க இருந்த எல்லாச் சவத்தையும் அடக்கம் பண்ணீட்டு வந்தம் என தனது இரு பிள்ளைகளையும் இரு வேறு காலங்களில் பறிகொடுத்த இராசம்மா என்ற மூதாட்டி அழுதழுதே வேதனையை கொட்டித் தீர்க்க முயன்றாள்.

1983 ஆம் ஆண்டு ஆடித்திங்கள் புல்லுமலைக்கிராமங்களின் பசு நிரைகள் கவர்ந்துகொள்ளப்பட்டன. வியர்த்துழைத்த சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. பல நாள் உடலுழைப்பில் கட்டிய வீடுகள் அனைத்தும் தீயிடப்பட்டன. சொத்துக்களை இழந்தாலும் மண்ணை இழக்கக் கூடாதென்ற உறுதியோடு எரிந்து போன சாம்பல்மேட்டில் எழுப்பிய வீடுகளை மீண்டும் 1984 ஆம் ஆண்டு தீயிட்டுக் கொழுத்தினார்கள். 300 வீடுகள் எரிந்தபோது மக்கள் மனங்களில் எழுத்த துயரத்தீயை யாரும் அணைக்க முற்பட வில்லை.


1985 ஆம் ஆண்டு, தைத்திங்கள், 4 ஆம் நாள் மூன்றாவது முறை கிராமத்துள் புகுந்த இராணுவத்தினர் அங்கிருந்த நில அளவையாளர் உட்பட ஏழு பேரைச் சுட்டுக்கொன்றதோடு மீண்டும் வீடுகள் கொழுத்தப்பட்டு சொத்துக்கள் கொள்ளையிடப்பட்டன. சொத்துக்களை அள்ளியெடுத்து வீடுகளை கொழுத்தியும் எழும்பி ஓடாத எமது மக்களை கொலைசெய்து மிரட்டும் படலம் தொடங்கியது. ஒருவாரம் கழித்து தைத்திங்கள் 10 ஆம் நாள் கோயிற் பூசகர் உட்பட ஒன்பதுபேரை சுட்டுக்கொன்றனர்.

1986 ஆம் ஆண்டு, கார்த்திகைத் திங்கள், 10 ஆம் நாள் கொலை, கொள்ளை, கற்பழிப்பு, தீவைப்பு என அகோர இனவெறியாட்டம் அரங்கேறியது. 103 தமிழர்கள்வெட்டியும்சுட்டும்கொல்லப்பட்டார்கள். 1987 இல் குளத்தில் மீன்பிடித்துக் கொண்டிருந்த 14 பேர் சுட்டுக்கொல்லப் பட்டார்கள். பெற்றுவளர்த்த பிள்ளைகளை இழந்து கட்டிக்காத்து வளர்த்த இளம்பெண் பிள்ளைகளை கண்ணுக்கு முன்னாலேயே பாலியல் வல்லுறவுக்குட்படுத்திக் கொன்ற கொடுமை சுமந்து நொந்திருந்த எமது மக்கள் 1990 ஆம் ஆண்டு, ஆடித்திங்கள், 09 ஆம் நாள் மீண்டும் நடந்த கொடுமையை தாங்கமுடியாது கிராமத்தை விட்டு வெளியேறினார்கள். பால்மணம் மாறாத குழந்தைகள் கிழித்தெறியப்பட்டு கிடந்த காட்சியைக் கண்டு திசைமாறி ஓடிய எமது மக்கள், அந்த அழிகிய வளமிகு பூமிக்கு இன்றுவரை திரும்பவில்லை.

வெளிக்காககண்டிக்குளம், புல்லுமலைக்குளம், பனிச்சையடிக் குளம் கல்பொத்தனைக் குளம், 40 ஏக்கர்குளம் என்றெல்லாம் நீர்வளம் குன்றாத குளங்கள் நிறைந்த இப்பிரதேசத்தில் சிங்கள இராணுவத்தினரும் சிங்களக் காடையர்களும் விரட்டியடிக்கப்பட்டாலும் எமது மக்கள் வாழ்வை இழந்து புதர்மண்டிக் கிடக்கின்றது. அழிவின் சின்னங்களாய் இந்து ஆலயமும், கிறிஸ்தவ தேவாலயமும், பாடசாலையும் புதர்மூடிக் கிடக்கின்றன. 139 விதவைப் பெண்கள் வாழும் வகையின்றி ஏதிலிகளாய் வாழ்கின்றனர்.




# வாசகர் கருத்து



**"இது நம்தேசம்" நம் தேசக் கருத்துக்களை தாங்கி வரவேண்டும்.**

தமிழர்களின் இன்னொரு குரலாக ஒலித்துக் கொண்டிருக்கும் இது நம்தேசத்திற்கு எனது வணக்கங்கள்.

இன்று அனைவரின் கைகளிலும் உன்னைக் காண்பதையிட்டு நான் மகிழ்வடைகிறேன் ஆனாலும் இன்னும் மீதமுள்ளவர்களின் கைகளிலும் நீ தவள "இது நம் தேசம்" என்று உனது நாமத்தில் மட்டுமே இருக்காது. நீ சுமந்து வரும் கருத்துக்கள், ஆக்கங்கள் எம் தேசத் தேவையாக, எம் மொழி சார்ந்தவையாக இருக்க வேண்டுகிறேன்.

"தொடரட்டும் உன் சேவை"

கு.சக்தீனா
யாழ்.பல்கலைக்கழகம்

# நூல் அறிமுகம்

## "ஈழத்து நவீன ஓவியம் எஸ். ஆர். கனகசபை முதல் மாற்கு வரை"

**ஆசிரியர்** – சுந்தரம்பிள்ளை சிவரெத்தினம்.
**வெளியீடு** - குமரன் புத்தக இல்லம், இலங்கை.
**விலை** - 350.00



ஈழத்துத் தமிழரிடையே நவீன ஓவியக்கலையும் பாரம்பரிய கலைவனப்புணர்வும் ,எஸ்.ஆர் கனக சபை முதல் மாற்கு வரையுள்ள ஈழத்துத் தமிழ் ஓவியர்களின் படைப்புக்களை ஜோர்ஜ் கீற்றினுடைய படைப்புக்களோடு ஒருபுடை ஒப்புநோக்கி மேற்கொள்ளப் படும் கலை வரலாற்று விமர்சன நிலை நின்ற ஓர் அறிமுக ஆய்வு எனும் தலைப்பில் செய்யப்பட்ட ஆய்வே நூல்வடிவாக மாற்றம்பெற்று "ஈழத்து நவீன ஓவியம்"எஸ்.ஆர்.கனகசபை முதல் மாற்கு வரை எனும் தலைப்பில் வெளிவந்திருக்கின்றது.

ஈழத்தமிழ் மக்களின் பண்பாட்டு உருவாக்கத்தில் கலைகள் முக்கியமானஇடத்தினைப்பெறுகின்றன. இலங்கையின் நவீன கால ஓவிய மரபை இந்திய,உலக நவீனத்துவ வட்டத்துக்குள் கொண்டு வந்த கீற்றுனுடைய ஓவியங்களுடன் ஒப்பு நோக்கி மிகத் துல்லியமாக ஈழத்து ஓவியர்களைப்பற்றி எடுத்துப் பேசுகின்றது.

அதுமட்டுமல்லாது இந்நூல் இலங்கை நவீன ஓவிய மரபு பற்றிப் பேசுகின்றது. அம்மரபில் ஜோர்ஜ் கீற்றின் இடத்தை நிர்ணயம் செய்து ஜோர்ஜ் கீற்றின் பின்புலத்தில் ஈழத்தமிழ் ஓவியங்கள் பற்றிக் கூறி அவ் ஓவியங்கள் பற்றி விவாதிக்கின்றது.

பின்வரும் அத்தியாயங்களைக் கொண்ட இந்நூல் ஒரு வகையில் வரலாற்று அணுகுமுறைகளுக்கூடாக இலங்கைத் தமிழர்களிடையே உள்ள ஓவிய மரபினை அறிமுகம் செய்வதாக அமைந்துள்ளது.அதாவது பண்பாட்டுப் பின்புலம்,இலங்கையின் நவீனத்துவ ஓவிய மரபின் எழுச்சி, இலங்கையின் நவீன ஓவிய மரபும் அதில் ஆஜோர்ஜ் கீற்றின் இடமும்,ஈழத்து தமிழ் ஓவியர்களிடையே நவீனத்துவம்,ஜோர்ஜ் கீற்றின் பின்புலத்தில் ஈழத்தவர் ஓவியங்கள், ஒப்பாய்வின் அடியாக காணப்படத்தக்க செல்நெறிகள் போன்ற அத்தியாயங்களோடு இந்நூல் காணப்படுகின்றது.

–தமிழ்–

(6 ஆம் பக்க தொடர்ச்சி)

(மகிந்தரின்........)

மூன்றாவது அடித்தள மக்களுக்கு சலுகைகளை வழங்குவது. கடந்த வரவு செலவுத்திட்டம் இச்சலுகைகளை வழங்கியிருந்தது. மகிந்தரின் பெரும்பலமாக இருக்கின்ற அடித்தள மக்களை எப்படியாவது அரித்தெடுக்க இதன்மூலம் முயற்சிக்கப்படுகின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்கும் இந்த மக்கள் மத்தியில் பெரிய அடித்தளமில்லை. சஜித் பிரேமதாசா மட்டும் சிறிய அடித்தளங்களைக் கொண்டிருக்கின்றார்.

நான்காவது தமிழ்த்தேசிய எழுச்சியைத் தடைசெய்வது கூட்டமைப்பை அரசாங்கத்தின் பங்காளிக் கட்சியாக்கியதும் சுதந்திர தினத்தில் சம்பந்தன், சுமந்திரன் பங்கேற்கச் செய்ததும் இதற்காகத் தான். சிங்களத் தேசிய எழுச்சிக்கு சர்வதேச விசாரணை தூண்டுதலாக இருக்கின்றமையினால் அதனையும் நீர்ந்துப்போகச் செய்துள்ளது. உள்ளக விசாரணையாக மாற்றியுள்ளது வெளிப்படையான இந்திய அழுத்தமும் இல்லாமல் செய்யப்பட்டுள்ளது.

சிங்கள மக்களுக்கு அபூத்தங்கள் கண்ணுக்கு தெரியக்கூடியதாக இருக்க வேண்டும். அப்போது தான் அவர்கள் சிங்கள தேசிய வாதத்தின் பக்கம் அணிதிரள்வார்கள். தற்போது மேற்குலகும், இந்தியாவும் மைத்திரி அரசாங்கத்தை பாதுகாப்பதில் கவனமாக இருப்பதால் கண்ணுக்குத் தெரியக்கூடிய அழுத்தங்களை அவை மேற்கொள்ளப்போவதில்லை.

மேற்குலகத்திற்கு இன்னோர் சாதகமான அம்சம் ஹெலஉறுமய அரச பங்காளிக் கட்சியாக இருப்பதுதான். சிங்கள இனவாத அமைப்புக்களில் வலுவான சித்தாந்தப் பின்புலத்தைக் கொண்டிருக்கும் அமைப்பு ஹெலஉறுமயதான். ஹெல உருமய அரசாங்கத்துடன் இருக்கும்போது சிங்களத் தேசியவாத இயக்கங்களுக்கு அதனை மீறி சிங்கள மக்களை அணிதிரட்டுவது கடினமாக இருக்கும்.

இன்னும் ஒரு சில மாதங்களுக்குள் சிங்கள தேசியவாத எழுச்சியை தெளிவாக அடையாளம் காணக்கூடிய நிலை உருவா-கலாம். ●

(14 ஆம் பக்க தொடர்ச்சி)

(வடமாகாணத்தின்.......)

அது தமிழ் மக்களுக்கு ஆரோக்கியமாக அமையுமா என்பது அடுத்த கேள்வியாகும்.

இந்த விசாரணை அரைகுறையான தீர்வைத் தருமாயின் அதனை யாரும் நிராகரிக்க முடியாது. ஏற்றுக் கொண்டு இந்த அரசுடன் கூட்டுச் சேர்ந்து வாழ்வது தான் முடிவாகும். இந்த அரசும் பாராளுமன்ற தேர்தலுக்குப் பின் சீனாவை கைவிடுமா அல்லது தொடர்ந்து பேணுமா என்பது தான் இந்த ஆறுமாத கால இடைவெளியின் தந்திரேபாயமாகும்.அப்போதுதான் முடிவுகள் தெரியவரும். முன்னைய அரசை வீட்டுக்கு விரட்டியதென்பது தமிழ் மக்களின் பலம் தான். அது முற்றிலும் தவறானதல்ல. அதனால் ஏதே ஒரு சிறு நன்மையும் இலங்கைக்கு எட்டியுள்ளது. ●

(13 ஆம் பக்க தொடர்ச்சி)

(தமிழ்த்தேசிய...)

அதேநேரம் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் செயற்பாடுகள் அவர்களுடைய கொள்கைகள் தொடர்பிலும் இருட்டடிப்புச் செய்து வருகின்றார்கள். அவர்களுடைய கொள்கை நிலைப்பாடுகளை மக்கள் தெரிந்து கொள்வதற்கு அவர்கள் ஒரு போதும் இடமளிப்பதில்லை. அவர்கள் மேற்கொள்ளும் செயற்பாடுகளை மக்கள் அறிந்து கொள்வதற்கு அவர்கள் ஒருபோதும் இடமளிப்பதில்லை. அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மேற்கொள்கின்ற தமிழ்த்தேசியத்திற்கு எதிரான செற்பாடுகளை அவர்கள் ஒருபோதும் பத்திரிகைகளில் வெளியிடுவதில்லை. கூட்டமைப்பினர் பத்திரிகைகள் ஊடாக அறிக்கைகளை விட்டு ஆவேசமாகக் கூட்டங்களை நடாத்தி இன்னும் 100 வருடத்திற்கு அரசியலில் நிலைத்து நிற்கக் கூடிய ஆற்றல் அவர்களுக்கு இருக்கிறது. இதனால் அவர்களை இந்த அரசியல் அரங்கிலிருந்து வெளியேற்றுவதற்கு மக்கள் முன்வர வேண்டும். அனைவரும் ஒன்றிணைந்து மகிந்தவை எப்படி வெளியேற்றினோமோ அவ்வாறு இவர்களையும் வெளியேற்ற ஒன்று பட்டுச் செயற்படவேண்டும். ●

(07 ஆம் பக்க தொடர்ச்சி)


(கல்வயல் கனகசிங்கம்....)

அந்த வளங்கள் இல்லாமல் போனதற்காக எந்தவொரு தமிழ்ச் சனமும் வருத்தப்பட்டதாக நான் அறியவில்லை பாருங்கோ.

இதுக்கப்பால் கூத்தமைப்பின்ர இளம் சமூகமாவது நல்ல நோக்கத்தோட உருவாகி வருமெண்டு பார்த்தால், அதுவோ, பார் பக்கம் சொல்லுறமாதிரி 'இயமனுக்கே சம்பல்" போட்டவங்களாக வந்திருக்கிறாங்கள்.ஆளாளுக்கு குடும்பம், குட்டியோட சுத்தித்திரிய சபை வாகனம், எரிபொருட்செலவு, மாடமாளிகைகள் எண்டு தூள் பறக்கிறாங்கள்.

இன்னொரு பக்கம், வாக்களித்து கதிரையில இருத்தின சனத்தை கழிவு ஒயில் தண்ணீர் கொடுத்து கொல்ல இந்த கும்பல்கள் முயற்சிக்குது. தாற தண்ணீர் சரியில்லை ஐயா வெண்டு முறைப்பாடு செய்யப்போனால் சட்டையை பிடிச்சு சண்டித்தனமும் செய்யினம். அதுவும் புனர்வாழ்வு முகாமிலிருந்து இப்பதான் வீடு வந்த 60 வயதான அந்த மூத்த போராளியின்ரை சட்டையை பிடிச்சு சண்டித்தனம் .

இன்னொருத்தனோ வேலை வாங்கித் தாறனெண்டு, ஊர் பெடியளிட்டையே இலட்சக்கணக்கில சுருட்டிப் போட்டானாம். ஆளாளுக்கு பங்களாக்கள் கட்டிக்கொண்டு இருக்கிறாங்கள். பெரியவங்கள் மேலால சூட்கேசுகளை வாங்கித் தொலைக்க இவனுங்களோ கீழால டீல் முடிக்கிறாங்கள். கடைசியில என்ன வாக்களிச்ச சனத்திற்கு வாய்க்கரிசி மட்டும் தான் பாருங்கோ ●



திரு. இராஜகோன் ஹரிகரன்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னனணின்
திருகோணமலை மாவட்ட அமைப்பாளர்



திரு. இன்னாசிமுத்து சத்தியசீலன்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
இளைஞர் அணித் தலைவர்




திரு. தர்மலிங்கம் சுரேஸ்
தமிழ்த் தேசிய மக்கள் முன்னனணின்
மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர்



திரு. செல்லையா இராசையா
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்
அம்பாறை மாவட்ட அமைப்பாளர்


தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி மற்றும் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் கட்சிகளின் வருடாந்த மாநாடு 28.02.2015 அன்று நடைபெற்றது. நிகழ்வில் உரையாற்றியவர்களையும், கலந்து கொண்டவர்களில் ஒரு தொகுதியினரையும் படத்தில் காணலாம்.



திருமதி. விவேகானந்தன் இந்திராணி
தமிழ்த் தேசிய மக்கள் முன்னனணியின்
முல்லைத்தீவு மாவட்ட அமைப்பாளர்



திரு. இ. எ. ஆனந்தராஜா
அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் தலைவர்,
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் உப தலைவர்



சிறப்பு விருந்தினர்
திரு. விஸ்வலிங்கம் திருக்குமாரன்
சட்டத்தரணி



திரு. சிவகுரு இளங்கோ
தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின்
பிரச்சார செயலாளர்.






திரு. அ. யோகேஸ்வரன்
தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின்
கிளிநொச்சி மாவட்ட செயலாளர்







ஐ.நா மனித உரிமை பேரவையின் போர்க்குற்ற விசாரணை அறிக்கை பிற்போடப்பட்டதை கண்டித்து சென்னையிலும், லண்டனிலும் தமிழர்கள் போராட்டம் நடத்தினர். இதில் மேற்படி அறிக்கை பிற்போடுவதற்கு காரணமானவர்கள் என குற்றஞ்சாட்டி தமிழ்த் தேசியக் கூட்டமைபின் தலைவர் இரா.சம்பந்தன், மற்றும் தேசியப் பட்டியல் நாடளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஆகியோரின் உருவப்படங்களும் எரிக்கப்பட்டன.

**இது நம் தேசம் வார இதழாக வெளிவரத்தொடங்கியுள்ளது என்பதை வாசகர்களுக்கு அறியத் தருவதில் மகிழ்வடைகின்றோம்.**
**வாசகர்களே...! உங்கள் கவிதைகள், கட்டுரைகள், சிறுகதைகள், விமர்சனங்கள் போன்றவற்றை எங்களுக்கு அனுப்புங்கள்**
**அனுப்பவேண்டிய முகவரி: இல. 43, 3 ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம்.**

இவ்விதழ் இல. 43, 03ஆம் குறுக்குத்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியைச் சேர்ந்த செல்வராசா கஜேந்திரன் அவர்களால் ஜெயஸ்ரீ பிறிண்டேஸ் (இல.83, கல்லூரி வீதி, நீராவியடி) இல் 08.03.2015 அன்று அச்சிட்டு வெளியிடப்பட்டது.